
கல்கி

கோவை மாவட்டத்தில்
கல்கி — II

KALKI 23.11.86 ரூ.1.50




"லக்ஸ். இதன் மென்மைமிக்க புதுமணம் மனங் கவருகிறது" என்கிறார் ராதிகா.
''நான் ஒரு நடிகை என்பதால், எனக்குத் தேவை, எனது மேனியெழிலுக்கு லக்ஸ் தரும் பரிசுத்தமான, மென்மை பராமரிப்பு. அழகான எதையுமே விரும்பும், நடனத்தில் பற்றுள்ள நான் லக்ஸ் தரும் மென்மைமிக்க புது மணத்தில் மனமயங்குவது இயல்புதானே!'' என்கிறார் ராதிகா.
NEW
Lux
நேர்த்தியான புது மணம்
புதிய
லக்ஸ்—சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப்.
இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு.

ராதாரவி பெற்ற வெற்றியின் பின்னணியில்...

பரபரப்பாய் நடந்து முடிந்த நடிகர் சங்கத் தேர்தலில், ஐசரிவேலனைத் தோற்கடித்துத் தலைவராகியுள்ளார் ராதாரவி. இதன் பின்னணியில் நடந்தவைகளைத் துப்பறிந்து தருகிறார் நமது நிருபர்:





சங்கத் தேர்தலை எஸ்.எஸ்.ஆர். ஒத்தி வைத்துக் கொண்டே வர, உறுப்பினர்கள் இதை எதிர்க்க, ஒருவழியாய்த் தேர்தல் தேதி நிர்ணயிக்கப்பட்டது. ஆனாலும் உறுப்பினர் ஒருவர் தமக்கு ஓட்டு உரிமை இருந்தும் ஓட்டளிக்கத் தகுதியுள்ளோர் பட்டியலில் தமது பெயர் இல்லை என்பதால் கோர்ட்டுக்குப் போக, தேர்தல் நின்று போனது. இது நடந்தது மார்ச் மாதத்தில். பிறகு நீதிமன்றமே தேர்தல் நடத்த நாளையும் (நவம்பர் 9) மேற்பார்வையிட இரு நபர் குழுவையும் நியமித்தது. இக்குழுவில் சங்கத்தின் சார்பாய் எஸ்.வி. சகஸ்ரநாமமும், கோர்ட் சார்பில் வக்கீல் ராமானுஜமும் இடம் பெற்றனர்.

செயலாளர், பொருளாளர், இருபத்தி நாலு கமிட்டி உறுப்பினர்கள் என்று பல பொறுப்புகளுக்கும் தேர்தல் நடந்தாலும், பரபரப்பாய்ப் பேசப்பட்டதென்னவோ தலைவர் பதவிப் போட்டி மட்டுமே.

அங்கத்தினரிடையே எஸ்.எஸ். ஆருக்குப் பரவலான எதிர்ப்பு இருந்தது. ஐசரிவேலன்

இந்தப் பதவிக்கு ஆசைப்பட்டு, தேர்தலில் குதிக்க முடிவு செய்தார். எப்படியும் ஜெயித்து விடலாம் என்று கணக்குப் போட்டார்.

அங்கத்தினர்களின் பரவலான அதிருப்திக்கு முக்கிய காரணமாய்ச் சொல்லப்படுகிற விஷயம் நடிகர்களுக்கான வீடு ஒதுக்கீடு. சங்க உறுப்பினர்களில் ஏழை நடிக, நடிகையருக்குச் சுமார் 350 வீட்டு வசதி வாரிய வீடுகளை ஒதுக்கித்தர அரசு முடிவு செய்தது. சங்கத்தின் இடைவிடாத கோரிக்கைகளுக்குப் பின்தான் இந்த முடிவு ஏற்பட்டது. ஆனால் வீடு ஒதுக்குவதில் அ. தி. மு. க. வைச் சேர்ந்தவர்களுக்குத்தான் முன்னுரிமை தரப்பட்டது. அ. தி. மு. க. அல்லாதவர்கள் அ.தி.மு.க.வில் சேரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இதனால் பலருக்குக் கோபமும் தாபமும் ஏற்பட்டது. ஒருநாள், 'ஏழை நடிகர்களுக்கு எம். ஜி. ஆர். தலைமையில் வீடு வழங்கும் விழா' என்று எல்லா உறுப்பினருக்கும் அழைப்பு வந்தது. அப்போதுதான் தெரிய வந்தது, வீடுகள் இருக்குமிடம் அண்ணா நகருக்கு அப்பால் உள்ள திருமங்கலத்தில் என்று. இவர்களோ தினப்படி ஜீவனத்துக்கே அல்லாடும் நடிக நடிகையர்கள். கோடம்பாக்கத்தில் ஸ்டுடியோக்களும், திருமங்கலத்தில் வீடுகளும் இருந்தால் வசதிப்படுமா? பலருக்கு வீடுகளை ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லை. மேலும் உடனடியாக ரூபாய் ஐயாயிரம் தந்து வீட்டைத் தம் பெயரில் பதிவு செய்து கொள்ள அவர்களுக்கு வசதியுமில்லை. இது ஒருபுறமிருக்க, விழா அழைப்பிதழில் எம். ஜி. ஆர். வழங்குவதாய்ப் போடப்பட்டிருந்தாலும் எம். ஜி. ஆர் அன்று அம்பிகா, ராதாவுக்கு விருது தரும் விழாவுக்குப் போய்விட, இங்கே விழா அம்போ! இது ஏழை நடிகரைக் கடுப்படையச் செய்துவிட்டது.

ஐசரிவேலன், தேர்தலுக்கு முன், ''நான் வீடுகளை வழங்க ஏற்பாடுகள் செய்துவிட்டேன்; எனக்கு வாக்களியுங்கள்'' என்று பிரசாரம் செய்தார். குடிசை மாற்று வாரியத் தலைவர் அங்கமுத்துவை (முன்னாள் ஆர்ட் டைரக்டர்) வீடு வழங்க நடவடிக்கை எடுப்பதாய் ஒரு கடிதமெழுதச் செய்து, அதன் நகல்களை எல்லோருக்கும் அனுப்பி வைத்தார். ஆனாலும் இதைப் பல உறுப்பினர்கள் நம்பவில்லை.

இதற்கிடையில், சினிமா டெக்னீஷியன்கள் யூனியனில் ராதாரவி தலைவர் பொறுப்பேற்றபின் ஊதிய உயர்வு பெற்றுத் தந்தது கண்டு, நடிகர் சங்கத்துக்கும் அவரையே தலைவராக்குவது என்று ஒரு கோஷ்டி முடிவு செய்து, அவரை அணுக, ராதாரவியும் தேர்தலுக்கு நிற்க ஒப்புக் கொண்டார். அவருக்கு சிவாஜியின் முழு சப்போர்ட்.

நடிகர் சங்கத்துக்குச் சென்னை தவிர, புதுக்கோட்டை, மதுரை போன்ற வெளியூர்களிலும் உறுப்பினர்கள் உண்டு. அவர்கள் ஆதரவை ஐசரிவேலனுக்குப் பெறுவதற்காகவே எஸ். எஸ். ஆர்., அ.தி.மு.க.வில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இதற்கு முன்பே ராதாரவியின் ஆட்கள் வெளியூர்களில் ரவுண்டு அடித்து எல்லோரையும் சந்தித்துப் பேசி விட்டார்கள்.


தேர்தல்தினத்தன்று நடிகர் சங்கக் கட்டடத்தில் சைதை துரைசாமி, ஜேப்பியார், சமரசம் எல்லோரும் வரிசையாய் நின்று ஐசரிக்கு வோட்டு சேகரிக்க, மறுபுறம் பிரபு, பாண்டியன், விஜயகாந்த், எஸ்.எஸ். சந்திரன், சந்திரசேகர் என்று ஒரு நடிகர் பட்டாளம் ராதாரவிக்கு வோட்டு சேகரிக்க, ஒரே பரபரப்பு. நடிகர்கள், வரும் ஒவ்வொருவரையும் 'அண்ணே, அம்மா, அக்கா, தங்கச்சி' என்று முகத்தைப் பிடித்துக் கொஞ்சியும், கெஞ்சியும் வோட்டுக் கேட்டனர். எதிர்க் கோஷ்டி, ''என்னய்யா! பொம்பளைங்களைத் தொட்டுத் தொட்டு வோட்டு கேக்கறீங்க?'' என்று கோபமாய் வினவ, ''நாங்க எல்லாம் நடிக்கிறவங்க; அப்படித்தான் தொட்டுக்குவோம்! நீ யாரு கேட்க?'' என்று எதிர்க் கேள்வி பிறக்க, ஒரே தமாஷ்!

பிற்பகலில், திடீரென, ''எம். ஜி. ஆர். வருகிறார், வோட்டுப் போட'' என்று வதந்தி பரப்பப்பட்டது. போலீஸ்காரர்கள் குவிக்கப்பட்டனர். இது மனோரீதியில், ஐசரி எதிர்ப்பாளர்களிடையே ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கணக்குப் போட்டார்களோ என்னவோ? ஆனால் எம். ஜி. ஆர். அன்றைய தினம் டெல்லியில் இருப்பது எல்லோருக்கும் தெரிந்திருந்ததால் கணக்கு பிசகி விட்டது.


மறுநாள் வோட்டு எண்ணிக்கை. ராதாரவிக்கு 598 வோட்டுக்கள். ஐசரிவேலனுக்கு 349 வோட்டுக்கள். வோட்டு எண்ணிக்கை முடியுமுன்பே தாம் தோற்பது உறுதி என்று தெரிந்த ஐசரிவேலன், ராதாரவியிடம் வந்து, ''முடிவு வெளியானா கலாட்டா ஆயிடும்; என்னைப் பத்திரமா கொண்டுபோய் வீட்ல விட்டுடு'' என்று கேட்டுக் கொண்டதன் பேரில், ராதாரவி, ஐசரிவேலனை அவர் வீட்டிலே கொண்டுபோய் விட்டுத் திரும்பினார்! முடிவு வெளியானதும் ராதாரவி நேரே சிவாஜி வீட்டுக்குப் போய் அவருக்கு மாலை அணிவித்தார்.

ஸ்டேட் பாங்கில் கடன் வாங்கிக் கட்டப்பட்டது நடிகர் சங்கக் கட்டடம். அசல், வட்டி எல்லாமாய்ச் சேர்ந்து 42 லட்சம் வரை பாங்கிற்குக் கடன் பாக்கி இருக்கிறதாம். புதுத் தலைவர் ராதாரவி, மாவட்டம் தோறும் கலை நிகழ்ச்சிகள் நடத்தி நிதி வசூல் செய்து கடனை அடைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

—மௌனஷ்மி



ஓர் ஆள் ஒரு வேலையைச் செய்ய ஒருநாள் ஆகுமென்றால் நாலு பேர் அதே வேலையைச் செய்ய நாலு நாளாகும்!





அதிகாரிகளையே மிரட்டும் அதிகாரி!

பரம்பிக்குளம் — ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டம்

தமிழகத்தையும் கேரளத்தையும் பிரிக்கும் மேற்குத் தொடர்ச்சிமலைகளில் பெய்யும் மழைத் தண்ணீரைச் சேமித்து, விநியோகிக்கப் போடப்பட்ட அற்புதமான திட்டம்தான் இது. இதில் பரம்பிக்குளம் என்னும் அணை கேரள எல்லையில் இருக்கிறது. அங்கிருந்துதான் தமிழக எல்லையில் உள்ள ஆளியாறு அணைக்குத் தண்ணீர் வருகிறது. அங்கிருந்து காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணையை அடைகிறது. அதிலிருந்துதான் ஆரம்பிக்கிறதுபரம்பிக்குளம் மெயின் கால்வாய். திட்டம் ஆரம்பித்த போது 1.25 லட்சம் ஏக்கர்களுக்குதான் பாசன வசதி என்று நிர்ணயித்தார்கள். இப்போது 3.50 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கடைமடைப் பகுதி காங்கேயத்தில் (100 கி.மீ.) இருக்கிறது என்றால்பார்த்துக்கொள்ளுங்கள்.

இதன் பாசனத்தில்தான் இப்போது ஒரு பிரச்னை ...

"எங்கள் மடையில் தண்ணீர் விடப்படுவதில்லை. அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்கள் நாசமாகிக் கொண்டிருக்கின்றன. உடனடியாக ஆவன செய்யுங்கள்!'' என்று பரம்பிக்குளம் — ஆளியாறு திட்ட அலுவலகத்திற்கு ஏராளமான புகார்கள் வந்து குவிகின்றன. பாரமடையூர், நல்லூர், தொண்டாமுத்தூர், கஞ்சம்பட்டி, ஏ. நாகூர், புங்கமுத்தூர் போன்ற ஊர்களிலிருந்து இப்படி சோகமான கோரிக்கைகள் வர, பொள்ளாச்சியிலிருக்கும் மேலதிகாரிகள் ஒன்றும் புரியாமல் திண்டாடுகிறார்கள். 'ஏற்கெனவே விவசாயிகளுடன் பேசி, முறை வைத்துத் தானே பாசனத்திற்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறோம். அதுவும் எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் விடுவோம் என்று முன்கூட்டியே அறிவித்து விட்டுத்தானே விடுகிறோம். அப்படியிருக்கும்போது இப்படிப்பட்ட புகார்கள் என்றால் அதற்கு யார் பொறுப்பு?' என்று யோசிக்கிறார்கள்.

''உதவி செயற்பொறியாளர் மொய்தீன் ஷா என்பவர்தான் தமக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்குக் கூடத் தெரியாமல், கடைநிலை ஊழியரான ரங்கசாமி என்பவருடன் சேர்ந்து கொண்டு, திட்டமிட்டபடி தண்ணீர் விடாமல், லஞ்சம் பெற்றுக் கொண்டு வேறு கால்வாய்களுக்குத் தண்ணீர் திறந்து விடுகிறார். நாங்களும் லஞ்சம் கொடுத்தால் தான் தண்ணீர் விடுவேன் என்கிறார். இதைப் பற்றி விசாரிக்க வேண்டும்'' என்று ஏராளமான விவசாயிகள் குற்றம் சுமத்துகிறார்கள். எனவே, 2.5.86 அன்று கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் விசாரணை

யும் நடக்கிறது.

இந்த விசாரணையின் அடிப்படையில் கடந்த 1.6.86 முதல் 5.6.86 வரை இந்தத் திட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில், அதிகாரிகள் குழு ஒன்று பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்து, நேரடியாகவே விவசாயிகளிடம் விசாரணை செய்கிறது. விசாரித்ததில், விவசாயிகள் குற்றம் சாட்டியது போலவே தண்ணீர் திறந்து விடுவதில் முறைகேடுகள் நடந்திருப்பது பட்டவர்த்தனமாகத் தெரிய வருகிறது. எனவே, சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் மொய்தீன் ஷா மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது, கண்காணிப்புப் பொறியாளருக்கு.

அதன் விளைவாகப் பணியாளர் ரங்கசாமி, பரம்பிக்குளத்துக்கு மாற்றப்படுகிறார். மொய்தீன் ஷாவை மாற்றக் கண்காணிப்புப் பொறியாளருக்கு அதிகாரம் இல்லாததால், அவரை வேறு இடத்துக்கு மாற்றும் பொறுப்பைமேலதிகாரிகளிடம்ஒப்படைத்து விடுகிறார், கண்காணிப்புப் பொறியாளர். சரி; விஷயம் முடிந்துவிட்டது. அப்புறம் விவசாயிகளுக்குத் தண்ணீர் வந்திருக்கும்; பிரச்னை தீர்ந்தது என்கிறீர்களா? அதுதான் இல்லை!

இந்த மொய்தீன் ஷா, தாம் நீர்ப்பாசன மந்திரி யூசுப்பின் உறவினர் என்றும் நெருக்கமானவர் என்றும் சொல்லி மற்றவர்களை மிரட்டினாராம்! அதுமட்டுமல்லாமல், பொறியாளர்கள் மத்தியிலேயே டிப்ளமா பொறியாளர்கள், டிகிரி வாங்கிய பொறியாளர்கள் என்ற பிரிவு வேறு. இதனால் இந்த இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் பார்க்கும் பார்வையே வேறு. இந்நிலையில் மொய்தீன் ஷா டிகிரி வாங்கிய பொறியாளர். விசாரணை நடத்திய கண்காணிப்புப் பொறியாளரோ டிப்ளமா வாங்கியவர். பிறகு கேட்கவா வேண்டும்! ஆக, இதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு மொய்தீன் ஷா உதவி செயற் பொறியாளராகவே தொடர்ந்து பணிபுரிகிறார். பணியாளர் ரங்கசாமி கொஞ்ச நாட்கள் லீவு போட்டுவிட்டு மாற்றல் உத்தரவை ரத்து செய்ய வைத்துப் பழைய படி இங்கேயே பணியைத் தொடர்கிறார்!

"மாவட்டக் கலெக்டர் தலையிட்டும் இவர்களை மாற்ற முடியவில்லை. காரணம், இந்த மொய்தீன் ஷா மாஜி அமைச்சர் யூசுப்புக்கு வேண்டியவர் என்பதுதான்" என்கிறார்கள் மக்கள். பலரையும் விசாரித்தபோது இதே கருத்தைத்தான் வெளியிட்டனர். யூசுப்புக்குத்தான் பதவி பறிபோய் விட்டதே! இனியாவது தைரியமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு விவசாயிகள் பயனடைவார்களா என்று பார்ப்போம்!

— ப்ரியன்

அடுத்த இதழில்...



இவரால் பதவி இழந்தவர்கள் என்ன செய்கிறார்கள்....?



'இன்றைய சமூகத்திற்கு மதம் என்ன செய்கிறது?'

— சிருங்கேரி சுவாமிகள் பேட்டி



பரிதாபக் கழகம் பிரமாதக் கழகமா?



● சிலம்பண்ணன்

நமது மதிப்பிற்குரிய பெரியவர்களின் பெயர்களை பொது நிறுவனங்கள், மாவட்டங்கள், தெருக்கள் இவற்றுக்குச் சூட்டுவதில் ஆபத்து இருக்கிறது. ''நேரு தெருவில் ஒரே நாற்றம்'' என்றோ, ''அண்ணா மாவட்டத்தில் பஞ்சம்'' என்றோ கூற நேர்ந்தால் மனம் சங்கடப்படுகிறது. அதுபோலத்தான் இன்று பாரதியார் பெயரில் அமைந்த பல்கலைக்கழகத்தைப் ''பரிதாபக் கழகம்'' என்று கூற நேரும்போது உள்ளம் வேதனைப்படுகிறது.

பாரதியார் எத்தனை உயர்ந்த லட்சியங்களை வைத்திருந்தார்! நம் நாடும் தமிழகமும் எப்படியெல்லாம் உயர வேண்டும் என்று கனவு கண்டார்! அதையெல்லாம் மெய்

யாக்கிக் காட்டுகிற ஆர்வம் இன்றி, 'இங்கே குற்றம்,' 'அங்கே தவறு' என்று ஒருவரைப் பற்றி ஒருவர் புகார் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளுக்குள் இந்தப் புகார்ப் படலம் விசுவரூபம் எடுத்திருக்கிறது.

மருதமலையையொட்டி விசாலமான இடத்தில் மெயின் ரோடிலிருந்து உள்ளடங்கி இருக்கிறது பாரதியார் பல்கலைக் கழகம். இதை நெருங்கும்போதே, "பல்கலைக்கழகத்துக்கென்று தனி டவுன் பஸ் ஏதும் இல்லீங்க" என்று குறைப்பட்டுக்கொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள், சில மாணவர்கள். மாணவர்களை மட்டுமின்றி ஆசிரியர்களையும் சந்தித்தோம். வரிசையாகப் புகார்கள் தான்:

* மற்ற பல்கலைக்கழகங்களில் ஆய்வுக்குக் கட்டணம் கம்மி. ஒப்பு நோக்குகையில் இங்கு அதிகம்.

* இந்தப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், சரித்திரம், அரசியலுக்கென்று இன்னும் தனித் துறைகள் தொடங்கவில்லை.

* ஒரு கைடுக்குக் கீழ் ஆராய்ச்சி பண்ணுகிற மாணவர்கள் அதிகம். 5—6 பேர் இருக்க வேண்டிய இடத்தில் 15 பேர் கூட இருக்கிறார்கள்.

* ஆசிரியர்கள் இருப்பதே கொஞ்சம் பேர் தான் என்றால், அவர்களுக்குள்ளேயே இரண்டு கட்சிகள், யூனியன்கள்! இதனால் மாணவ மாணவியருக்கு மத்தளம் போல் இரண்டு பக்கமும் இடி!

* வி. ஸி. யும் ரிஜிஸ்திராரும் ஒத்துப் போகவில்லை. வி. ஸி.க்குக் கவர்னர் ஆதரவு; ரிஜிஸ்திராருக்கு (மாஜி மந்திரி) அரங்கநாயகம் ஸப்போர்ட் — இப்படி பூசல் நிலவினால் பல்கலைக்கழகம் எப்படி உருப்படும்?

* உளவியல் பேராசிரியர் நாராயணன், "என் பெயர் போட்டே எழுதிக்குங்க ஸார்" என்று தமது புகாரைக் கூறினார். வர்தால் என்ற ஹரிஜனப் பெண்ணை மணந்தவர் இவர். வர்தால் இதே பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டரேட் வாங்கியவர். அவருக்கு 'ரீடர்' பதவி தரப்படவில்லை என்பது நாராயணனின் குற்றச்சாட்டு. "இதற்கு ஜாதித் துவேஷம்தான் காரணம்" என்றார் நாராயணன்.

* வழக்கமான சம்பளப் பிரச்னைகள்

* துணைவேந்தர் மருத்துவ பில் என்றும் வீடு புனர் நிர்மாணச் செலவு என்றும் தம் வசதிகளுக்கே ஏராளமாகச் செலவழித்துக் கொள்கிறார்.

* போன ஏப்ரலில் நடந்த தேர்வுகள் சிலவற்றுக்கு இன்னமும் மார்க் லிஸ்ட் போட்டுத் தரவில்லை!

* பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகளுக்கு நேரத்தோடு பரீட்சைக்குக் கேள்வித்தாள்கள் வந்து சேராது. அப்படி வந்தாலும் நூறு மாணவர்களுக்கு முப்பது கேள்வித் தாள்களும் முப்பது மாணவர்கள் எழுதும் பரீட்சைக்கு நூறு கேள்வித் தாள்களுமாக வந்து சேரும்!

* வி. ஸி. யை சிண்டிகேட் உறுப்பினர்கள் பார்ப்பது கூடக் கஷ்டமாக இருக்கிறது. முன் வாசல் வழியாக நுழைந்தால் பின் கதவு வழியாக வெளியேறி விடுகிறார் துணைவேந்தர்!

இத்தனை புகார்களையும் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு துணைவேந்தரைச் சந்திக்க முயன்றோம். "ம்... ம்... அவர் ரொம்ப பிஸி; பார்க்க முடியாது" என்றார்கள்.

சரி, என்று ரிஜிஸ்திராரான சிலம்பண்ணனைச் சந்தித்தோம். "நான் எப்படி யூனிவர்ஸிடி பற்றிச் சொல்ல முடியும்? நீங்க வி. ஸி. யைத்தான் பார்க்கணும்" என்றார்.

"நீங்களும் வி. ஸி. யும் எதிரெதிர் கோஷ்டியாமே?" என்றதும், "அப்படியெல்லாம் சொல்ல முடியாது. கருத்து வேறுபாடுகள் அவ்வப்போது எழத்தான் செய்யும். அதனால் நடக்க வேண்டிய காரியங்கள் எதுவும் பாதிக்கப்படாது" என்று முடித்து விட்டார்.

சில தினங்கள் சென்றுதான் வி. ஸி. யுடன் பேச முடிந்தது. அவரிடம் புகார்களை அடுக்கி வைத்தபோது ரொம்பவும் மனவேதனையுடன் பதில் சொன்னார்:

"இதோ பாருங்கள், நீங்கள் வந்த போது

துண்டுபட்டிருப்போரே, ஒன்றுபடுங்கள்!

திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் கன்ஸ்யூமர் இயக்கம் வளர்ந்து கொண்டிருக்கிற மாதிரி, கோவை நகரில் 'சிட்டிஸன்ஸ் வாய்ஸ் கிளப்' என்று ஓர் அமைப்பு வளர்ந்து கொண்டிருக்கிறது. இவர்களிடம் மக்கள் தங்கள் பிரச்னைகளைக் கூறி முறையிடும் போது, இவர்கள் அந்த மக்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேருக்கு நேர் சந்திக்க வைத்துப் பேச வைப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைப் போலவே கோவை மாவட்டம் முழுவதும் பல்வேறு ஊர்களில் இளைஞர் நற்பணிச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நமது ஆதங்கமெல்லாம் ஒவ்வோர் அமைப்பும் இப்படித் தனித்தனியாகத் துண்டுபட்டுக் கிடக்காமல், அனைவரும் ஒரே அமைப்பாக ஒன்று சேர்ந்து, மக்கள் பிரச்னைகளுக்காகக் குரல் கொடுத்தால் இன்னும் பல பணிகள் துரிதப்படுத்தப்படுமே என்பதுதான்! இதை நாமும் சொன்ன போது, "செய்கிறோம்" என்றார்கள் சிட்டிஸன்ஸ் வாய்ஸ் கிளப்பினர். பார்ப்போம்.





பாப்பா வளர்ச்சிக்கான திட உணவுகளில் பாசத்தாய் அளிக்கும் முதலிடம் :.பாரெக்ஸ்®

தாய், தன் குழந்தைக்கு தேர்ந்தெடுக்கும் முதலான திட உணவு புதிய செழுமையான :.பாரெக்ஸ். காரணம்:

பாப்பாவின் உடல் நலத்திற்கான புரதமும், ஜீரணத்திற்கு உகந்த கொழுப்புச் சத்தும் சரியான அளவில் கொண்டது.

பாப்பாவுக்கு ஆரோக்கியமான ரத்தத்தை தரவல்ல இரும்புச் சத்துள்ளது.

எலும்பும் பற்களும் வலுவோடு வளர்ந்திட கால்சியமும் :.பாஸ்:.பரஸூம் 2:1 என்ற அளவில் சேர்க்கப்பட்டது.

தின்னத் தெவிட்டாதது; கலப்பதும் கொடுப்பதும் எளிது.



பால் சேர்க்கத் தேவையில்லை!
நீருடன் கலந்து கொடுத்தாலே போதும்.

தாயன்பைக் கூறிடும் தரமிக்க திட உணவு :.பாரெக்ஸ்®

CLARION/B/GX/15/203

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்— இபபோது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.





மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்


பால் சேர்த்திடத் தேவையில்லை.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

B84. GLC. 120 Tm

புதுக் கவிதைப் போட்டி - 4



பிளஸ் டு மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமே ஆன போட்டி இது. 30.11.86 கல்கி இதழில் டெலிவிஷன் பற்றிய விரிவான கட்டுரை ஒன்று இடம் பெற உள்ளது. அதனைப் படித்துவிட்டு, டி.வி. பற்றி உங்கள் மனத்தில் தோன்றும் அபிப்ராயத்தை ஒரு புதுக்கவிதை ஆக்குங்கள்.

* எட்டே வரிகளில் ஒரு போஸ்ட் கார்டில் அப்புதுக்கவிதையை அடக்குங்கள்.
* கார்டின் மறுபுறம் பள்ளி அல்லது கல்லூரி முத்திரையைப் பெறுங்கள்.
* உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதுங்கள்
* விலாசப் பகுதியில் புதுக் கவிதைப் போட்டி—4 என்று குறிப்பிடுங்கள்.
* கவிதைகள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி: 8.12.86

முதல் பரிசு ரூ 100/—

இரண்டாம் பரிசு: ரூ 25/— தவிர ஆறு மாதங்களுக்குக் 'கல்கி' இலவசம்.

தவிர பிரசுரமாகும் அனைத்துக் கவிதைகளுக்கும் சன்மானம் உண்டு.

நான் ஸிண்டிகேட் மெம்பர்களுடன்தான் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தேன். 'ஸிண்டிகேட் உறுப்பினர்கள் என்னைப் பார்க்கவே முடிவதில்லை' என்ற புகார் பொய்யானது என்று இதிலிருந்தே தெரியவில்லையா? இரவில் வீட்டிலே கூட வந்து பேசுகிறார்கள்.

ஸிண்டிகேட் உறுப்பினர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது உங்களுக்கு எப்படி நான் பேட்டி தர முடியும்? அதனால் 'அப்பாய்ண்ட்மெண்ட் செய்து கொண்டு வரலாம்' என்று கூறியதை, நான் உங்களைப் பார்க்கவே மறுத்து விட்டதாகத் தொனிக்கும்படி உங்களுக்கு யாரேனும் சொல்லியிருந்தால் அதற்காக வருந்துகிறேன்'' என்றார்.

தொடர்ந்து பேசினார் சுப்பையயன்: ''பாரதியார் பல்கலைக்கழகம் புதிதாகத் தோன்றிய ஒன்று. இங்கே ஆய்வுக் கட்டணம் சென்னை போன்ற பழைய பல்கலைக் கழகங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதில் வியப்பில்லை; குற்றமுமில்லை. ஆங்கிலம், சரித்திரம், அரசியல் போன்றவற்றுக்குத் தனித் துறைகள் இல்லை என்று குறைப்படுகிறவர்கள், இங்கே எத்தனை எத்தனை புதிய துறைகள் அறிமுகமாகியிருக்கின்றன என்பதைக் கூறாமல் விட்டது வியப்பாக இருக்கிறது. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் உள்ள துறைகளையே மறுபடி ஏற்படுத்தாமல் **Environmental Science; Bio Technology; Linguistics; Micro-biology; Plasma Physics; Fine Arts; Pharmacy; Physiotheraphy; Population Study; Computer Science; Electronics; Physical Education** போன்ற எத்தனையோ துறைகளை ஆரம்பித்திருக்கிறோம். இவற்றிலெல்லாம் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதால் ஏற்படுத்தியுள்ளோம். மேல்நாட்டு நவீன சாத்திரங்களைத் தமிழன் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தானே பாரதியின் அவா? அவற்றை முதலில் தெரிந்து கொண்டால்தானே அவற்றைத் தமிழ்ப்படுத்தவும் முடியும்?

''இந்த மாதிரி நல்ல விஷயங்கள் எவ்வளவோ இருக்க, பல்கலைக்கழகம் பற்றிய அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தி உங்களிடம் பேசியிருக்கிறார்கள். ஒரு கைடுக்கு எத்தனை மாணவர்கள் இருக்கலாம் என்பதையெல்லாம் நான் ஒருவனே நிர்ணயிப்பதில்லை. இவை ஸிண்டிகேட் தீர்மானிக்கிற விஷயங்கள். பதினைந்து பேர் என்பது சரியில்லை.

''வேலைக்கு ஆட்களை எடுப்பதும் சட்ட திட்டங்களின்படிதான் நடக்கின்றன. நானே ஷெட்யூல்ட் காஸ்ட்தான். ஹரிஜன் என்பதற்காக யாரையும் ஒதுக்குவதில்லை. அவருக்கு இருக்கவேண்டிய 'குவாலிஃபிகேஷன்' இல்லாததுதான் காரணம். இவை எல்லாவற்றையுமே ஸிண்டிகேட்தான் இறுதியாக அங்கீகரிக்கிறது.

''துணைவேந்தர் என்ற முறையில் நான் கண்டிப்பாக நடந்து கொள்கிறவன். டிஸிப்ளினை எதிர்பார்க்கிறவன். இதனால் சிலர் அற்பப் புகார்களை எழுப்பிக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் நீங்கள் சிக்கிக் கொண்டது வருந்துதற்குரியது.

''சம்பளம் ஒன்றாயிருந்தாலும் சென்னைக்கும் கோவைக்கும் **D. A.** வித்தியாசப்படும். இதுபோன்ற விஷயங்களில் நான் என்ன செய்ய இருக்கிறது. சட்டப்படி நான் செயலாற்ற முடியுமே தவிர சட்டத்தை மாற்றவா முடியும்?

''எனது மருத்துவ பில் பற்றியும் துணைவேந்தர் இல்லத்தைப் புனர் நிர்மாணம் செய்தது பற்றியும் கூறப்பட்டுள்ள புகார்களுக்கு நான் பதிலளிக்கவே விரும்பவில்லை. எல்லாவற்றுக்கும் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

விதிகளை மீறி எதுவும் நடக்கவில்லை. நடந்தால் ஸிண்டிகேட் உறுப்பினர்கள் சும்மா இருப்பார்களா?


''கட்டடங்கள், கட்டுவது அல்லது மாற்றி அமைப்பது எல்லாம் பி. டபிள்யூ. டி.தான். டெண்டர் உண்டு. ஸ்கிரீனிங் கமிட்டி என்ற பரிசீலனைக்குழு இருக்கிறது. மேலும் பொறுப்பாக DTE இருக்கிறார். திட்டம்' போடுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இடையில் விலைவாசி உயர்வால் செலவு கூடுதலாகி விடுகிறது. இதற்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?

''எத்தனை குறுகிய காலத்தில் இங்கே எவ்வளவு கட்டடங்கள் வந்துள்ளன என்று பார்க்கிறவர்கள் அதிசயித்துப் போகிறார்கள். ஹாஸ்டல், லைப்ரரி, நிர்வாகக் கட்டடம் என்று பல. 'ஆறு மாதம் கழித்து வந்தால் பாரதியார் பல்கலைக்கழகமே வித்தியாசமாகத் தெரிகிறது' என்கிறார்கள். இங்கே எத்தனை கருத்தரங்குகள் நடந்திருக்கின்றன; அவற்றுக்கு எத்தனை அறிஞர்கள் வந்திருக்கிறார்கள்! எவ்வளவு உபயோகமான கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன! இதையெல்லாம் யோசிக்க வேண்டாமா?

''மகராஷ்டிராவில் அமராவதி பல்கலைக் கழகம் என்று இருக்கிறது. அதன் துணை வேந்தர், 'எங்கள் கல்வி அமைச்சரை அழைத்துக் கொண்டு உங்கள் பல்கலைக்கழகத்துக்கு வரப்போகிறேன்' என்று பெருமையோடு கூறினார்.

''நிலைமை இப்படி இருக்க, ஏதோ மார்க்குகள் தாமதமாகக் கிடைத்தன என்றும் கேள்வித்தாள்கள் சரியான எண்ணிக்கையில் இல்லை என்றும் புகார் செய்திருக்கிறார்கள். இது தவறுதான். மறுக்கவில்லை. ஆனால் என்ன செய்ய? இதற்காக ஒரு நபரைப் பொறுப்பாக்கியிருந்தோம். அவர் குளறுபடி செய்து விட்டார். இதற்கான விளக்கம் தருமாறு அவரைக் கேட்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுப்போம். இப்படி எந்த நிறுவனத்திலும் சில தவறுகள் நேரத்தான் செய்யும். அதை மட்டுமே பெரிது படுத்துவதா?

''புதிய புதிய துறைகளை ஆரம்பித்த போது தனவந்தர்கள் நன்கொடைகளை அளித்திருக்கிறார்கள். தேவராஜுலு பதினைந்து லட்சம் தந்தார். பேங்க் ஆஃப் இந்தியா ஐந்து லட்சம் கொடுத்திருக்கிறது. பொள்ளாச்சி நா. மகாலிங்கம் பதினைந்து லட்சம் வாக்களித்திருக்கிறார். எதனால் கொடுக்கிறார்கள்? என்னைப் பற்றி அவர்களுக்குத் தெரியும். அதனால்தான்.''



இப்படிப் பொழிந்து தள்ளிய துணை வேந்தர் சுப்பையயன் 1955 முதல் பி.எஸ்.ஜி. டெக்னலஜி கல்லூரியில் முதல்வராக இருந்தவர். அவரது தலைமையில் அந்தக் கல்லூரியின் சாதனைகளை கல்வி உலகம் நன்கு அறியும். அதன் விளைவாகத்தான் இந்தத் துணை வேந்தர் பதவி இவரை வந்து அடைந்தது.

''பாரதியார் பல்கலைக்கழகம் அடைந்துள்ள முன்னேற்றங்களையும் அதன் சிறப்புக்களையும் பாருங்கள் ஸார்; சின்னச்சின்னக் குறைகளைப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்காதீர்கள்! இவர்கள் என்ன என் மீது பயங்கர லஞ்ச ஊழல் குற்றச்சாட்டையா சுமத்தி விட்டார்கள், நீங்களும் நானும் கவலைப்பட?'' என்று கேட்கிறார் சுப்பையயன்.

நம்முடைய ஆசையெல்லாம் இந்தக் கட்டுரையின் விளைவாகவேனும் பாரதியார் பல்கலைக் கழகத்தில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மேலோங்கி அது பரிதாபக் கழகமாக இராமல் பிரமாதக் கழகமாகப் பிரகாசிக்க வேண்டும் என்பதுதான்.

— ஆகி

மேலட்டை வண்ணப்படங்களும், கோவை மாவட்டம் தொடர்பான மற்ற படங்களும் எடுத்தவர்: கே.வி.ஆனந்த்

மாவீரன்

'பாட்டி, பாட்டி எங்க ஸ்டைல் கிங் ரஜினி படம் வந்திருக்குதாமே பாட்டி...?"

"பாட்டி.... பாட்டி.... ரஜினி...."

"விடமாட்டீங்களா என்னை... அதைப் பத்தி பேச்சே எடுக்கக் கூடாதுன்னு பார்த்தேன்."

"ஏன் பாட்டி பெருமூச்சு விடறே....?"

"நான் என்னத்தைச் சொல்றது..... வெள்ளைக்காரன் காலத்தில் நடந்த கதை இது. தாராசிங் தாராசிங்னு ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். அவரை வெள்ளைக்காரங்ககிட்ட காட்டிக் குடுக்கிற ஒரு டாக்டர். அந்த டாக்டர்தான் ஜெய்சங்கர். இந்தத் தாராசிங்குக்கும் அவரு சம்சாரம் சுஜாதாவுக்கும் பொறந்த குழந்தைதான் உங்க மாவீரன் ரஜினி. அவரு சின்னக் குழந்தையா இருக்கும்போதே, தாராசிங் அவரு மார்மேல மாவீரன்னு கத்தியால எழுதிடறாரு. பின்னால அடையாளம் காட்டறதுக்கு வேணும்? நம்ம ஆளுங்க மச்சம், மச்சம்னு அடையாளம் காட்டுவாங்க. புதுசா இருக்கட்டும்னு இதில கத்தியால் எழுதறது...."

"சரி பாட்டி.... ரஜினி, ஃபைட் பண்றாரா?"

"சொல்றேண்டா. அந்தத் தம்பிரிராப்பைதுக்கிக்கிட்டுக் குதிரை வண்டி மேலே ஓடறது, பாட்டுப் பாடறது, கையை இப்படி அப்படின்னு வீசி வீசிச் சண்டை போடறது எல்லாம் சுறுசுறுப்பாத்தான் இருக்குது. ஆனா கதைதான்...."

"கதைக்கு என்ன பாட்டி?"

"மாயாஜாலக் கதையை விட மோசமா இருக்குதே ராஜா. சுதந்திரப் போராட்டம் பத்தி சொல்றாங்களான்னா அதுவும் இல்லே. பெரிய அரண்மனை. அது எதிர்ல குடிசைங்க. இந்த அரண்மனைக்கும் குடிசைக்கும் சண்டைன்னு ஆரம்பிக்கிறாங்க. அதுக்கு ஏன் சுதந்திர காலத்துக்குப் போவணும்? சொல்லுங்க! அந்தப் பொண்ணு அம்பிகா மொதல்ல, அம்பிகாக் குதிரை கணக்கா வெறைச்சிக்கிட்டு இருக்கறதும், போகப் போக வீட்டு நாய் மாதிரிக் கொழையறதும் ஜோராத்தான் இருக்குது. நாய்களும் இந்தியர்களும் உள்ளே நுழையக் கூடாதுன்னு போர்டு போட்டிருக்கிற எடத்தில நம்ப ரஜினி ரேகா வண்டியோட போய் அமர்க்களம் பண்றது, நீங்கள்ளாம் கைதட்டி, 'சபாசு, சபாசு'ன்




னு சொல்றமாதிரித்தான் இருக்குது. ஆனா, குதிரை, நாய் எல்லாத்தையும் நடிக்க வெச்சி, குதிரை சுஜாதாவைக் கூட்டிக்கிட்டு வருது, நாய் ரஜினி உயிரைக் குதிரை கடிவாளத்தால காப்பாத்துதுன்னு சொன்னா யாரு நம்பறது?"

ஒன்றிரண்டு பாடல்கள் சுமாராக இருந்தாலும், காமிரா ஓரளவுக்கு ஆறுதலாய் இருந்தாலும், ரஜினி குதிரையுடன் சம்பந்தம் பேசுவது, புது டெக்னிக்குகளுடன் சண்டை போடுவது என்று சுவைப்படப் பண்ணியிருந்தாலும், நகைச்சுவை இல்லாத உணர்ச்சிக் கோன நாகேஷ் ஓரளவு நெஞ்சை இளக வைத்தாலும் —

சுற்றிச் சுற்றி வந்து இலக்கே இல்லாமல் குழப்புகிற கதை காரணமாக இவ்வளவு பணத்தைக் கொட்டி, வயிறு முட்ட முட்டச் சுவையான பண்டங்களாகச் சாப்பிட்டுவிட்டு வந்து எடுத்த வாந்தியைப் போல் ஆகிவிட்டதே என்ற ஆதங்கம் எழாமல் இல்லை. இந்தப் பைசா பெறாத மொழிமாற்றக் கதைக்கு ஒரு ராஜசேகர் வேறு. ஹூம்!

— ஜெயமன்மதன்



போய்யா, போய் நல்லா தோசை சுட்டு!
இ.காங்கிரஸ் கட்சி மேலிட பதவிகள்
திரிபாதி
மூப்பனார்
அந்தோணி
காலிஸ்தான்
பயங்கரவாதி
பர்னாலா
என்னைத் தோளிலே தூக்கிக்கோ!.. ஒற்றுமையா இருப்போம்!
எஸ்.டி.எஸ்
எம்.ஜி.ஆர் மீது குற்றச்சாட்டுகள்
எம்.ஜி.ஆர் புகழ்ச்சி
போய்யா!.. நீயும், உன் தராசும்!.. ஒரே ஏமாத்து!

கல்கி

1986 நவம்பர் 23
மலர் 45 இதழ் 17
அக்ஷய கார்த்திகை 7



முரண்பாடுகளின் மொத்த உரு!

நமது முதல்வர் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவதில் வல்லவர் என்பது தெரிந்த விஷயம்தான். ஆனால் அவரது சமீப காலத்திய சில செயல்கள் நாம் சிண்டைப் பிய்த்துக் கொள்ளும் அளவில் குழப்புகின்றன. மத்திய அரசு சொல்லியோ அல்லது தாமாகவே தானோ ஈழப் போராளிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு போலீஸுக்குத் தமிழக அரசு உத்தரவிட்டுவிட்டது. அதற்கான காரணம், தமிழக மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதோ அல்லது பெங்களூருக்கு வரும் அயல்நாட்டுத் தலைவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதோ, எதுவாக வேணுமானாலும் இருக்கட்டும், உத்தரவு போட்டாகிவிட்டது. அதனை ஏற்று ரெய்டுகள் நடத்தி ஏராளமான பயங்கர ஆயுதங்களைப் போலீஸ் பறிமுதல் செய்தது. ஆள் சேதமோ பொருள் சேதமோ சிறிதும் இன்றி, இட்ட பணியைப் பெருமிதப்படும் வகையில் செய்து முடித்திருக்கிறது. ஈழப் போராளிகளிடம் இருந்த ஆயுதங்கள் மிக நவீனமானவை என்பது மட்டுமல்ல, மிகப் பெரிய யுத்தமே நடத்தப் போதுமானவை. ஒப்பு நோக்க, நமது போலீஸிடம் இருந்த ஆயுதங்கள் பட்டாசு! ஆனபோதிலும் நமது போலீஸ் படை மிகத் துணிச்சலாகக் காரியத்தில் இறங்கி வெற்றி பெற்றுள்ளது. ''அந்தத் துணிச்சலுக்கும் வீரத்துக்கும் தலை வணங்குகிறேன்'' என்று பாராட்டி இருக்கிறார் முன்னாள் போலீஸ் உயர் அதிகாரி எஃப். வி. அருள். அவரே இன்னொரு விஷயத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார்: போராளிகள் இந்தத் தாக்குதலைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இந்த ரெய்டுகள் தமிழகம் முழுவதும் பல இடங்களில் ஒரே சமயத்தில் சொல்லி வைத்தாற் போல் நடந்திருக்கிறது. ஆனபோதிலும், இத்திட்டம் முன்கூட்டியே அம்பலமாகவில்லை. காதும் காதும் வைத்தாற்போல் கடைசிவரை ரகசியம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதி லிருந்து நமது போலீஸ் படையினர் எவ்வளவு நம்பிக்கைக்கு உரியவர்கள் என்பதும் தெளிவாகிறது.

இப்படி பாராட்டுக்கள் ஒருபுறம் குவிய, அதேநேரத்தில் ஈழப் போராளிகளிடம் பேசும் எம்.ஜி. ஆர்., போலீஸார் அவர்களிடம் அத்து மீறி நடந்து கொண்டதற்காகத் தாம் வருந்துவதாகவும், வரம்பு மீறிய போலீஸாரைக் கண்டித்து நடவடிக்கை எடுப்பதாக வும் கூறிப் போராளிகளைச் சமாதானப்படுத்தியுள்ளார்! இது போலீஸ் துறையையே முதுகில் குத்துவது போலிருக்கிறது. போராளிகளை வளைத்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்று கூறிய பிறகு போலீஸ் என்ன, அவர்கள் தாடையைப் பிடித்துக் கொண்டு, 'அப்பா, மகனே' என்று கெஞ்சிக் கொண்டிருக்கவா முடியும்?

''ஹிந்தித் திணிப்பு இராது என்று ராஜீவ் கூறிவிட்டார்; அவர் வாக்குறுதியே போதும்; சட்டத் திருத்தம் தேவையில்லை; கருணாநிதியின் போராட்டம் யூஸ்லெஸ்'' என்று முதல்வர் கருத்துத் தெரிவித்துச் சில தினங்கள்கூட ஆகவில்லை. அதற்குள், ஹிந்தி திணிக் கப்படமாட்டாது என்பதற்குச் சட்டத் திருத்தம் கோரி சட்டசபையில் அ.தி.மு.க. அரசே தீர்மானம் கொண்டுவருகிறது!

இவையெல்லாம் போதாக்குறைக்கு எஸ்.டி.எஸ். அரசியல் வேறு! அமைச்சராக இருந்தவர் திடீரென்று பதவி நீக்கம் செய்யப்படுகிறார்! கட்சியிலிருந்தும் வெளியேற்றப் படுகிறார். உடனே தனிக் கட்சி ஆரம்பிக்கிறார் எஸ்.டி.எஸ். 'ஊழல் அமைச்சரவையில் நெம்பர் ஒன் ஊழல்காரர் எம்.ஜி. ஆர்தான்' என்று சாடுகிறார். பதிலுக்கு எம்.ஜி. ஆரும், எஸ்.டி.எஸ். மீது ஸி.பி.ஐ. விசாரணையே இருப்பதாகக் கூறுகிறார். 'நமது கழகம்' ஊர்வலமாகச் சென்று ஆளுனரிடம் ஆட்சியிலிருப்போர் பற்றிய நீண்ட ஊழல் பட்டியலை அளிக்கிறது. அதே எஸ்.டி.எஸ். மீண்டும் ஆளும் கட்சியில் சேரப் போகிறார் என்று சில தினங்களுக்கு முன் செய்தி வருகிறது. 'இது அரசியல் நாகரிகமற்றவர்கள் பரப்பும் வதந்தி' என்று எஸ்.டி.எஸ். சீறுகிறார். அப்படிப் பேசிய வார்த்தைகளின் ஒலி அடங்குமுன் தமது கட்சியைக் கலைத்துவிட்டு அ.தி.மு.க.வில் சேர்ந்துவிடுகிறார்! 'எம்.ஜி. ஆரின் கரங்களைப் பலப்படுத்துவோம்' என்கிறார்! எம்.ஜி. ஆரும் அவரை இருகரம் நீட்டி மகிழ்ச்சியோடு வரவேற்றுத் தமது கட்சியில் சேர்த்துக் கொள்கிறார்! இதில் யார் அதிகமான விவஸ்தை யற்றவர்கள் என்று புரியாமல் நாம் திகைக்கிறோம்! உள்கட்சி விவகாரம் என்று நாம் ஒதுங்குவதற்கில்லை. கட்சித் தலைமை இத்தனை அசிங்கமாக நடந்து கொள்ளுமானால் ஆட்சித் தலைமை என்னதான் செய்யாது?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விரும்பத்தகாததையும் தரும் சிந்தாமணி!

கோவை நகரிலுள்ள சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடி என்பது ஒரு காலத்தில் ஆசியாவிலேயே சிறந்ததாகச் சொல்லப்பட்டது. உப்பு, புளி, மிளகாயிலிருந்து அங்கு கிடைக்காத பொருள்களே இல்லை; அத்தனையும் வெளிமார்க்கெட்டை விடக் குறைந்த விலையில் கிடைக்கும். தரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கண்ணை மூடிக்கொண்டு வாங்கலாம் என்னும் அளவுக்கு நம்பகமானதாக இருந்தது. ஆனால் இப்போது?

''ஜி. ஆர். கோவிந்தராஜுலு தலைவரா இருந்தவரைக்கும் பிரமாதமாகத்தானுங்க இருந்தது. எழுபத்தாறில் அவர் தலைவராக இருந்த நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட்டு, அரசாங்கம் தனி அதிகாரியை நியமித்து நடத்த ஆரம்பித்ததிலிருந்துதானுங்க எதுவுமே சரியில்லாமப் போயிருச்சு....'' என்று பலரும் சலிப்புடன் கூறுகிறார்கள்.

முன்பெல்லாம் கல்யாணம் நிச்சயம் செய்தவர்கள், கல்யாணத்திற்குத் தேவையான பொருள்களை லிஸ்ட் போட்டு எடுத்துக் கொண்டு போனால், அத்தனையையும் சிந்தாமணியிலேயே வாங்கிக் கொண்டு திரும்பிவிடலாம். இப்போது அப்படி இல்லை. கல்யாண லிஸ்டைக் கொண்டு போய் நீட்டினால், 'அது இல்லை, இது இல்லை' என்று சொல்லப்படுவதால் மங்களகரமான காரியத்திற்கு இப்படியோர் இல்லை பல்லவியா என்று பலரும் சிந்தாமணியில் வாங்கும் எண்ணத்தையே கைவிட்டுவிடுகிறார்களாம்! முன்பு வைப்புத் தொகையாகப் பொதுமக்களிடமிருந்து சிந்தாமணி பெற்ற தொகை சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தது. இப்போதோ அது சுமார் இருபது லட்சம் ரூபாய் அளவுக்குக் குறைந்து போனது. அந்த அளவுக்குப் பொதுமக்கள் சிந்தாமணியின்மேல் நம்பிக்கை இழந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். காரணம் என்ன? 'அதிகாரிகளின் ஊழல்தான்!' என்று அடித்துச் சொல்கிறார்கள்.

உதாரணமாகத் துணி விற்பனைப் பிரிவை எடுத்துக் கொண்டால் அங்கு ஏக ஊழல்! ஒரு துணி மில்லிலிருந்து வரும்போதே முதல் தரம், இரண்டாம் தரம் என்று பிரித்து முத்திரையிடப்பட்டே வரும். இரண்டு தரத்திற்கும் வெவ்வேறு விலையை மில்லே நிர்ணயித்துத்தான் கொடுக்கும். அப்படி வாங்கப்பட்ட துணிகளைச் சிந்தாமணி என்ன செய்ய வேண்டும்? இரண்டாம்தரத் துணியை, முதல் தரத்தைவிடக் குறைவான விலைக்கல்லவா விற்றிருக்க வேண்டும். அதுதான் இல்லை. இரண்டையும் முதல் தரத்தின் விலைக்கே விற்றிருக்கிறது! இதுதான் பொதுமக்களுக்கு நியாய விலையில் விற்கும் சமூக சேவையா?



• சூரியகாந்திப் பூ, எண்ணெய் ஆலை




• சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடி

இதேபோலச் சில துணிகளின் விலை வெளி மார்க்கெட்டைவிடச் சிந்தாமணியில் அதிகமாக விற்கப்பட்டிருப்பது படு மோசடி! உதாரணமாக 83645 என்ற எண்ணுள்ள கோத்தாரி (டி.சி.) துணியின் விலை வெளி மார்க்கெட்டில் மீட்டர் ஒன்று ரூ 25.50க்கு விற்கப்பட்ட அதே தேதியில், சிந்தாமணியில் அதே எண்ணுள்ள துணி மீட்டர் ஒன்று 32.20க்கு விற்கப்பட்டிருக்கிறது. இதேபோல ஒரு மில்லிலிருந்து ரூ 8.29 அடக்க விலையுள்ள இரண்டு வகைத் துணிகளைக் கொள்முதல் செய்யும் விலையும் விற்பனை செய்யும் விலையும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும். ஆனால் சிந்தாமணி ஆபீஸர்களின் கணக்கே வேறு! ரூ 8.29 அடக்க விலையுள்ள ஒரு துணியை ரூ 8.96க்குக் கொள்முதல் செய்து ரூ 10.30க்கு விற்றிருக்கிறார்கள். அதே அடக்க விலையுள்ள வேறொரு துணியை ரூ 10.09க்குக் கொள்முதல் செய்து ரூ 11.60க்கு



விற்றிருக்கிறார்கள்! இது ஓர் எடுத்துக்காட்டுக்குத்தானே தவிர, இப்படி இன்னும் எத்தனையெத்தனையோ சொல்லலாம்; சொல்லிக்கொண்டே ஏ ஏ .....போகலாம்!

கடந்த 17.4.82 அன்று கோயமுத்தூர் மத்தியக் கூட்டுறவு வங்கியில் ஐம்பதாயிரம் ரூபாய் கட்டிய சிந்தாமணி கேஷியர் ஒருவர், தாம் வைத்திருக்கும் மீதி சலானில் (Counter foil) ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் என்று திருத்தி வைத்துக் கொண்டாராம். எதற்காகத் திருத்த வேண்டும்? அவர் திருத்தியது இருக்கட்டும். அதைக் கண்டுபிடிக்கவே பல மாதங்கள் ஆயிற்றாம் சிந்தாமணி அதிகாரிகளுக்கு! இதே மாதிரி இன்னொரு கேஷியர் ரூ 6,37,907.44 ஐச் சிந்தாமணிக் கணக்கிலிருந்து எடுத்து வட்டிக்கு விட்டுக் கொண்டிருந்தாராம். அதில் சில அதிகாரிகளும் உடந்தையாக இருந்தார்களாம். கண்டுபிடிக்கப்பட்டுத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட அந்த அதிகாரிகள் மறுபடியும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்



* முதல் தரம்..... இரண்டாந்தரம்: இரண்டும் ஒரே விலைதான்!

டார்களாம்!

காய்கறிக் கொள்முதல், மதுபான விற்பனை போன்றவற்றிலும் ஏராளமான அளவுக்கு ஊழல் நடந்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும்விட இன்னொரு வேடிக்கை, கோவை ஒண்டிப்புதூரில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் சிந்தாமணியால் நிர்மாணிக்கப்பட்ட சூரியகாந்திப் பூ எண்ணெய் ஆலையின் செயல்பாடுதான்! பெயர்தான் சூரிய காந்திப் பூ எண்ணெய் ஆலையே தவிர, கட்டப்பட்ட பத்தாண்டுகளில் இதுவரை சூரிய காந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுத்ததாகச் சரித்திரமே இல்லை. கடலெண்ணெய்தான் பிழிந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் முழுத் திறனோடு, செயல்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. ஒருநாளைக்கு ஐம்பது டன் எடையுள்ள கடலையைப் பிழிந்தெடுக்கும் திறன் கொண்ட 'ஆயில் மில்' ஒருநாள்கூட முழுத் திறனுடன் செயல்பட்டதில்லையாம்!

ஓர் ஆயில் மில்லில் மிக அதிக லாபம் தரக் கூடியப் பகுதி ரிஃபைனரி பிரிவுதான் என்பார்கள். அதாவது பிழிந்தெடுக்கப்பட்ட எண்ணெயைச் சுத்திகரிக்கும் பகுதி. சிந்தாமணி ஆலையின் இப்பகுதியோ கடந்த பல மாதங்களாக மூடப்பட்டுக் கிடக்கிறது. எண்ணெய்பிழியப்பட்ட பிண்ணாக்கில்மிச்ச சொச்சமிருக்கும் எண்ணெயையும் பிரிப்பது 'சால்வென்ட் எக்ஸ்ட்ராக்ஷன் பிளான்ட்' என்னும் பிரிவு. நாளொன்றுக்கு முப்பது டன் பிண்ணாக்கைப் பிழிந்தெடுக்கும் திறன் கொண்ட இந்தப் பிரிவும் சில நாட்கள் இயங்கியதோடு சரி என்கிறார்கள். இதே மாதிரிதான் பருத்தி விதையின் மேல்பாகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் lint என்னும் பஞ்சைப் பிரித்தெடுக்கவும், பருத்தி விதையிலிருந்து எண்ணெய் எடுக்கவும் பயன்படும் 'டீலின்டிங் செக்ஷ'னும் கொதிகலன் பிரிவும் செயல்படாமல் இருக்கின்றன என்கிறார்கள். ஆக, மூடி வைப்பதற்கென்றே



* நடமாடும் அங்காடியின் முன் க்யூ....

சிந்தாமணி — சில சிறப்புக்கள்

கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியில் பல பிளஸ் பாயிண்ட்களும் உண்டு:

* வருடா வருடம் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

* இவ்வாண்டு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய மூன்று மாதங்களில் ஒன்பதரை கோடி ரூபாய்க்கு விற்பனை நடந்திருக்கிறது. ஆண்டுக் குறியீடு 34 கோடி.

* 84—85ம் ஆண்டுக்குத் தமிழ்நாட்டிலேயே சிறந்த நுகர்வோர் கூட்டுறவு நிறுவனமாக சிந்தாமணி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

* ஊழியர்களுக்கு போனஸ் தவிர ஊக்க ஊதியமும் தரப்படுகிறது.

* நடமாடும் அங்காடி ஒன்று வாரத்துக்கு இருபத்து நான்கு இடங்களுக்குச் செல்கிறது. இது பொது மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கிறது. வீட்டுக்குப் பக்கத்தில் நடமாடும் அங்காடி வரும் போது அமைதியாகக் கியூவில் நின்று தங்களுக்குத் தேவையானவற்றைத் தாங்களே எடுத்துக் கொள்கிறார்கள். பிறகு பில் போடப்படுகிறது. நாளொன்றுக்கு ரூ 5000 க்கு விற்பனையாகிறது.

* இந்த ஆண்டு தீபாவளியின்போது ரூ 20 லட்சத்துக்கு முந்நூறு வகைப் பட்டாசுகளை வாங்கிக் குவித்திருந்தது சிந்தாமணி. சென்ற ஆண்டு ரூ 9 லட்சத்துக்கு பட்டாசு விற்பனை ஆயிற்று.

* இங்கு நிறுவப்பட்டுள்ள கொள்முதல் தரக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் கூட்டுறவு பண்டக சாலையிலேயே முதலாவதாகும். மாநிலத்தின் பிற பண்டக சாலைத் தர ஆய்வாளர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

* காய்கறி மளிகை முதலானவற்றில் அன்றாடம் வெளி மார்க்கெட் விலைகளை அனுசரித்து குறைவான விலைக்கு பொருட்களின் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

* பல விஸ்தரிப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஓர் எண்ணெய் ஆலையைச் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் நிர்மாணித்திருக்கிறது சிந்தாமணி!

இதுமாதிரி பல குளறுபடிகள் சிந்தாமணியில் நடந்தாலும் குறிப்பாகத் துணி விற்பனைப் பிரிவில் நடந்த மோசடிகள்தான் மிகப் பெரிய அளவில் உள்ளன என்பதால் அது பற்றித் தக்க ஆதாரங்களுடன் அதில் பணியாற்றிய ஊழியர் ஒருவரே தமிழக முதல்வருக்கு புகார் அனுப்பியிருக்கிறார். கடந்த 81ல் அனுப்பப்பட்ட அப்புகாருக்கு முதல்வரின் துணைச் செயலாளர், பிச்சாண்டி 20.10.81 அன்று, ''தாங்கள் முதலமைச்சர் அவர்களுக்குக் கோவை சிந்தாமணி சிறப்பங்காடியில் முறைகேடுகள் நடப்பது பற்றி எழுதிய மனுக்கள் மீது விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மனுக்களுடன் அனுப்பியுள்ள துணிகளைத் தங்களுக்குத் திருப்பியனுப்பப் பணிக்கப் பட்டுள்ளேன்'' என்று பதிலும் எழுதியிருக்கிறார். ஆனால் ஒரு நடவடிக்கையும் எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை என்பதோடு ஆதாரம் உருவாக்க ஆயிரம் ரூபாய் செலவு செய்து வாங்கி, முதல்வர் பார்வைக்கு அனுப்பப்பட்ட துணி வகைகள் திரும்பி வரவும் இல்லை!

அதன்பிறகு அந்த ஊழியர் கடந்த ஆண்டு பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்ததன் பேரில், உண்மைக்குப் புறம்பாகவும் அவதூறாகவும் களங்கம் ஏற்படுத்தும் நோக்குடனும் அவர் பேட்டி கொடுத்ததாகக் கூறி பேட்டி வெளியான இரண்டு மணி நேரத்தில் அவரை சஸ்பெண்ட் செய்து, கடைசியில் டிஸ்மிஸூம் செய்துவிட்டிருக்கிறது சிந்தாமணி நிர்வாகம்! அவர் டிஸ்மிஸ் செய்யப் பட்டது சரியா தவறா என்பது பற்றிய தீர்ப்பை நாம் நீதிமன்றத்திடம் விட்டுவிட்டாலும், தவறு நடந்திருக்கிறது என்பது நீதிமன்ற ஆணையின் பேரில் நடந்த கூட்டுறவுப் பதிவாளர் விசாரணையில் நிரூபிக்கப்பட்டு விட்ட பிறகும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாததற்கு என்ன காரணம்? இத்தனைக்கும் கூட்டுறவுத் துறை பதிவாளரே புகாரை விசாரித்து அந்த ஊழியர் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் சொன்ன குற்றச்சாட்டுகள் உண்மை என்று ஒப்புக் கொண்டும் இருக்கிறார்!

சிந்தாமணி என்றால் விரும்பியதைத் தரும் தெய்வீக இரத்தினம் என்று பொருள்படும். ஆனால் இந்தச் சிந்தாமணியோ விரும்பத் தகாததையும் தருகிறது!

இம்மாதிரி ஊழல்கள் சிந்தாமணியில் மட்டுமின்றி கூட்டுறவுத் துறையில் வேறு பல இடங்களிலும் நடக்கிறது என்றால் முக்கிய காரணம், விதிமுறைகளின்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டுறவு அமைப்புக்களில் தேர்தல்கள் நடக்காதது தான். இது கூட்டுறவு என்ற தத்துவத்தையே பரிகசிப்பதாக இருக்கிறது; ஊழல்களுக்கும் இடமளிக்கிறது. தேர்தல்களை அரசு ஒழுங்காக நடத்த முடியவில்லை என்றால் கூட்டுறவு நிறுவனங்களைக் கலைத்து மூடி விடுவது தான் நியாயம். ஆனால் அப்படிச் செய்யாத வரையில் அதிகாரிகளை வைத்தே காரியங்களை நடத்திக் கொண்டு போவதில் இந்த ஆட்சியும் ஏதோ லாபங்களை அடைவதாகத்தான் முடிவுகட்ட வேண்டியிருக்கும்.

— இளங்கோவன்

வித்தியாசமானவன்

க. தப்பிலிஅப்பன்



"என்னங்க, உங்க பையில் காசு மாலை இருக்கிறதா, பாருங்க!" — பார்வதி பதற்றத்துடன் கூறியதும், குமரேசனுக்குத் திக்கென்றது!

"என்ன சொல்றே நீ. உன் கழுத்தில் இருந்த காசுமாலை என் பைக்குள் எப்படி வரும்? ஓட்டலில் டிபன் சாப்பிட்டோமே, அப்போது தவறி எங்கேயாவது போட்டுட்டாயா?" என்றவர், ஓட்டலை நோக்கி விரைய, பார்வதியும் பின் தொடர்ந்தாள்.

எப்படிப் பார்த்தாலும் பத்தாயிரம் பெறும் காசுமாலை; அத்துடன் குமரேசன் வீட்டில் மூன்று தலைமுறையாக இருந்து வரும் குடும்ப நகை. அது காணமல் போய் விட்டதே! இதனால் குடும்பத்தில் ஏதேனும் கஷ்டம் வரப் போகிறதா? — குமரேசனும் பார்வதியும் குழம்பித் தவித்தனர்.

குமரேசன் ஓட்டலை அடைந்து, முன்பு தாங்கள் டிபன் சாப்பிட்ட இடத்திற்குச் சென்றார். நல்ல காலம், அவர்கள் சாப்பிட்ட இடத்தில் தனியாக ஓர் இளைஞன் மட்டுமே அமர்ந்திருந்தான்.

"எக்ஸ்கியூஸ் மீ, இந்த இடத்தில் என் மனைவி ஒரு காசுமாலையைத் தவற விட்டு விட்டாள். உங்கள் கண்ணில் பட்டதா?" என்று மிகவும் மெல்லிய குரலில் கேட்டார்.

காப்பியை ஆற்றிக் கொண்டிருந்த இளைஞன் உடனே, "பதற்றம் வேண்டாம் சார், இந்தக் காசு மாலைதானே நீங்கள் தொலைத்தது?" என்று அவரிடம் அதைக் கொடுத்தான்.

"தேங்க்ஸ் எ லாட், டியர் பிரதர்!" என்று கண்ணீர் மல்க அவன் கைகளை ஆதங்கத்துடன் பிடித்துக் கொண்டார், குமரேசன்.

"நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். டிபன் சாப்பிட இங்கு வந்து அமர்ந்ததும் காலில் ஏதோ இடற, என்னவென்று குனிந்து பார்த்தேன்; காசுமாலை! எனக்குத் திக்கென்று ஆகிவிட்டது சார். உடனே என்ன செய்வதென்றே புரியவில்லை. ஓட்டல் முதலாளியிடம் கொடுக்கலாமென்று நினைத்தேன். மறுகணம் போலீஸில் ஒப்படைத்துவிட நினைத்தேன். காசுமாலையைத் தவற விட்டவர்கள் மனம் இந்நேரம் என்ன பாடுபடும் என்பதை நினைத்தபோது, மனத்திற்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அந்த நிலைமைக்கு வாய்ப்பே ஏற்படாமல் நீங்களே இதோ நேரில் வந்து விட்டீர்கள். உரிய பொருள் உரியவரிடம் போய்ச் சேர்ந்தது மனத்திற்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது சார். இந்த எனது மகிழ்ச்சிக்குக் காரணமான உங்களுக்கு, நான்தான் சார் தேங்க்ஸ் சொல்ல வேண்டும்!" என்றான் அந்த இளைஞன் புன்சிரிப்புடன்.

அவனையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். அவனது களையான முகமும், இயல்பான பேச்சும் மேலும் அவன் மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தின. வெகுமதி, இனாம் என்ற பெயரில் அவனுக்கு எதையாவது கொடுத்து அவனது பெருந்தன்

மையைக் கொச்சைப் படுத்த விரும்பாத குமரேசன், அவனிடம் மீண்டும் நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டார். வெளியில் சிறிது தூரம் சென்ற பிறகுதான், அவனைப் பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ளாமல் வந்து விட்டோமே என்று வருத்தப்பட்டார்.

குமரேசன் 'ராம் கெமிகல்ஸ்' என்ற உர நிறுவனத்தில் மானேஜர். கைநிறைய சம்பளம். நிறைவான வாழ்க்கை. ராம் கெமிகல்ஸில் அவர் வைத்ததுதான் சட்டம். அன்று வழக்கம் போல் வேலையை முடித்து விட்டு, வீடு திரும்பினார். வீட்டில் அவருக்காக அவருடைய பழைய பள்ளித் தோழர் ராகவன் காத்திருந்தார்.

நண்பர்கள் இருவரும் சிறிதுநேரம் பரஸ்பரம் ஒருவரையொருவர் விசாரித்துக் கொண்டார்கள். பின்னர் அவர்களது பேச்சு குடும்ப வாழ்க்கை, பிள்ளைகளின் படிப்பு, உத்தியோகம் என்று நீண்டது.

''ஆமாம் ராகவன், எம். எஸ்ஸி., படித்து விட்டு வேலை எதுவும் இல்லாமலா இருக்கிறான் உன் மகன்?''

''அதற்காகத்தான் நான் இப்பொழுது உன்னிடம் வந்தேன்!''

''நான் என்ன செய்ய வேண்டும்? சொல். உனக்குச் செய்யாமல் நான் யாருக்குச் செய்யப் போகிறேன்.''

''இந்த நம்பிக்கை எனக்கு நிச்சயம் இடைக்கும் என்றுதான் நான் உன்னிடம் வந்தேன். உங்கள் நிறுவனத்தில் 'கெமிஸ்ட்டுகள் தேவை' என்று விளம்பரம் வந்தது. என் மகனும் அதற்கு விண்ணப்பம் போட்டுள்ளான். அடுத்த வாரம் இண்டர்வியூ. அதனால் உன்னிடம் முன்னாலேயே ஞாபகப் படுத்திவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்!''

''சரியான நேரத்தில்வந்தாய். உன் மகனைப் பற்றிய விவரங்களைக் கொடு. அவன் அப்பாயின்ட்மெண்ட்டுக்கு நான் கேரண்ட்டி தருகிறேன்.''

ராகவனிடம் அவரது மகனைப் பற்றிய விவரங்களை வாங்கிக் கொண்டு, அவரை அனுப்பி வைத்தார் குமரேசன். மளமள வென்று நாட்கள் செல்ல, அந்த இண்டர்வியூ நாளும் வந்தது.

ராம் கெமிகல்ஸ் நிறுவனத்தில் அன்று ஏகப்பட்ட எம்.எஸ்ஸி. பட்டதாரிகள் கூட்டம். உதவி மானேஜர்கள் இருவர் வந்திருந்த பட்டதாரிகளின் கல்வித் தகுதி, முன் அனுபவம் முதலியவற்றைச் சரிபார்த்தனர்.

குமரேசன்தான் நேரடித் தேர்வினை நடத்திக் கொண்டிருந்தார். அவரது அறையில் நுழையும் ஒவ்வொரு நபரையும், அவர்களது திறமையை எடை போட, தகுந்தவாறு கேள்விகள் கேட்டுத் தேர்வினை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது ஆர். ரவி என்றபெயருள்ள இளைஞன் அவர் அறையில் நுழைந்ததும், குமரேசன் ஆச்சரியப்பட்டுப் போனார்! காரணம், ஓட்டலில் அவரது காசு மாலையைக் கொடுத்த அதே இளைஞன்! அதே புன்சிரிப்பு!

''உங்களை இங்கு சந்திப்பேன் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை, பிரதர்!'' என்றார் குமரேசன்.

''நானும்தான் சார்!'' என்றான் ரவி.

ரவியிடம் என்ன கேள்வி கேட்பது, ரவியைப் போய் கேள்வி கேட்பதா? ரவிக்கு நாம் எவ்வளவு நன்றிக் கடன்பட்டுள்ளோம். அதைத் தீர்ப்பதற்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடுவதா...?

சிறிதுநேரம் சிந்தித்த குமரேசன், ரவியைப் பார்த்து ''ஓ.கே மிஸ்டர் ரவி, ப்ளீஸ் வெயிட் இன் தி ரிசப்ஷன் டில் ஐ கால் யூ அகெய்ன்'' என்றார்.

''தாங்க் யூ ஸார்'' என்ற ரவி அவர் அறையை விட்டு வெளியேறினான்.

உடனே ஸ்டெனோவைக் கூப்பிட்ட குமரேசன், ரவியின் பெயரைக் குறிப்பிட்டு ஓர் அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் அடிக்க உத்தரவிட்டார்.

அந்த நேரம் பார்த்து, ப்யூன் ஒரு சீட்டைக் கொண்டு வந்து கொடுக்க, அதைப் பார்த்ததும்தான் குமரேசனுக்குத் தமது தவறு புரிந்தது!

சீட்டுக்குரியவரை உள்ளே அனுமதித்தான், பியூன்.

ராகவன்!

'அடக் கடவுளே, ராகவனிடம் கொடுத்த வாக்குறுதியை, மறந்தே போனேமே, நல்ல காலம். இவர் நேரில் வந்தது. உடனே மீண்டும் ஸ்டெனோவைக் கூப்பிட்டு, சற்றுமுன் தான் சொன்ன ஆர்டரை ரத்துசெய்துவிட்டு, ராகவன் முன்பு கொடுத்த சீட்டை அப்படியே ஸ்டெனோவிடம் கொடுத்து, அந்தப் பெயருக்கு ஆர்டர் தயார் செய்ய உத்திரவிட்டார்.

ஸ்டெனோ சிறிது நேரத்திற்கெல்லாம் கொண்டு வந்து கொடுத்த ஆர்டரில் கையெழுத்திடப் போன குமரேசன், அதில் ஆர். ரவி என்ற பெயரைப் பார்த்ததும், கோபமாக ஸ்டெனோவிடம் தவறைப் பற்றிச் சொல்ல, உடனே ஸ்டெனோ ''குமரேசன் தந்த சீட்டில்



''என்ன கமலா, தீபாவளியை எப்படிக் கொண்டாடினே?''

''ரொம்ப ஸிம்பிள்தான். ஒரே ஒரு ஸ்வீட், காரம்தான் பண்ணினேன். அவருக்கு ஒரு நாலு முழம் வேஷ்டி மட்டும் தான். எனக்குஇரண்டே இரண்டுபட்டுப் புடவை. அவ்வளவுதான்.''

— வி. ராஜேஸ்வரி.

உள்ள பெயரும் ஆர். ரவிதான்''. என்றான்.

அப்பொழுதுதான் குமரேசனுக்குப் புரிந்தது: ஆர். ரவி ராகவனின் மகன்தான் என்று. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் அவர் மனம் குளிர்ந்தது. உடனே ராகவனிடம் அவரது மகனை உள்ளே அழைத்து வரச் சொன்னார். உள்ளே நுழைந்த இளைஞனைப் பார்த்ததும் சப்பென்று ஆகிவிட்டது அவருக்கு!

காரணம், வந்த இளைஞன், குமரேசன் நினைத்திருந்த ஆர். ரவி அல்ல!

அப்படியானால் இருவர் பெயரும் ஆர். ரவியா? குமரேசன் தம் மனத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அந்த இளைஞன் கையில் ஆர்டரைக் கொடுத்து, அவனை கங்கிராட்ஸ் செய்து அனுப்பினார்.

ராகவன் விடைபெற்றுச் சென்றவுடன், தாம் காத்திருக்கச் சொன்ன ஆர். ரவியை உள்ளே அழைத்தார்.


''ஐ ஆம் சாரி மிஸ்டர் ரவி. எதிர்பாராத சில காரணங்களினால் நான் உங்களுக்கு உதவ முடியாமல் போய் விட்டது. மேலும் உங்களை வீணாகவும் காக்க வைத்து விட்டேன்'' என்றார் குமரேசன் மிகவும் வருத்தத்துடன்.

''அப்படிச் சொல்லாதீர்கள் சார். நீங்கள் என்னை எதுவுமே கேள்வி கேட்காமல் அனுப்பிய போதே நீங்கள் அந்த ஓட்டல் சம்பவத்தை மனத்தில் வைத்து, எனக்கு இந்த வேலையைத் தீர்மானித்து விட்டீர்களோ என்று நினைத்துப் பயந்தேன். ஆனால் நீங்கள் அதைச் செய்யவில்லை என்று தெரிகிறது. அதற்கான காரணம் எதுவாயினும், எனக்கு இப்பொழுதுதான் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது சார்!'' என்றான் ரவி.


''அன்று உரிய பொருளை உரியவரிடம் சேர்ப்பித்து மகிழ்ச்சியடைந்தாய். இன்று தாட்சண்யத்தின் பேரில் கிடைக்கவிருந்த வேலை, கிடைக்காமல் போனதற்குச் சந்தோஷப்படுகிறாய். உன் மனத்திற்கேற்றபடி, மகிழ்ச்சி உன்னைத் தேடிக் கொண்டு வந்து விடுகிறது. எனக்குத்தான் மனநிறைவு ஏற்படவில்லை பிரதர். இண்டர்வியூ செய்த நான்தான் தோல்வி அடைந்து நிற்கிறேன்...'' என்றார் குமரேசன் நாத் தழுதழுக்க.

''உங்கள் மனநிலை எனக்குப் புரிகிறது சார். எனக்கு வேலை கிடைத்ததும் முதல் காரியமாக, அந்த மகிழ்ச்சியை உங்களுடன் கட்டாயம் பகிர்ந்து கொள்கிறேன் சார். இப்பொழுது என்னை ஆசீர்வதித்து விடை கொடுங்கள் சார்'' என்றான், அதே புன்முறுவலுடன்!

''பெஸ்ட் ஆஃப் லக் பிரதர்'' என்று விடைகொடுத்த குமரேசன், தம்மை நன்றிக்கடன் பட்டவனாக ஆக்கிய அந்த வித்தியாசமான இளைஞன் போவதையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்!



மோதி காண்டினெண்டல்
R80 நைலான் கார் டயர்



ஆம், உண்மையைச் சொல்லப்போனால், இது ஒரு ஒப்பற்ற, அரிய படைப்பு !

ஆராய்ச்சியே இதன் முதலீடு

பல கோடி ரூபாய் செலவிலான மோதி காண்டினெண்டல் ஆராய்ச்சியே, நிகரற்ற தொழில் நுட்பச் சிறப்புடைய இந்த R80 நைலான் கார் டயரைப் படைத்துள்ளது.

மேலும் பல சிறப்புகள்.

உயரிய R80 ப்ரீமியம் டயர், கூடுதல் அகலம் கொண்டதால், அதிக உறுதியான பிடிமானத்தைத் தருகிறது.

சாலையில் நீங்கள் செல்லும் போது, இதுவரை அறிந்திராத அந்த ஒரு பிடிமானத்தை R80 அளிப்பதற்கு இன்னும் இரு காரணங்கள் : விஞ்ஞான ரீதியில் வடிவமைக்கப்பட்ட, 15% அதிக நான்-ஸ்கிட் டெப்த் (சருக்காமல், வழுகாமல் இருக்க 15% அதிக ஆழமுடையது) அடங்கிய ட்ரட் பரப்பு, செறிந்து, வரிந்து அமைக்கப்பட்ட ஏழு ரிப்புகள்.

எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டது.

ஆம், இது எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்ட ஒரு படைப்பு இதனால் நீங்கள் ஒரு போதும் நினைத்துப் பார்த்திராத மேம்பட்ட மைலேஜ் இப்பொழுது கிடைத்திடும் வாய்ப்புள்ளது. உயரிய தொழில்திறன் அளித்திடும் இந்த வாய்ப்பினை நழுவ விட்டு விடாதீர்கள். R80 க்கு மாறுங்கள்- இனி நீங்கள் வேறெந்த டயருக்கும் மாறமாட்டீர்கள்.



மோதி காண்டினெண்டல்
ஒரு போதும் அயராத டயர்

4

புவனாவுக்குப் பள்ளிக்கூடமும், படிப்பும் வேப்பங்காயாக இருந்ததில்லை. வகுப்பில் அவள் எப்போதும் முதல் மூன்று இடங்களுக்குள் ஒன்றைப் பெற்று விடுவாள். ஆனாலும் அவள் வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் தோன்றும் குதூகலம் விடுமுறை நாளன்றுதான் தோன்றும். பெண்களுக்கு வெள்ளி, செவ்வாய் எண்ணெய்க் குளி என்ற விதி முறையைப் பள்ளிப் படிப்பு மாற்றி, எழுதிவிட, விடுமுறையான ஞாயிற்றுக்கிழமையன்று காலையில் எண்ணெய்க் குளி என்பது மாணவிகளின் வழக்கமாயிற்று.

சனிக்கிழமை இரவே வெந்நீர்த் தவலையை லோகுவும், புவனாவுமாகச் சேர்ந்து புளியும், சாம்பலும் கலந்து தேய்த்து முற்றத்தில் கவிழ்த்து விடுவார்கள். வெந்நீர் அடுப்பை மாட்டுச் சாணியால் மெழுகிக் கோலம் போட்டு வைப்பார்கள். புவனா வாசல் தெளிக்கும் போதே லோகேஸ்வரி கிணற்றிலிருந்து நீர் சேந்தி வெந்நீர்த் தவலையில் நிரப்பி, எருமுட்டை வைத்து அடுப்பை ஏற்றி இரண்டு விறகையும் செருகி விடுவாள். வாரத்தில் ஒரு நாள் மட்டும் வெந்நீர் போட்டுக் குளிப்பதென்பது சுலபமாக இருந்ததால், ஒவ்வொருவராக எண்ணெய் ஸ்நானம் துவங்கும்.

இரண்டாண்டுகள் முன் வரை சுந்தரம் அதிகாலையிலேயே புவனாவுக்குத் தலையில் எண்ணெய் வைத்துவிடுவார். சின்ன ஜட்டி, மட்டும் அணிந்து தலையிலும், உடம்பிலும் எண்ணெய் சொட்ட வீடு முழுவதும் ஓடி விளையாடுவாள். ''அடியே புவனா, எண்ணெய்க் கையைச் சுவரில வைக்காதே. அச்சோ... எண்ணெய் கையுடன் புஸ்தகத்தை எடுக்காதே...'' என்று இவள் விஷ



மங்களை கவனித்துக் கத்தவே ஞானசுந்தரிக்கு நேரம் சரியாக இருக்கும்... "என்னங்க, உங்க பொண்ணுக்குக் கடவுள் வால் மட்டும்தான் வைக்கவில்லை" என்று கணவனிடம் பெருமையாக முறையிடுவாள். மகளின் துடிப்பும், சுறுசுறுப்பும் இருவருக்குமே பெருமைதான். தலையில் பொடுகு என்று எண்ணெயில் வால் மிளகும், மிளகாய் வற்றலும் போட்டுத் தடவிய தினம் வீட்டில் ஒருவருக்கும் மறக்காது. வழக்கமான குதியலுடன் புவனா விளையாட, காரமான எண்ணெய் கண்ணில் வழிய அவள் உருண்டு, புரண்டு செய்த ஆர்ப்பாட்டத்தை இன்றும் அந்தக் குடும்பத்தினர் சொல்லிக் காட்டிப் புவனாவைக் கேலி செய்வார்கள்.

புவனா இப்போது அப்பா தலையில் போடும் தாளத்திற்குத் தலை அசைத்தபடியே எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் சின்னக் குழந்தையல்ல. மொட்டவிழத் துவங்கியிருந்த உடம்பு இப்போது பெருமைக்குரியதும், போற்றப்பட வேண்டியதுமான ஒன்று என்று புரிந்து போயிற்று. அந்த உணர்வே நாணத்தைத் தந்தது. அப்பாவானாலும் ஆண்மை அந்நியமாயிற்று.

"வாடி புவனா... எனக்கு அரிசி களைந்து போட்டு உலை ஏற்றணும்" என்று அம்மா அழைக்கவும், சின்ன மணைப் பலகையைத் தூக்கிக் கொண்டு குளியலறைக்குள் வந்தாள். "சீக்கிரம் பாவாடையை அவிழ்த்து விட்டுத் துண்டைக் கட்டிக் கொள்" என்று அம்மா அவசரப்படுத்தவும் "கதவைத் தாழ்ப்பாள் போடும்மா" என்று கொஞ்சினாள்.

"அடி போடி அசட்டுப் பெண்ணே! எல்லாப் பெண்களுக்கும் இருக்கிறதுதானே உனக்கும் இருக்கும். அம்மா கிட்டக் கூட வெட்கமா என்ன? நாளைக்குக் கல்யாணமாகி, குழந்தை பெறப் போவதில்லை?" ஞானம் புவனாவைப் பிடித்து இழுத்து மணைப் பலகையில் உட்கார வைத்தாள்.

புவனாவுக்கு அம்மா மேல் கோபம் கோபமாக வந்தது. அம்மா ஏனிப்படி அசிங்கமாகப் பேசுகிறான். அவள் பெண்மையை நிர்வாணப்படுத்தி மிகச் சாதாரணமாக்கி விட்டாளே... அம்மா பிறக்கும் போதே அம்மாவாகவா பிறந்தாள்? அவளும் புவனாவைப் போலச் சின்னப் பெண்ணாக இருந்து, பின்தானே வளர்ந்திருப்பாள்? ஒருகால் அம்மாவான பிறகு நாசூக்குக் குறைந்து விடுமோ?' மலையாளத்து முண்டை மார்புக்கு மேல் இழுத்துக் கட்டிக் கொண்டு மணையில் குறுக்கிக் கொண்டு உட்கார்ந்தாள். "உடம்பு சூடு கண்டு போச்சு, மயிர் கூழை பாய்ந்து விட்டது" என்று ஏதோ பேசியவாறே ஞானம் எண்ணெயைத் தேய்த்தாள். "அதிகம் ஊறாதே... சீக்கிரம் குளித்து விட்டு வா. எனக்கு நேரமாகிறது" என்று எண்ணெய்க் கிண்ணத்தை வழித்து நெற்றியிலும், கன்னத்திலும், முகவாயிலும் பொட்டு வைத்துவிட்டு அவசரமாகக் கதவை மூடிக் கொண்டு வெளியேறினான்.

புவனா எண்ணெயுடன் காத்திருக்கவில்லை. உசிலம்பொடியை அழுத்தி அழுத்தித் தலையிலும், உடம்பிலும் தேய்த்துக் கொண்டாள்.



வெந்நீரை விளாவாமலே அண்டாவிலிருந்து நேரே எடுத்துத் தலையில் ஊற்றிக் கொண்டாள். பலத்த குரலில் அமிர்த வர்ஷிணி ராகத்தை ஆலாபனையில் இழுத்தாள்.

''புவனு, இந்த மழைக்காலத்திலே, இரவு பெய்த மழை இலைகளிலிருந்து சொட்டுச் சொட்டாக் கொட்டுகிறதைப் பாரு... அந்தப் பறவை உடம்பைச் சிலிர்த்துண்டு எப்படிச் சிறகடித்துக் கொண்டு பறக்கிறது பார்... ஆத்தங்கரைமணல்காலேஒட்றபோதுகுளிர்ச்சியா இருக்கு... இது மழை பெய்த மறுநாள் காட்சி. ஆனு, 'சோ'ன்னு மழை பெய்யறபோது இப்படி மனசுக்கு இதமா இருக்காது... அது ஒரு பிரமிப்பு, மிரட்சி, பயம், எல்லாம் தோற்றுவிக்கும். ஆதி மனுஷன் கடவுளை எப்படிப் படைத்தான்னு நினைக்கறே... இந்த மழையும், வெளிச்சமும், சூரியனும் அவனைத் திகைக்க வைத்திருக்கு. இந்த இயற்கைச் சக்திக்கு முன் தான் எவ்வளவு அற்பமானவன்கற உணர்வைத் தோற்றுவிச்சிருக்கும்... அதனால்தான் கையைத் தலைக்கு மேலே தூக்கி... சூரியனே உன்னை நமஸ்கரிக்கிறேன் என்றான்...'' — அப்பா மழை பெய்த ஒரு மறுநாள் காலையில் சொன்னார்.

அந்த மழைநாளில்தான் அப்பா அமிர்த வர்ஷிணி ராகத்தை அவளுக்கு விளக்கினார். இந்தக் கரிபடிந்த, கதவு உடைந்த குளியலறையில் தலைமேல் தண்ணீரைக் கொட்டிக் கொள்ளும் போதும் அதே அமிர்தவர்ஷிணிதான் பீரிட்டு எழும்பியது.

''அடீ... புவனு... குளிக்கறியா, கச்சேரி செய்யறியா...? வாடீ வெளியே.'' அம்மாவின் குரல் வெளியே கோபமாகக் கேட்டது. புவனு குறும்புச் சிரிப்புடன் மஞ்சளைக் கல்லில் இழைத்தபடி இன்னும் பெரிதாகப் பாடினாள். இப்போது... கதவு பட, படவெனத் தட்டப்பட்டது.

நிதானமாகக் குளித்து, நாடாப் பாவாடையைக் கழுத்து வரை கட்டிக் கொண்டு புவனு கதவைத் திறக்கவும், ஞானம் அந்த வேகத்தில் ஏறக்குறைய கீழே விழுந்தபடி உள்ளே வந்தாள். புவனு அம்மாவின் அவசரத்தைப் பார்த்துக் ''குபீர்'' எனச் சிரித்தாள்.

பருப்பு அரைத்த கறியும், பூண்டு ரசமும் சுடச் சுடச் சாப்பிட்ட பின், அம்மா தூங்கப் போக, லோகேச்வரி மாத நாவல் ஒன்றுடன் மூலையில் உட்கார, புவனுவுக்குப் பொழுது போவது பிரச்னையாயிற்று. சென்னைக்குப் போன போது அவள் உறவினர் குழந்தைகள் ஞாயிற்றுக்கிழமை முழுவதும் டெலிவிஷன் முன் உட்கார்ந்து விதவிதமாகப் படம் பார்த்தார்கள். புரியாத மொழி நாடகங்களைப் பார்த்து ரசித்தார்கள். வாழ்ந்தால் பட்டணத்தில் வாழ வேண்டும்... இந்தக் கிராமத்தில் பொழுதைக் கடத்துவது பெரிய பிரச்னைதான். ''ஏய், லோகு... வாயேண்டீ... பாண்டி விளையாடலாம்'' என்று அழைத்துப் பார்த்தாள்.

''நான் என்ன உன்னைப் போல ரெண்டுங் கெட்டானு... நான் ஒண்ணும் விளையாட வரல்லே...'' என்று அவள் 'சூள்' கொட்டினாள். ''இந்தா ரேடியோ, கேள்.''

புவனு ரேடியோவை ஸ்டேஷன், ஸ்டேஷனாகத் திருப்பிப் பார்த்தாள். மகளிர் நிகழ்ச்சியில் அதிகம் குழந்தை பெற்றுக் கொள்ளாமலிருப்பதன் அவசியத்தை யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள். கன்னடத்தில் சினிமாப் பாட்டுப் பாடியது. ஆப்பிரிக்க சங்கீதமோ, அமெரிக்க சங்கீதமோ விசித்திரமாய் உயர்ந்த சுருதியில் கத்தியது. புவனு அத்துடன் சேர்ந்து குரலெடுத்துக் கத்த முயல, லோகேஸ்வரி அவள் வாயை மூடினாள். ''அம்மா தூங்கறாங்க... கொஞ்ச நேரம்தான் சும்மாக் கிடவேன்.....''

புவனு எழுந்து முன் அறையில் எட்டிப் பார்த்தாள். அப்பா விடைத்தாள்களைத் திருத்திக் கொண்டிருந்தார். சில காலமாக அவர் படிப்பதற்குக் கண்ணாடி அணிந்து கொள்ள ஆரம்பித்திருந்தார். புவனுவுக்கு அந்தக் கண்ணாடிமேல் ஒரே வெறுப்பு. அதை அணிந்து கொண்டாலே அப்பாவுக்கு வயதானாற்போன்ற தோற்றம் வந்துவிடுகிறது. அவள் இதைச் சொன்ன போது சுந்தரம் சிரித்தார். ''பின்னே, எனக்கு வயசாகல்லியா புவனு...? லோகுவுக்குக் கல்யாணம் செய்து வைத்தால், அடுத்த வருஷம் நான் தாத்தாவாகி விடுவேன்.'' புவனு அப்பாவை வியப்புடன் பார்த்தாள். அவளைப் பொறுத்தவரை அவர் அவள் நண்பன், மரியாதைக்குரிய நண்பன். அதனால் அவர் வயது பெரிய விஷயமாகப் படவில்லை. ஆனால் அப்பா தாத்தாவாகி விடுவார் என்றும் ஏற்க முடியவில்லை.

''என்ன புவனு, கதவருகிலேயே நிற்கறே?'' கண்ணாடியைக் கழற்றியபடியே சுந்தரம் அவளை அழைத்தார்.

''ஒண்ணுமில்லேப்பா.. பொழுது போகவில்லை. லோகு விளையாடக் கூப்பிட்டால் வரமாட்டேங்கறா... அதான் நீங்க என்ன செய்யறீங்கன்னு பார்த்தேன்...''

இந்த ஓயாத துடிப்புக்கும், வேகத்துக்கும், ஆர்வத்திற்கும், சக்திக்கும் நிறையத் தீனி போட்டால்தான் இந்தச் செடி செழுமையாக வளர முடியும். இவளை, பெற்றவளோ, உடன் பிறந்தவளோ புரிந்து கொள்ளவே போவதில்லை. இவளை வீட்டுக்கு வெளியே விட்டால், தென்னை மரத்தில் ஏறிப் பார்ப்பாள். ஆற்றின் மறுகோடிக்கு நீந்தி விட்டு வருவாள். ஒன்றரை மணி நேரம் கச்சேரி செய்வாள்.,.. அத்தனையும் செய்து விட்டு அடுத்தது என்ன என்று ஆர்வத்துடன் ஆணைக்குக் காத்து நிற்பாள். இவள் வயதும், பருவமும் அப்படி... இவள் குழந்தையில்லை. ஆனால், இவள் குழந்தைப் பருவம் இன்னும் முடியவில்லை. இவள் பெரியவர்களின் உணர்வுகளை இன்னும் பெறவில்லை. ஆனால் பெரியவள் என்னும் அந்தஸ்துப் பெற்று விட்டாள்.

''பாட்டு கத்துத் தர்றீங்களாப்பா?''

''இப்போவா?'' சுந்தரம் சிரித்தார்.



இவருக்கு ஒரு வணக்கம்!

பொள்ளாச்சி நகரசபைப் பெண்கள் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியை திருமதி சிவபாக்கியம் ஓர் உறுதி பூண்டிருக்கிறார். தாம் ஓய்வு பெறுவதற்குள் பள்ளிக்குப் போதுமான வகுப்பறைகளைக் கட்டிக் கொடுத்துவிட வேண்டும் என்ற உறுதிதான் அது.

சுமார் மூவாயிரம் மாணவிகள் படிக்கும் இந்த மேல்நிலைப் பள்ளிதான் 20 கி.மீ. சுற்று வட்டாரத்தில் உள்ள ஒரே பெண்கள் மேல்நிலைப் பள்ளி. கிராமங்களிலிருந்து வரும் பெண்கள், காலை ஏழு மணிக்கே புறப்பட்டு வர வேண்டிய நிலை. அதேபோல் மாலையும் ஊர் போய்ச் சேர இருட்டாகிவிடும். இதற்கு என்ன காரணம்? ஐம்பத்திரண்டு வகுப்பறைகள் இருந்தால்தான் போதுமானதாக இருக்கும் என்ற நிலையில் இந்தப் பள்ளியில் இருப்பதோ முப்பத்தொரு வகுப்பறைகள்தான். அதிலும் ஆறு அறைகள்தான் மழை பெய்தால் ஒழுகாத அளவுக்குப் பக்காவாகக் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள். மற்றவையெல்லாம் வெறும் கீற்றுக் கொட்டகைகள்தான். ஷிப்ட் முறையில் வைத்தும், பல வகுப்புகள் மரத்தடிகளில் நடக்கும் அவலம்தான்! (அந்த மரங்களிலும் கம்பளிப் பூச்சிகளின் தொல்லை என்பதால் அவ்வப்போது மருந் தடித்துக் கொண்டிருக்கிறார்கள் முனிசிபாலிடியினர்!)

இந்தப் பிரச்னையைத் தீர்க்க முனிசிபாலிட்டியிடம் பணம் இல்லை. இந்நிலையில் ஒரு தலைமை ஆசிரியையால் என்ன செய்ய முடியும் என்று சும்மா இருக்காமல், திருமதி சிவபாக்கியம், மாலை ஐந்தேகால் மணிக்குப் பள்ளியின் இரண்டு ஷிப்டுகளையும் முடித்துக் கொண்டு, அதற்குமேல் ஊரிலுள்ள பணக்காரர்களைச் சந்தித்துக் கட்டட நிதி கேட்பது, பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

நேரில் சந்தித்த போது, ''என்னங்க செய்யறது? இவுங்களெல்லாம் ஆரு? நம்மகொழந்தைங்கதானுங்களே! அவங்களுக்குச் செய்யாமெ வேறே ஆருக்குங்க செய்யப் போறோம்? எங்காலத்திலயாவது கட்டடங்களைக் கட்டி முடிச்சுப் போட்டேன்னு நிம்மதியாப் போவுமுங்க...!'' என்று அவர் நிஜமான ஈடுபாட்டோடு கூறியபோது, இவரைப் போல் எல்லோரும் இருந்துவிட்டால் நம் குழந்தைகளுக்கு ஏது குறை என்று நாங்கள் நெகிழ்ந்து போனோம்.

''உங்கம்மா தூக்கம் கெட்டு விட்டதுன்னு நம்ம ரெண்டு பேரையும் சும்மா விடமாட்டா. ரேடியோவில் எதுவுமில்லையா இப்போ... ஞாயிற்றுக்கிழமை நாடகம் இருக்குமே...''

''அதுக்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கு. என்ன செய்யட்டும் சொல்லுங்க...?''

இவளைப் போய்த் தூங்கு என்று சொல்ல முடியாது. இவள் மனத்துக்கும், உடம்புக்கும் மதியம்தூங்குகிற வயசில்லை. இந்தஞாயிற்றுக் கிழமை மதிய நேரத்தில் இவளுக்கு என்ன வேலை கொடுக்கலாம்...? பொழுது போகாவிட்டால் இவளும் லோகேஸ்வரி மாதிரி மதியம் முழுவதும் மாத நாவல் படிப்பாள். அறிவு வளர்கிறதோ இல்லையோ, வாய்ப்புகள் முடங்கிவிட்ட பலருக்கும் இவை பொழுது போவதற்காகவாவது பயன்படுகிறது. அந்தக் காலம் வரும் வரை இவளை ஏன் அடக்க வேண்டும்?

''அப்பா, சேகர் வீட்டுக்குப் போய் மல்லிகைப்பூ பறிச்சுட்டு வரட்டா?''

''ஆங்... போ...'' நல்லவேளை, இவளுக்கே பொழுதைக் கழிக்க ஒரு வழி தோன்றிவிட்டது.

புவனா குதிநடையுடன் கையில் பூக்கூடையைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள். கூடை வழியப் பூவுடன் வந்தால் அம்மா சந்தோஷப்படுவாள். அவளும் லோகுவுமாகத் தொடுத்தால் சாயந்திரம் தலைநிறைய வைத்துக் கொள்ளலாம்... சேகருடைய பாட்டி மிகவும் நல்லவள். மற்றவர்களிடம் எவ்வளவு கண்டிப்பானவளாக இருந்தாலும், சுந்தரத்திடமும் அவர் குழந்தைகளிடமும் மிகவும் அன்பாகப் பழகுவாள். அதுவும் அவர்கள் வீட்டில் பூக்கும் பூக்கள் இவர்கள் தலையில் தான் மலரும். நாகம்மாப் பாட்டி போடும் ஒரே கண்டிஷன் அவர்கள் ஆஞ்சநேயருக்குப் பறித்த பூவில் ஒரு மாலை கட்டித் தரவேண்டும். அதோடு புவனா சென்றால் அவளை நிறுத்தி ஒரு பாட்டும்பாட வைத்து விடுவாள்.

சேகரின் பெற்றோர் வரும்போதெல்லாம் புவனாவைக் காண்பித்து, ''ஏண்டா கிருஷ்ணா, எனக்கு இந்த மாதிரி சூடிகையா ஒரு பேத்தியைப் பெற்றுத் தராமலே ஏமாற்றி விட்டேளே....'' என்று குறைபடுவாள்.

''இவளை நம்ம வீட்டுக் குழந்தை தானே...'' என்று கிருஷ்ணன் புவனாவின் தலையைக் கோதி விடுவார்.

நாகம்மாப் பாட்டி அவளைத் தன் வீட்டுக் குழந்தையாகத்தான் நினைத்தாள் — அவள் சமையலறையில் வராதவரையிலும், தன் மடி, ஆசாரத்தைக் குலைக்காத வரையிலும்.

கிராமங்களில் இன்னும் அன்பையும் விடப் பலமாக ஆட்சி புரிவது சாதி சம்பிரதாயங்களே...

(தொடரும்)

கல்லூரித் தேர்தல்



கல்லூரிகளில் மாணவர் யூனியனும் தேர்தலும் கண்டிப்பாகத் தேவை; முதல் பரிசு வாதம்!

* மாணவர்களின் மத்தியில் ஜனநாயக எண்ணங்களையும், நாட்டின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக் கூடிய வாக்குகளைப் பிற்காலத்தில் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்குப் பயிற்றுவிக்கலாம்.

* உலகில் உள்ள பல நாடுகளின் சரித்திரத்தை மாற்றியமைப்பதில், மாணவர்கள் பெரும்பங்கு வகித்தனர். அப்படிப்பட்ட மாணவர்களுக்குத் தங்களது யூனியனையும், வாக்குரிமையையும் பயன்படுத்தத் தெரியாது என்பது காலத்துக்கு ஒவ்வாதது.

* மாணவர்கள் பேரவையை, வன்முறை ஏற்படுவதால் தடை செய்ய வேண்டும் என்று கூறுவது தவறு. இக்கூற்று, நாட்டில் பொதுத் தேர்தலிலேயே வன்முறை ஏற்படுகிறது, அதற்காகப் பொதுத் தேர்தலே வேண்டாம் என்று சொல்வது போல இருக்கிறது.

* மாணவர்களின் பாட, திட்டத்தின் மூலம் எதிர்காலச் சமுதாயத்தினருக்கு வழிகாட்டலாம். பாட திட்டத்தை நிர்ணயிக்கும் அமைப்பான செனட், சிண்டிகேட் போன்றவற்றிலேயே பல பல்கலைக்கழகங்களில் மாணவப் பிரதிநிதிகள் உள்ளனர். இப்பிரதிநிதிகளை உருவாக்கச் சிறந்த வழி சட்டப் பூர்வமான மாணவர் பேரவைத் தேர்தல்.

* நாட்டின் பள்ளி, கல்லூரிகளில் உள்ள பெரும்பான்மை மாணவர்களின் எண்ணத் துடிப்பை, வெளிக் கொண்டு வரும் ஒரே அமைப்பு, மாணவர் பேரவைத் தேர்தல். இதன் மூலமே மாணவர்களின் பிரச்னையை அறிந்து அவற்றைக் களைய வழி செய்ய முடியும்.

* பெரும்பான்மை மாணவர்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் மாணவர் பேரவைத் தேர்தல் மூலம் வரும் பிரதிநிதிகளே, யதார்த்தத்தில் மாணவர்களின் பிரச்னையைப் புரிந்து கொள்ள முடியும். நியமன மாணவப் பிரதிநிதிகள் ரப்பர் ஸ்டாம்புகளே!

* மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும், எந்த ஓர் அமைப்பைத் தீர்மானிக்கும் உரிமையும் மாணவர்களுக்குத் தரப்பட வேண்டும். இதுவே அடிப்படை ஜனநாயகம்!

— மு. மகாலிங்கம், பாண்டி — 1.

வாசகர் தீர்ப்பு!

கல்லூரிகளில் மாணவர் யூனியனும் தேர்தலும் கண்டனத்துக்குரியவை!	62%
கல்லூரிகளில் மாணவர் யூனியனும் தேர்தலும் கண்டிப்பாகத் தேவை!	38%

கல்லூரிகளில் சரியான மருத்துவ வசதி, மற்றும் சுகாதாரமான சூழ்நிலை போன்ற அத்தியாவசியமான தேவைகளைக் கவனிக்கவும் ஒழுக்கம், ஒற்றுமை, சமத்துவம், கட்டுப்பாடு ஆகியவற்றை மாணவர்களிடையே நிலைநிறுத்தவும், வெள்ளம், வறட்சிபோன்றநெருக்கடியான காலங்களில் மாணவர் குழு தங்களால் முடிந்த அளவுக்குச் சமுதாயப் பணி ஆற்றவும் யூனியனும், தலைவரும் அவசியம்.

தலைவனின் பின்னல் கட்டுக்கோப்புடன் செயல்படும் வாழ்க்கை, நம்முடன் சரித்திர காலம் முதல் இணைந்துள்ளது. பள்ளியில் முதல் வகுப்புப் படிக்கும் போதே, ஒரு தலைவனை (கிளாஸ் லீடர்) பார்த்திருக்கும் நமக்கு, கல்லூரித் தேர்தல் மிக அவசியமே.

— ஆர். சங்கரன், வந்தவாசி (வ.ஆ.மா.)

மாணவர்களுக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களே இப்போது யூனியன் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குள் தேர்தலும் நடத்தித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களது கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் போராட்டத்திலும் ஈடுபடுகிறார்கள். ஆசிரியர்களுக்கே யூனியன் தேவைப்படுகிறது என்றால், அவர்களிடம் கற்கும் மாணவர்களுக்கு மட்டும் இந்த உரிமையை மறுப்பது எந்த விதத்தில் நியாயம்?

— ப. கல்யாணம், பழனி.

சென்னையில் புகழ்பெற்ற ஒரு கல்லூரியில் நடந்த சம்பவம் இது: 'பெர்னாட்ஷா' எழுதிய '**Arms and the Man**' என்ற நாடகத்தை நடத்தியதற்காக, அந்த நாடகத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும், விழா மேடையிலேயே சஸ்பெண்ட் செய்தார் கல்லூரி முதல்வர். அதற்கு அவர் கூறிய காரணம், 'நாடகம் சிறிது ஆபாசமாக உள்ளது' என்பதே. மாணவர் யூனியன் தலையிட்டதன் பேரில், சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் மன்னிப்புக் கடிதம் பெற்றுக் கொண்டு அவர்களை மீண்டும் கல்லூரியில் அனுமதித்தார் முதல்வர். மாணவர் யூனியன் மட்டும் இல்லாதிருந்தால், அந்த மாணவர்களின் நிலை மிகப் பரிதாபமாக இருந்திருக்கும். அதே கல்லூரி முதல்வர், இன்று மாணவர் தலைவர் உதவியுடன் ராகிங்கைப் பெரிதும் கட்டுப்படுத்தியுள்ளார். இதிலிருந்தே மாணவர் யூனியனின் முக்கியப் பங்கை உணரலாம்.

— ஜே.ஜி.எஸ். பாலாஜ், சென்னை — 78.

இன்றைக்குக் கல்லூரிகளில் பயில்கிறவர்கள் ஏறத்தாழப் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களே. இவர்கள் உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்குரிமை பெற்றவர்கள், சட்டரீதியில் மேஜர் அந்தஸ்து உள்ளவர்கள், தங்கள் பெயரில் சொத்து வாங்க, விற்க, வியாபாரம் முதலிய பல தொழில்கள் செய்யத் தகுதி பெற்றவர்கள். இவர்களுக்குக் கல்லூரியில் நடைபெறும் சாதாரணத் தேர்தலில் பங்கேற்க வாய்ப்புக்கள் அளிக்காதது நடைமுறைக்கு ஒவ்வாதது. கல்லூரி நிர்வாகம், மாணவர்கள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுக்கும், எல்லா மாணவர்களையும் கலந்தாலோசிப்பது சாத்தியமல்ல. மாணவர்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிப்பதே சாத்தியமானது. வயதானவர்களே நாட்டின் அரசியல், சமூக வாழ்வை ஆக்கிரமித்து வருகிறார்கள் என ஒருபக்கம் குற்றம் சாட்டிக் கொண்டு மறுபக்கத்தில் இளைஞர்கள் தலைமைப் பதவிகளுக்குரிய பண்புகளை வளர்த்துக் கொள்ளும் முயற்சிக்குத் தடை விதிப்பது ஆரோக்கியமான செயல் அல்ல.

— எம். பரமசிவம், திருச்சி — 20.

மாணவர் தலைவர் தேர்தல் தடை செய்யப்படுமானால், மாணவர்கள் கல்லூரி நிர்வாகங்களின் கொத்தடிமைகளாகத்தான் நடத்தப்படுவார்கள். உதாரணமாக, இன்றைய மாலைநேர வகுப்புகளையே எடுத்துக்கொள்ளலாம். இதற்குத் தேர்தல்கள் கிடையாது. அதனால் நிர்வாகத்தின் முடிவுகள் மாணவர்களின் மீது திணிக்கப்படுகின்றன. எதிர்க் கேள்வி கேட்டு நியாயம் பேசும் மாணவனின் எதிர்காலம் பாழாக்கப்படும். சில மாலை நேரக் கல்லூரி மாணவர்களுக்கு முழு நேரக் கல்லூரி யூனியனே உதவி செய்கிறது. அப்படி உதவி பெறுகிறவர்கள் மட்டுமே நியாய உணர்வுடன் நடத்தப்படுகின்றனர்.

— மேகதூதன், ஸ்ரீரங்கம்

கல்லூரிகளில் மாணவர் யூனியனும் தேர்தலும் கண்டனத்துக்குரியவை! முதல் பரிசு வாதம்!

தேர்தலுக்கு முன்னால், இரண்டு வாரங்கள், பிரசாரம் என்ற பெயரிலும் தேர்தலுக்குப் பின்னால், வெற்றி விழாக்கள் மற்றும் தோல்வியின் துக்கங்கள் காரணமாகவும் வகுப்புகள் ஒழுங்காக நடைபெறுவது தடைப்படுகிறது.

தேர்தலுக்கு முன்னும், பின்னும் கூச்சல், குழப்பம், ஒழுங்கின்மை ஆகியவை அதிகமாகின்றன. இந்த ஒழுங்கின்மை, கல்வியாண்டு முழுவதும் தொடர வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது.

கல்லூரியில் மட்டுமல்லாது, நகர் முழுவதும் போஸ்டர் ஒட்டுவதும், சுவர்களில் எழுதுவதும், நடைபெறுவதால் நகரின் தூய்மை கெடுகிறது. ஒலிபெருக்கிகளை வாகனங்களில் கட்டிக் கொண்டு, ஊர் முழுவதும் கத்துவதால் 'ஒலி மாசு' (Sound Pollution) அதிகமாகிறது. இதனால் பொதுமக்கள் பெருந்துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். பிரசார சமயத்திலும், வெற்றி விழா ஊர்வலங்கள் நடைபெறும் போதும் நகர் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது.

இத்தேர்தல்களில் அரசியல் கட்சிகள் தலையிட்டு, மாணவர்களிடையே பிரிவுகளைத்

(groups) தோற்றுவித்து, விளைவுகளைத் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். மேலும் மாணவர்களிடையே சாதிவாரியான பிரிவுகள் ஏற்பட்டு, அதனால் கருத்து வேற்றுமைகளும், மனக்கசப்பும் முற்றுகின்றன.

தேர்தலுக்குப் பின்னால் வென்ற மற்றும் தோற்ற பிரிவுகளுக்கு இடையே நிரந்தரப் பகையுணர்வு ஏற்பட்டு விடுகிறது. இவர்களுக்கிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு வன்முறையில் போய் முடிகிறது. கல்லூரி மூடப்பட்டு, கல்வி பாதிக்கப்படுகிறது.

மாணவர்களிடையே ஏற்படும் மோதல்களால் கல்லூரிச் சொத்துக்களுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் ஏராளமான சேதம் ஏற்படுகிறது. நகரின் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்பட்டு, பதற்றம் ஏற்படுகிறது. இதனால் மாணவர்களுக்கும் போலீஸாருக்கும் இடையே பகையுணர்வு ஏற்பட்டு விடுகிறது.

தேர்தலில் அதிகப் பணம் செலவு செய்யும் மாணவரே வெற்றி பெறும் நிலை உள்ளது. இது ஜனநாயகத்தைப் பற்றிய தவறான ஒரு அபிப்பிராயத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தி விடுகிறது.

வெற்றி பெறும் தலைவர்கள், முதல்வரையும் ஆசிரியர்களையும் தங்கள் எதிரிகளாகப் பாவித்து, அவர்களுக்கு எதிராக ஒரு போட்டி நிர்வாகத்தை நடத்த முனைகின்றனர். இவர்களைச் சமாளிக்கவே ஆசிரியர்கள் தங்கள் ஆற்றலையும், நேரத்தையும் செலவிட வேண்டியிருப்பதால், கல்வியில் செலுத்தும் அக்கறை குறைகிறது.

இவர்களின் வயது மற்றும் மனமுதிர்ச்சியின்மை காரணமாக (நல்ல காரணங்களுக்காகப் போராடுவதை விடுத்து) தேவையற்ற காரணங்களுக்காகவும், வெளியாரால் (அரசியல்வாதிகளால்) தூண்டிவிடப்பட்ட கெட்ட காரணங்களுக்காகவும் மட்டுமே போராட்டத்தில் குதிக்கின்றனர்.

தலைவர்கள் வேலை நிறுத்தம் அறிவிக்கும் போது, அதில் கலந்து கொள்ள விருப்பமில்லாத மாணவர்கள் கூட வன்முறைக்குப் பயந்து, அவ்வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. மாணவர்கள் கல்லூரிக்கு வருவதன் நோக்கமே மறக்கடிக்கப்படுகிறது. ஒழுங்கின்மை அதிகமாகி, கல்லூரியில் படிப்பிற்குரிய நல்ல சூழ்நிலை பாழாக்கப்பட்டு, கல்வி நாட்டம் குறைகிறது!

—. எஸ். ராஜேந்திரன், மன்னார்குடி — 1.

அரசியல்வாதிகளைப் போலவே மாணவர் தேர்தலுக்கு நிற்பவர்கள் மோசடியான வாக்குறுதிகளை அள்ளித் தெளிக்கிறார்கள். பணத்தை அள்ளி விட்டு, மாணவர்களுக்குப் பரிசுப் பொருள்களை அளிப்பதுடன், அவர்கள் காலில் விழவும் செய்து 'பதவி' சுகத்துக்காகச் சுயமரியாதையை இழக்கத் துணிகிறார்கள். திருட்டு வோட்டுப் போடவும், பிற கல்லூரிகளிலிருந்து மாணவர்களை இறக்குமதி செய்கிறார்கள். அரசியல்வாதிகளை அப்படியே காப்பியடிக்கிறார்கள் — எல்லா விஷயத்திலும்! வென்றவுடன், தொகுதிப் பக்கம் தலைகாட்டாத எம்.எல்.ஏ. போல வகுப்பையே மறந்து, ஆள் சேர்த்துக் கொண்டு, கோஷ்டி பிரித்துக் கொண்டு, 'பந்தா'வாக அலைகிறார்கள்.

— சி. மணிவண்ணன், சென்னை — 12.

எக்கல்லூரியிலாவது, யூனியனும் தேர்தலும் அக்கல்லூரியின் கல்வித் தரத்தை உயர்த்தியதாகவோ அல்லது தேர்ச்சி சதவீதத்தை உயர்த்தியதாகவோ வரலாறு உண்டா? பின்பு ஏன் தெரிந்தே பாழுங்கிணற்றில் விழ வேண்டும்?

— நா. ராஜாராம், கோயம்புத்தூர் — 6.

மாணவர் யூனியன் தேர்தலின் போது ஆயிரக்கணக்கான ரூபாய்களை நோட்டீஸ்களுக்கும் போஸ்டர்களுக்குமாகச் செலவழித்த இந்தக் கனவான்கள், காலாண்டிற்கு ஒருமுறை வசூலிக்கப்படும் டியூஷன் பீஸில், ரூபாய் இருபது உயர்த்தி விட்டார்கள், என்ற காரணத்திற்காகக் கல்லூரியிலுள்ள மின்விசிறி முதற் கொண்டு, கண்ணாடி ஜன்னல்கள் லபாரட்டரிகள் உள்பட அனைத்தையும் அடித்து நொறுக்கித் தங்கள் யூனியன் சாகசத்தினைக் காண்பிப்பார்கள்.

— அ. திருநாவுக்கரசு, குடியாத்தம்.

வந்திருக்கிற சேர்மன் ஒழுங்கா காலேஜ் நடக்கிறதுக்கு ஒத்துழைப்பாரான்னு அதுதான் கிடையாது. மழைத் தண்ணில ஓடம் விட முடியாதவன், கடல் தண்ணிலயா கப்பல் விடுவான்கிற மாதிரி தமிழே தத்திங்கிணத்தோம் போடுறவங்க ஹிந்தித் திணிப்புன்னு சொல்லி கல்லூரியையே மூடச் செய்துடுவாங்க! ஒரேயொரு அட்வான்டேஜ், மணிக்கணக்கா மணியாட்டின பூசாரி, நைஸா நமக்கு நைவேத்தியம் காண்பிக்கிறமாதிரி, காலேஜ்டேன்னு சொல்லிட்டு ஆர்க்கெஸ்ட்ரா வச்சி ஐஸ்கிரீம் தருவாங்க!

— செம்மங்குடி காமராஜ், சென்னை — 19.

உண்மையில் நல்ல மாணவர்களா நிற்கிறார்கள்? குண்டர்கள் பதவியேற்று கல்லூரியில் அடாவடித்தனம் செய்கிறார்கள். தேர்தல் நடக்கும்போது கலாட்டாதான். பிறகு தலைவர்களை வகுப்பில் பார்க்க முடியாது. பரீட்சை ஹாலில் மட்டும் இவர்களுக்குக் காப்பியடிக்க ஸ்பெஷல் வசதிகள் இருக்கும். நாம் கண்டு கொள்ளக் கூடாது. நாம் கண்டிப்பாக இருந்தால் ஆபத்துத்தான். போதாக்குறைக்கு எக்ஸ்கர்ஷன், கல்லூரி தினம் என்று ஏதோ சொல்லிப் பணம் பண்ணுகிறார்கள். இத்தகைய தேர்தலும், தலைமையும் அவசியமா?

— எஸ். ஜெயலக்ஷ்மி, செகந்திராபாத் — 26.

"வாடிக்கையாளர் புகார் பிரிவு" என்ற அமைப்பை கரூர் வைஸ்யா வங்கியில் நீங்கள் காணமாட்டீர்கள்

காரணம்: எமது கிளை ஒவ்வொன்றிலும் மேனேஜர் தலைமையில் பணிபுரியும் ஊழியர் குழாம், நடவடிக்கை எடுக்க தேவைப்படும் புகார் எதற்கும் இடமளிப்பதில்லை.

அவர்கள் உணர்ந்துள்ளார்கள், நீங்கள் நல்லதோர் வாடிக்கையாளர் என்றும், உங்கள் நேரம் பொன்னான நேரம் என்றும்.

எனவே அவர்கள் உங்கள் தேவைகளுக்கு உடனடி கவனம் அளிக்கிறார்கள்; நீங்கள் காத்திருக்க வைக்கப்பட்டால் அது மிக அவசியமான குறைந்தபட்ச நேரத்திற்கே இருக்கும்.

நீங்கள் எமது வழக்கம்போலான இதமும் கனிவும் நிறைந்த சேவை பெறுகிறீர்கள்—அதில் எமது அறிவு முதிர்ந்த சேவை அடங்கியிருப்பதையும் காண்பீர்கள்.

இவ்வளவு இருந்தும் உங்களுக்கு ஏதோவொரு புகார் இருக்குமானால், எமது கிளை மேனேஜர் அதற்கு உடனடித் தீர்வுகாண துவங்குவார்;

இம்முயற்சியில் அவருக்கு எமது ஊழியர்களின் ஒத்துழைப்பு மனப்பான்மை பெருந்துணை புரியும்.

வாருங்கள், எமது 149 கிளைகள் மூலம் KVB வாடிக்கையாளராகி பயன்பெறுங்கள்.

"சென்னையிலுள்ள எமது ''இண்டர்நேஷனல் டிவிஷன்'' அளிக்கும் அன்னியச் செலாவணி தொழில் நுட்பம் "கரூர் நகரிலுள்ள எமது ''இண்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் செல்'' முதலியவற்றின் நன்மைகளையும் வசதிகளையும் பெற்று பயனடையுங்கள்.

நினைவிருக்கட்டும்: எமது வங்கியிலுள்ள உங்கள் சேமிப்பு கணக்குகள் மற்றும் லாக்கர்களில் உள்ள பொருட்கள் தொடர்பாக வேறு நபரை 'நாமினேஷன்' செய்திடும் வசதியை நீங்கள் இப்போது பயன்படுத்தலாம்.



மக்கள் சேவையில்
70 ஆண்டுகள்

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்

பதிவு & மத்திய அலுவலகம்:
ஈரோடு ரோடு, கரூர்-639 002
சேர்மன்: K.N. புஜங்க ராவ்

பெருமை மிகு மரபு - அத்துடன் புதுமை மிகு கண்ணோட்டம்

M-86 541 Tm.

புன்னகை மன்னன்

இனிய பாலசந்தருக்கு,

அந்தத் தொடக்கம்! வானவில் ஜாலத்துடன் 'ஹோ' என்ற இரைச்சலுடன் அருவி! பாதாளத்துப் பச்சை. மின்னும் மேகங்களுடன் -வான். கலகல சிரிப்பு. அப்புறம் தொடங்கிய அந்த டூயட். டூயட்டின் இடை இடையே வசனத்தாலும் முகபாவங்களாலும் நீங்கள் ஏற்படுத்திய இன்ட்ரெஸ்ட். அப்புறம் அந்த ஒன், டூ, த்ரீ....

இந்தக் காட்சியை இதற்குமேல் சொல்லி, பார்க்கப் போகிறவர்கள், முன்பே சொல்லி விட்டானே பாவி, என்று எங்களைத் திட்டும்படி வைக்கப் போவதில்லை.

அந்தப் பதினைந்து நிமிடங்கள். இந்தப் படத்தின் வெகு அபாரமான தருணங்கள்.

ஆனால் அப்புறம்தான்!

ஐய்ய, என்னடா இது இப்படிப் பண்ணி விட்டாரே என்று சொல்ல வைத்துவிட்டது படம்.

சிறிது நேரத்திற்கே ஆஜர் என்றாலும் ரேகா அவருடைய முகபாவங்களினால் படம் முழுக்க வந்த பிரமையை உண்டு பண்ணியிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம், நீங்கள்!

ஒரு சாப்ளின் செல்லப்பாவாக கமல் இத்தனை அற்புதங்களை வெளிப்படுத்தியிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம், நீங்கள்!

பெயர் காட்டப்படும் இடத்தில் அந்தப் புறாக்களின் மென்மையான சிறகடிப்பு எங்கள் மனத்தைக் கொள்ளை கொண்டது என்றால் அதற்குக் காரணம்—நீங்கள்!

ஆனால் — கதை ஏன் இப்படித் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது?

ஊனமுற்றோருக்காக நிகழ்ச்சி நடத்தப் போகிறேன் என்று கொள்ளைக் கோமானிடம் கமல் முழங்கிவிட்டு, வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கும் வதந்தியால் அந்த ஊனமுற்றவர்கள் அவதிப்பட்டு வெளியேற, அவர்களைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்காமல் மேடையில் நாயகன் வயலினை இழுப்பது அவன் குணாதிசயங்களைக் கூட்டியா சொல்கிறது?

டூயட் பாடியாகிவிட்டது. டான்ஸ் ஆடியாகிவிட்டது. இனிமேல் என்ன செய்யலாம் என்றுயோசித்துவிட்டுசாப்ளின்செல்லப்பாவிற்கும் அந்த டான்ஸ் ஸ்கூல் நிறுவனருக்கும் கல்யாண ஒப்பந்தம் ஏற்படுத்துவதில் கமல் இறங்கும்போது கதை தார்ச்சாலையிலிருந்து செம்மண் பாதைக்குப் பிரியவில்லை?

காமிரா அதியற்புதமாகக் கவிதை படைத்திருக்கிறது. பாடல் காட்சிகளை ஃப்ரேம் ஃப்ரேம்களாகக் கண்களில் ஒற்றிக் கொள்ளலாம். மாமா பாட்டு, சிங்களத்து சின்னக் குயிலே பாட்டு, ஏதேதோ பாட்டு எல்லாம் இன்னும் செவிப்பறைகளில் இனிமை ரீங்காரங்களாக அகலாமல் இருக்கின்றன. உங்களது பிரத்யேகமான முத்திரைகளை ஒவ்வொரு காட்சியிலும் பார்க்க முடிகிறது. ஆனாலும் —

அனாவசியமாய் சிங்களம் தமிழ் என்று இழுத்துக் கொண்டு அவதிப்படுவது ஏனாம்?

இறந்துபோன காதலியின் தந்தை (அனாவசிய பழிவாங்கல்) காதலனின் தந்தை (சரியாக உருவா க்கப்படாத பொருக்குகள் நிரம்பிய பாத்தி ம் டெல்லி கணேஷ்) மூலம் வெடிகுண்டு பக்க, அது க்ளைமாக்ஸில் வெடிக்க—


ஆரம்பத்தில் 'ஆஹா பாலசந்தர்' முடியுர் ,றுவாயில் 'ஐயோ பாலசந்தர்' ஆகிவிட்டீர்கள் என்பது எங்களது வெகு தாழ்மையான அபிப்ராயம்.

பாசங்களுடன்,

ஜெயமன்மதன்



வைதேகி காத்திருக்கிறாள்!



"அட ஏனுங்க... நீங்க... கோயம்புத்தூர் வரைக்கும் அதும் எங்க ஊர்ப் பக்கம் வந்து போட்டு... இங்கே, பக்கத்தாலே இருக்கிற அருவியைப் பார்க்காமப் போனா... எப்படிங்க?"

"என்ன அருவிங்க?"

"வைதேகி அருவிதானுங்க..."

கோவையிலிருந்து சுமார் பதினைந்து கி. மீ. தூரத்திலிருக்கிற நரசீபுரத்தில் ஒரு நடுத்தர வயதுக்காரர்தான், இப்படிக் கேட்டார் நம்மிடம். மற்றவர்களும் ஏதோ முக்கியமான சங்கதி மாதிரி கொங்குத் தமிழ் வாடையோடு சொன்னார்கள்.

ஒருவர் ஓடோடிப் போய் டிராக்டரைக் கொண்டு வந்தார். (டிராக்டருக்குக் கூட சினிமாப் பெயர்: பாரதிராஜா) பாரதிராஜாவில் ஒரு ஜமுக்காளம் விரிக்கக் கிளம்பினோம். கூடவே ஊர்க்காரர்களாக ஒரு செட். மேடும் பள்ளமுமாய் அப்படியொரு பாதை. அடிக்கடி முட்செடிகள் கும்பலாய் முகத்திலடிக்கிறது; இல்லையென்றால் துண்டையோ, கர்சீப்பையோ வெடுக்கென்று எடுத்துக் கொண்டு விடுகிறது; சுற்றிலும் என்ன மாதிரி 'லொகேஷன்!' சினிமாவில் கடைசிக் கட்டமாக கதாநாயகனும், வில்லனும் ஆளற்ற வனாந்தரத்தில் போய்த் தனியாக ஸ்டண்ட் போடுவார்களே... அது மாதிரி இடம்... டிராக்டரில் குலுங்கினபடி கேட்டோம்:

"ஆமா... இதற்கு ஏங்க வைதேகி அருவின்னு பேரு?"

"அதுங்களா... முன்னாடி இதுக்குப் பேரு கண்டி அருவிங்க. இப்போ வைதேகி காத்திருந்தாள்னு ஒரு படம் வந்துச்சங்களே... அதிலே இந்த அருவி கூட வருமுங்க.... இங்கே வந்து படம் எடுத்தாங்க... அதிலேயிருந்து 'வைதேகி அருவி'ன்னு பேருங்க..." என்று குலுங்கக் குலுங்கச் சொன்னார்கள். (சினிமாவில் நடிக்கிற நடிகைக்குத்தான் பெயர் மாறுகிறதென்றால்— சினிமாவில் தலைகாட்டியபாவத்திற்காக அருவிக்குக் கூடவா பெயர் மாற்றம்?)

குலுங்கினபடியே இரண்டு கி. மீ. வந்துவிட்டது. இறங்கினால் ஓர் ஒற்றையடிப் பாதை ஓடுகிறது. காட்டுப் பகுதியில் தவ்வியபடி ஒரு நடை மூச்சு வாங்கின இரண்டு கி. மீ. நடந்தால், தூரத்தில் அருவியின் ஓசை!

முரட்டு முரட்டுப் பாறைகளுக்கிடையில் ஒடுங்கிச் சிறு பெண்ணின் தாவணி மாதிரி நெளிந்து வந்து கொண்டிருந்த தண்ணீர், சமதளத்திற்கு வந்து, சறுக்கென்று பாறையில் சறுக்கி — விறுவிறுவென்று இறங்குகிறது. மறுபடி இன்னொரு வழுக்கல். சிறு பிள்ளைகள் மூச்சு வாங்க ஏறிச் சறுக்கி விளையாடுவார்களே, அந்த இடத்தில் கூடவே அருவியும் பாய்ந்தது மாதிரி ஒரு சௌகரியம். காலை வைத்தால் சுர்ரென்று குளிர்ச்சி. நடந்து வந்த அசதியை எல்லாம் கழுவி விட்டது மாதிரி நனைத்தெடுக்கிறது அருவி.

கூட வந்த ஆசாமிகள் சும்மா இருப்பார்களா? சட்டை துணிமணிகளை யெல்லாம் 'கோபம்' வந்தது மாதிரி கழற்றி வீசிவிட்டு, நேரே அருவியில் போய் 'ஹோ... ஹோ...' என்ற கூச்சலோடு தாவி விட்டார்கள். முதலில் அருவியில் உட்கார்ந்தபடி ஒரு சறுக்கல். பிறகு இன்னொரு சறுக்கல். ஆளுக்கு ஆள் வயதுகள் குறைந்த மாதிரி என்ன ஒரு சந்தோஷம்! திரும்ப மேலேறி ஓடிவிட்டு மறுபடி குதூகலத்துடன், ஒரு குளிர்ச்சியான சறுக்கல்!

ஒருவர் குறுகுறுத்த உடம்போடு "இப்போ. இவ்வளவு தூரம் நடந்தோமில்லேங்களாங்க... இவ்வளவு தூரம் நடந்து வந்துதானே படம்எடுத்திருக்காங்க. இதோ... இந்தப் பாறையிலேதானுங்க, ஒரு நடிகை நின்னு அண்ணாந்து பார்த்தாங்க" என்று அவரும் அண்ணாந்த போது அவருக்குள் இருந்த குளிர்ச்சியெல்லாம் நமக்கு வந்து விட்டது. என்ன ஒரு சிலாகிப்பு?

அருவியில் நேராகச் சரிந்தால் முதுகில் 'அடிஷனலாக' அழுக்குத் தேய்த்து விட்ட மாதிரியான சுகத்துடன் அருவி இழுத்துக் கொண்டு போகிறது. கொஞ்சம் அசந்து மறந்து புரண்டால் போதும். உடம்பில் அங்கங்கே பாறை அழுத்தமாய் 'லிப்ஸ்டிக்' போட்ட மாதிரி வெளியே வந்து அலற வேண்டியதிருக்கும். இவ்வளவு அருமையான இடத்தில் அங்கங்கே காப்பிக் கலரில்

திருக்கிறார்கள்! சில்லுகள் அங்காங்கே தெறித்துக் கிடக்கின்றன.

சரிகின்ற பள்ளத்திற்குள் இப்படிச் சில்லுகள் விழுந்து கிடந்தால் எவ்வளவு விபரீதமாயிருக்கும்? அருவியின் 'ஸ்பீடோடு' சரிகின்றவர்களை எப்படிப் பதம் பார்த்துவிடும் சில்லுகள்? சே, என்னதான் சொல்லுங்கள்; நம்மவருக்குச் சுற்றுப்புறச் சூழலின் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு பூஜ்யம்தான்.

சுற்றுலாத் துறையினர் கொஞ்சம் கவனித்தால் போதும், உள்ளூர்வாசிகளைத் தவிர மற்றவர்களுக்குத்தெரியவராததால்சோர்ந்து கிடக்கும் அருவி புத்துயிர் பெறும். வைதேகி காத்திருக்கிறாள்!

— யூகி

ஒரு போக விளைச்சலுக்கும் ஒரு போராட்டம்!



இது தாய்—சேய் நலவிடுதி

இதுவரை நாங்கள் சுற்றுப் பயணம் செய்த எட்டு மாவட்டங்களில் எந்த ஊருக்குப் போனாலும் மூடப்பட்டுக் கிடக்கும் தாய்—சேய் நல விடுதிகளையே பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்ட எங்களுக்கு கோவை—பல்லடம் பாதையிலுள்ள செலக்கரிச்சல் தாய்—சேய் நல விடுதி ஓர் ஆச்சரியம்! திறந்து வைக்கப்பட்டிருந்தது மட்டுமல்ல, உள்ளே மருந்துகள் இருந்தன; பக்கத்திலேயே அந்த விடுதியின் பொறுப்பாளரான திருமதி மங்களமும் தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த விடுதியிலேயே குடியிருக்கிறார்!

நம் ஆச்சரியத்தை அவரிடம் தெரிவித்தபோது, "எனக்கெல்லாம் டேட்டின்னு டேட்டி தாங்க.... ராத்திரி பகல் எப்ப வேணும்னாலும் கேஸ் வருங்க. அதாங்க பக்கத்திலேயே குடியிருக்கிறேன்" என்று உற்சாகமாகக் கூறிக் கொண்டே பிறப்பு, குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான சில புள்ளி விவரங்களையும் எடுத்துக் காட்டினார்.

அவரது ஈடுபாட்டை கண்டு வியந்து பாராட்டிக் கொண்டே வெளியே வந்த போது, சுமார் நாலாயிரம் மக்கள் தொகை கொண்ட அந்தப் பஞ்சாயத்தின் துணைத் தலைவர் பழனிச்சாமியைச் சந்தித்தோம்.

"டி.வி. ரிப்பேருங்க. யூனியன்ல (சுல்தான் பேட்டை ஒன்றியம்) நிறையத் தடவை சொல்லிட்டேனுங்க. ஒண்ணும் நடக்கலீங்க.... இதப் பாருங்க இரண்டு மூன்று அடி பம்புகளும் ரிப்பேருதானுங்க. யூனியன் பிளம்பரைக் கூப்பிட்டால் சாராயம் வாங்கித் தரயான்னு கேக்கரார். இது என்னங்க அநியாயம்? எங்க வீட்டு வேலைக்கா கூப்பிடறேன்?" என்று அ.தி.மு.க. ஆசாமியான அவர் ரொம்பவும் வருத்தப்பட்டுச் சொன்னார். (அதுதானே பார்த்தோம்! குறைகளே இல்லாத கிராமம் எப்படி இருக்கும் என்று!)



* மங்களம் * பழனிச்சாமி

செலக்கரிச்சல் கிராமத்திற்கு லேன்ஸ் கிளப்பின் தயவால் வங்கி ஒன்று வந்திருக்கிறது. விஸ்வ ஹிந்து பரிஷத்தின் துணையோடு ஒரு மருந்தகமும் இயங்குகிறது.

பல்லடம் அவினாசி தாலுகாக்களில் பல வருடங்களாகவே மழை பொய்த்துக் கொண்டு வருவதால் செலக்கரிச்சல் கிராமத்து ஏரியும் வறண்டு கிடக்கிறது. இதனால் விவசாயம் சுத்தமாகப் பாதித்துவிடவே பெரும்பாலான விவசாயிகள், கைத்தறி நெசவுத் தொழிலை மேற்கொண்டு விட்டார்கள்.

"இங்கிருந்து பத்து கி.மீ. தூரத்தில் செல்லும் பரம்பிக்குளம்—ஆளியாறு நீர்ப் பாசனத் திட்டக் கால்வாயிலிருந்து எங்கள் கிராம ஏரிக்குத் தண்ணீர் விட்டால் நிலத்தடி நீர் கிடைக்கும். அதைக் கொண்டு ஒரு போக விவசாயமாவது செய்ய முடியும். அதற்காகத்தான் இப்போது போராடி வருகிறோம்" என்றனர் இளைஞர்களான சிவகுமாரும், முத்துக்குமாரசாமியும்.

— தில்லப்பா

சின்னச் சின்ன

4

"என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ... ஒரு வாரத்தில உங்க தங்கச்சி ம், மருமவனும் இந்த எடத்தைக் காலி பண்ணியாகணும்...

அண்ணி சுகந்தி மறுபடியும் மறுபடியும் ஜெயபாலிடம் மந்திரம் ஓதியது இந்திராவின் காதுகளுக்குள் ரீங்கரித்துக் கொண்டே இருந்தது.

ஒரு வாரம் வரைக்கும் உத்திரவாதம் இருக்கிறது. அப்புறம்?

கண்ணை மூடினால் கெட்ட சொப்பனங்களாய்த் துரத்தியது. எப்போது தூங்கிப் போனாள்? தெரியாது. தோளைப் பிடித்து யாரோ உலுக்க, சட்டென்று விழிப்பு வந்தது.

நந்தகுமார் அவளுக்கு முன்னாலேயே எழுந்து உட்கார்ந்திருந்தான். அவள் கன்னத்தையும், தோளையும் வருடிக் கொண்டிருந்தான்.

வெண்டிலேட்டருக்கு வெளியே ஆகாயம் சிவக்க ஆரம்பித்திருந்தது. பட்சிகள் சுப்ரபாதம் பாடிக் கொண்டிருந்தன.

"நல்லாத் தூங்கினியா நந்து? எப்படி எனக்கு முன்னாலே எழுந்தே?"

நந்தகுமாரிடம் முதல் நாள் இரவு இருந்த பெரிய மனுஷத்தனம் விலகியிருந்தது. கண்களில் தூக்கத்தோடு ஓர் ஏக்கமும் கலந்திருந்தது.

"அம்மா... பசிக்கிறதும்மா..."

சடாரென்று கண்ணுக்குள் ஓர் ஊசி இறங்கி விட்டது போல் துடித்துப் போனாள் இந்திரா. மார்பில் பால் சுரந்தால் நந்துவின் ஒன்பது வயதை மறந்து அவனை முந்தானையில் மறைத்து முட்ட முட்ட ஊட்டிவிட வேண்டும் போல இருந்தது.

"முதல்ல பல்லைத் தேய்ச்சிக்கோ நந்து..."

இன்னும் தைரியமாகச் சாப்பாடு போடுகிறேன் என்று சொல்ல முடியவில்லை. அண்ணன் கைக்குள் அகப்படுவானா இல்லை அண்ணியின் ஆட்சி மொழிக்கு ஆடுவானா என்று இன்னும் புரிபடவில்லை.

எழுந்தாள். நந்தகுமாரின் உடலைத் தட்டிப் படிந்திருந்த புழுதியை விலக்கினாள். அவன் தேய்பிறை நிலவு போல் சோகையாய்ச் சிரித்தான்.

அந்த அறையிலிருந்து வெளிப்பட்டார்கள். ஹால் மின்விசிறி ஏரான கரெண்ட்டைச் சாப்பிட்டுக்கொண்டு சுற்றியது. டிரான்சிஸ்டர் அதன் உச்ச சக்தியில் தேவி கருமாரியைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தது. படுக்கையில் அண்ணன், அண்ணி இருவரையும் காணோம்.

பாத்ரூம் எங்கே? நிச்சயம் பின்னால்தான் இருக்கும் என்று தீர்மானித்தாள். இன்னொரு அறையைக் கடக்க வேண்டியிருந்தது. மர உத்தரத்தில் சைக்கிள் டயர்கள், ரிம்கள், காரியர்கள்...

பின் கதவைத் தள்ளித் திறந்தாள். காம்பவுண்டு சுவர் வீட்டைச் சுற்றிக் கொண்டு அவளுக்கு முன்னால் அங்கே வந்து சேர்ந்திருந்தது. சுவருக்கு அப்பால் வானம் பிரகாசமாகிக் கொண்டிருந்தது.

நான்கைந்து காகங்கள் ஆகாயத்தில் அவசர வட்டமிட்டன. தாய்க் காகங்களாய் இருக்கும். தத்தம் குஞ்சுகளுக்கு இரை ஏதும் கிடைக்காதா என்ற நப்பாசை. இந்திராவுக்கு நந்தகுமாரின் பசித்த வயிறு இருதயத்தில் சுமையாய்ச் சேர்ந்திருந்தது.

கிணற்றடியில் துவைகல் இருந்தது. அதற்கும் அப்பால் இரண்டு சின்ன ரூம்கள், ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன்.

இந்திரா பையிலிருந்து உருவிக் கொண்டு வந்த பிரஷ்களில் ஒன்றை நந்தகுமாரிடம் நீட்டினாள்.

திடீரென்று பின்னால் "ஹை அத்தை பிசாசு" என்று குரல் அறைந்தது. திடுக்கிட்டுத் திரும்பினால் அந்தப் பெண் நின்றிருந்தாள். ஏழு வயசு? உருண்டைக் கண்கள். முதல் நாள் பின்னல் அவிழ்ந்திருந்தது. முன் நெற்றியில் முடிக்கற்றை புரண்டது. கையில் பிடித்திருந்த பிரஷின் நீளத்திற்குச் சிவப்பு நிற பேஸ்ட்.

"யாரும்மா இது?" நந்தகுமாரின் குரலில் சிறு கோபம் இருந்தது.

"சசிகலாடா... மாமா பொண்ணு..."

"சசிகலா இல்லை... சசி பிசாசு..."

"நந்தா... அப்படியெல்லாம் சொல்லக் கூடாது..."

"அவ மாத்திரம் உன்னை அத்தை பிசாசுன்னு சொல்லலாமா?"

சசிகலா பாவாடையைக் கொசுவி முழங்கால்களுக்கிடையில் பிடித்துக் கொண்டது. "எங்கம்மாதான் சொன்னாங்க அத்தைப் பிசாசு வந்திருக்குன்னு. அதனால்தான் அப்படிக் கூப்பிட்டேன்... தப்பா? தப்புன்னா

கனவுகள்

உமா

ஸாரி...''

உச்சரிப்பில் கான்வென்ட் இருந்தது. கண்களில் நட்பு இருந்தது. சிரிப்பில் தூய்மை இருந்தது.

''இந்தாங்க அத்தை பேஸ்ட்... இதைத் தானே தேடிட்டிருக்கீங்க?''

''ஏய் சசி...'' பின்னாலிருந்து அண்ணியின் குரல் புயல் போல் வந்தது. தடதடவென்று நடந்து வந்து அந்த பேஸ்ட்டைப் பிடுங்கினாள். ''ஏண்டி கொரங்கு, அவங்கள்லாம் பல்பொடி தேய்ச்சுப் பழகினவங்க... புதுசா பேஸ்ட்டைக் கொடுத்தா என்ன பண்ணுவாங்க? அம்மாடி இந்திரா, கிணத்துச் சுவர் மேல் பல்பொடி இருக்கும் பாரு... அதை எடுத்துக்க... பையனுக்கும் கொடு...''

சசிகலா அம்மாவைப் பார்த்தாள். இந்திராவையும், நந்தகுமாரையும் பரிதாபமாகப் பார்த்தாள்.

''ஏய், என்ன முழிச்சிக்கிட்டு நிற்கிறே...? சீக்கிரம் பல்லைத் தேய்ச்சுட்டு வா. ஸ்கூலுக்கு நேரமாயிடப் போவுது...''

''சுகந்தீ... சுகந்தீ...'' வீட்டிற்குள்ளிருந்து ஜெயபாலின் குரல் அலறியது.

''ஐயோ, அவர் எழுந்துட்டாரா... வேலையெல்லாம் இனிமேல் நடந்த மாதிரித் தான்...'' சுகந்தி பரபரவென்று உள்ளே போனாள்.

''ஸாரிடா...'' என்றாள் சசிகலா, நந்தகுமாரைப் பார்த்து.

''என் பேரு ஸாரி இல்ல. B. நந்தகுமார்.''

''அத்தை.... ரெண்டு நாளா வேலைக்காரி மட்டம்... அதான் அம்மா அவ்வளவு கோவமாயிருக்காங்க...''

இந்திரா அந்த வெள்ளை மனத்தைப் பார்த்து நெகிழ்ந்தாள். நந்தகுமாரின் விரித்த இடது கையில் கரகரப்பான பல்பொடியைத் தூவினாள்.

''இந்திரா...''

திரும்பினால், அண்ணி நின்றுகொண்டிருந்தாள்.

''ஒண்டி ஆளா என்னால் சக்கரம் மாதிரிச் சுத்த முடியலை இந்திரா. சசியை ஸ்கூலுக்குக் கௌப்புவேனா, இல்லே அவருக்கு டிபன் ஆக்கிப் போடுவேனா? ஆம்பிளைங்களுக்கு ஒரு யோசனை கெடையாது. நீ பல்லைத் தேய்ச்சிட்டு, அப்படியே அந்த சிமெண்ட் தொட்டிய கொஞ்சம் தண்ணியை இழுத்து ரொப்பிடு...''

''சரி அண்ணி...''

வேலைகளுக்கு அஞ்சக் கூடாது என்று இந்திரா தீர்மானித்தாள். யோசனை செய்யாமல், சொன்னதைச் செய்து கொண்டு ஒரு மூலையில் முடங்கிக் கொள்ளலாம். நந்து ஸ்கூலுக்குப் போய், படித்து பாஸாகி, பெரிய பதவியில் அமர்ந்து....

''நாலு துணி இருக்குது... உங்க அண்ணனுதுதான்... கிரீஸூம் எண்ணெயுமா ஒரே அழுக்கு... அதையும் கொஞ்சம் கசக்கிப் போட்டுடு, என்ன?''

''சரி, அண்ணி...''

நாலு துணி என்று அவள் கை சுட்டிக் காட்டிய இடத்தில் குறைந்தது ஒரு வாரத்து அழுக்கு மலை இருந்தது.

''சரி... ஆச்சா, கிடுகிடுன்னு குளிச்சிட்டு வா...''

''அண்ணி...'' இந்திரா தயங்கி இழுத்தாள்.

உள்ளே போகத் திரும்பியிருந்த சுகந்தி நின்றாள். ''என்ன? சீக்கிரம் சொல்லு.



எனக்கு ஆயிரம் வேலே இருக்கு வீட்டுக் குள்ள...''

''கொழந்தைபசிக்குதுன்னுசொல்றன்...''

வார்த்தைகள் வெளியே வரும் போது உடம்பு கூசிப் போனது. தரை வரை குனிந்து விட்ட ஒரு வேதனை வருத்தியது.

''அவ்வளவுதானே. சசி... அந்த அலு மினியப் போணியில பழையதை வச்சிருக் கேம்பாரு... அதைக் கொண்டாந்து அத்தை மவனுக்குக் கொடு. நாளேக்குக் கட்டிக்கப் போறவன்... கோச்சிக்கப் போருன்...''

''பிச்சைக்காரனுக்குப் போடப் போறேன்னு சொன்னியேம்மா...'' சசிகலா தயங்கினுள்.

''வாய் மேலேயே போடுவேன், கழுதை... சொன்னதைச் செய்யி... இனிமேல் பிச்சைக் காரனுக்குல்லாம் எதுவும் கெடையாது...''

'ணக் ணக்'என்று மெட்டி ஒலிக்க அவள் நடந்து போனுள். சசிகலா அவசரமாய் வாய்க் கொப்புளித்து விட்டு உள்ளே ஓடி ஞள். திரும்பி வந்த போது, கையில் ஒரு திறந்த அலுமினியப் பாத்திரம் இருந்தது. சாதம் சற்றே மஞ்சள் பூத்திருந்தது. புளிப்பு நுரை பொங்கியிருந்தது.

நந்தகுமார் ஆவலுடன் வாங்கிக் கொண் டான். துவைக்கும் கல்லில் உட்கார்ந்து கொண்டான்.

இந்திரா்வின் கன்னங்களில் கண்ணீர் உப்புக்கோடு இழுத்தது.

'ஏய் இந்திரா, நந்துவுக்கு ஏன் பழைய தைக் கொடுத்தே? சின்ன வயசு. அவன் உடம்புக்கு ஒத்துக்காதுன்னு தெரியுமில்லே?' இப்போது எல்லாம் ஒத்துக் கொள்ளும் என்று நினைத்தாள். கர்ம்பவுண்டுக்கு அந்தப் பக்கம் பன்றிகளின் கிர்ரக் கிர்ரக் சப்தம் கேட்டது. நீலநிற பஸ் ஒன்று ததும்பி வழியும் சிறுவர்களுடன் விரைந்து போனது.

இந்திரா இரும்பு பக்கெட்டை எடுத் தாள். கயிற்று முடிச்சைச் சரிபார்த்துக் கொண்டாள். கிணற்றுக்குள் போட்டாள். இழுக்க ஆரம்பித்தாள். சிமெண்ட் தொட்டி பகாசுரன் போல் பசியுடன் நீர் குடித்தது.

பத்துப் பதினைந்து கவளங்கள் இறங்கி யதும்தான் நந்தகுமாருக்கு ஒரு தெம்பு வந்தது. புளிப்புவாசமடித்தால் கூடப்பசியில் பழையது எத்தனே ருசியாய் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டான். அம்மா சாப் பிடவில்லேயே என்ற நினைவு வந்தது.

''அம்மா...''

நந்தகுமார் ஏதோ மேகத்துக்குப் பின்ன விருந்து கூப்பிடுவது போல் இருந்தது.



பருத்திக்கு வந்த ஆபத்து!



கோவை மாவட்டம் என்றாலே பருத்திதான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்குப் பருத்தி உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது கோவை. அந்தப் பருத்திக்கு இப்போது ஆபத்து வந்துவிட்டது என்கிறார்கள். ''வெள்ளைப்பூச்சி என்னும் ஒரு வகைப் பூச்சியிடமிருந்து பருத்தியைக் காப்பாற்றவே முடியவில்லை. அதனால் எழுபது சதவிகிதத்துக்குமேல் மகசூல் பாதிக்கிறது. அறுபத்து நான்கு குவிண்டால் கிடைத்த அதே நிலத்தில் இப்போது பதினான்கு குவிண்டால்தான் கிடைக்கிறது. விவசாயப் பல்கலைக்கழகத்தினராலும் இதற்கு மருந்து கண்டுபிடிக்க முடியாமல் திணறுகிறார்கள்...'' என்று வருத்தத்தோடு சொல்கிறார் கோவை மாவட்ட உழவர் விவாதக் குழு அமைப்பாளர்கள் சங்கத் தலைவர் சோ. கு. பழனிசாமி.

இந்திராவுக்கு. நீல ஆகாயம், அதன் பஞ்சு மேகங்கள், பாதாளம் வரை தோண்டப்பட்டிருந்த கிணறு, சுற்றியிருந்த தென்னைகள் எல்லாமே வெகு வேகமாய் அவளைச் சுற்றி வருவது போலிருந்தது. திடீரென்று எல்லாம் தேய்ந்து, உலகமே கறுப்பாகிப் போக...

கையிலிருந்து கயிறு நழுவிப் போனது. வாளி புவியீர்ப்பில் ராக்கெட் வேகத்தில் போய்த் தண்ணீரில் தொளப் என்று மோதியது. இந்திரா கைகளை விரித்துக் கொண்டு தடாலென்று மண்பரப்பில் மல்லாந்து விழுந்தாள்.

நந்தகுமார் பதறிக் கொண்டு எழுந்தான். கையிலிருந்த சோற்றுப் பருக்கைகள் சிதற ஓடி வந்தான். பாத்ரூம் கதவு திறந்து, கட்டிய துண்டோடு சசிகலா மிரண்டு அலறினாள்.

''சசி... என்னம்மா... என்ன ஆச்சு?''

ஒரே நேரத்தில் ஜெயபாலும், சுகந்தியும் வீட்டுக்குள்ளிருந்து பாய்ந்து வந்தார்கள். சசிகலாவுக்கு ஒன்றுமில்லை, இந்திராதான் மயங்கி விட்டாள் என்று தெரிந்ததும் ஒரு சின்ன ஆறுதல் பெருமூச்சு வெளிப்பட்டது.

''நந்து... வேடிக்கை பாத்திட்டு நிக்கறியே... அம்மா மூஞ்சில தண்ணியைத் தெளிடா...'' ஜெயபால் மேற்பார்வையிட, நந்தகுமார் கைநிறையத் தண்ணீர் அள்ளி இந்திராவின் முகத்தில் விசிறினான். அவள் தலையை மடியில் ஏந்திக் கொண்டு, ''அம்மா, அம்மா...'' என்று பதறினான்.

இந்திராவின் மூடிய இமைகளுக்குள் அசைவு வந்தது. சடாரென்று விழிப்பு வந்தது. தன் தலைக்கு மேல் கவிந்திருந்த முகங்களைப் பார்த்ததும், அசதியைப் பின் தள்ளிக் கொண்டு வெட்கம் முன் வந்தது. அவசரமாய் எழுந்து உட்கார்ந்தாள்.

''சசி, நீ போய் டிரெஸ் பண்ணிக்கம்மா... இந்திரா, நீ இங்கே வா... நீ அங்கேயே இருடா நந்து...''

சுகந்தி இந்திராவைத் தனியே நடத்திப் போனாள்.

''என்ன அண்ணி?''

''வாந்தி எடுத்தியா என்ன?''

''இல்ல அண்ணி'' என்றாள் இந்திரா புரியாமல்.

''பின்ன திடீர்னு என்ன மயக்கம்? மூணு வாரமா குளிக்காம இருக்கியோன்னு பயந்துட்டேன்... போறவன் உன் வயித்தில வேற பாரத்தை ஏத்திட்டுப் போயிட்டானோன்னு நெனைச்சேன்...'' சுகந்தியின் வார்த்தைகள், கீழே விழுந்தபோது ஏற்பட்ட வலியை மிஞ்சின. இந்திரா மெல்ல விசும்பினாள்.

''ஏன் அழுவறே?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல அண்ணி... போன வாரம்தான் குளிச்சேன்...''

''பின்னே எதனால மயக்கம்?''

உரையாடலின் அந்தக் கடைசிப் பகுதியில் நந்தகுமார் வந்து சேர்ந்தான்.

''அம்மா நேத்து மத்தியானம் சாப்பிட்டதுதான் அத்தை...'' என்றான் தழுதழுத்த குரலில்.

''சாப்பிட்டேன்னு சொன்னியே நேத்து கேட்டப்போ...'' ஜெயபாலின் குரலில் குற்றம் சாட்டும் வேகம் இருந்தது. ''ஏய் மூதேவி, அவளுக்கு மொதல்ல சாப்பிட ஏதாவது கொடு...'' என்று சுகந்தியிடம் இரைந்தான். ஷேவிங் பிரஷை எடுத்து முகத்தில் மறுபடி நுரை பூக்கச் செய்தான்.

வீட்டு வாசலில் ரிக்ஷா வந்து நின்று மணியடித்தது.

''சசி, பாரு ரிக்ஷாவே வந்திடிச்சு... சீக்கிரம் யூனிஃபார்மை மாட்டிக்கோ...''

''அண்ணா...'' இந்திரா ஒரு விண்ணப்பத்தோடு ஜெயபாலைப் பார்த்தாள்.


''என்னா?''

''நந்துவையும் ஒரு நல்ல ஸ்கூல்ல சேர்க்கணும் அண்ணா...

ஜெயபால் அவளை விநோதமாகப் பார்த்தான்.

''ஏன், இவரு படிச்சிட்டு நம்ம ஊருக்கு கலெக்டரா வரப் போறாராமா? ஸ்கூலும் வேணாம், ஒண்ணும் வேணாம்... பேசாம இரு...''

(தொடரும்)



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 200/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2000/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 200/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

ஸ்கூல் விட்டு நொண்டி அடித்தபடியே வந்து ஜங்கெனத் திண்ணையில் ஏறி உள்ளே போகும் போது திண்ணையில் படுத்திருந்த பாட்டி கூப்பிட்டாள்.

தெருவில் ஒவ்வொரு வீட்டிலும் வரிசையாய்த் திண்ணைகள். மதியத்தில் நிச்சிந்தையாய் வெற்றிலை போட்டுக் கொண்டு தூங்குவதற்கு. கதையளப்பதற்கு. பாய்ண்ட் வைத்துச் சீட்டு விளையாடுவதற்கு. விருந்தினர்வந்தால்இடப் பற்றாக்குறையைத்தவிர்ப்பதற்கு... திண்ணை என்பதற்கான உபயோகம். மற்றவர்களுக்கு இப்படித்தான் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது. எங்கள் வீட்டுத் திண்ணையைத் தவிர.



சித்தி

பலாப்பழத்தில் மொய்ப்பதைப் போல ஈக்கள் மொய்க்கும் அந்த இடதுபுற நீள் திண்ணையில் ஓரம் கிழிந்த கோரைப்பாயின் மீது அப்பாவின் கிழிந்த வேட்டிகளை விரித்து.... வெந்து போன பவானி ஜமுக்காளத்தைப் போர்த்தியபடி கூ... கூ... என அவ்வப்போது அவற்றைத் துரத்தியபடி... கூடவே இருமலும்...

பாட்டி... அப்பாவுக்குச் சித்தியாக இருக்கலாம். ஆனால் எனக்கு... எனக்கு எப்படியாயினும் பாட்டிதானே!

''என்ன பாட்டி?'' — என்று அருகே போய்க் குந்திட்டு அமர்ந்தேன்.

''டேய், ஓங்கப்பன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கப் போறானும்டா. நீ மோசம் போய்டப் போறே!'' — என்றாள்.

எனக்குள் எங்கோ ஓரிடத்தில் ஏதோ ஒன்று சிலுங்கென விழுந்து நொறுங்கியது போலிருந்தது.

''என்ன சொல்ற பாட்டி?''

''ஆமாண்டா. ஒனக்கும் ஒரு சித்தி வரப் போறா!''

''என் அப்பாக்கு நீ வந்த மாதிரிதானே?''

சிறிது நேரம் பாட்டி பேசவில்லை. பின்னர், ''அடேய், அவ ஒன்னைய எப்படி எப்படியோ கொடுமைப் படுத்துவாடா. சூடு வைப்பா. படிக்கவே விட மாட்டா. துணி தோய்க்கச் சொல்லுவா. பாத்திரம் தேய்க்கச் சொல்லுவா. ஒன் அப்பனைக் கைக்குள்ள போட்டுண்டு ஒன்னை வேலைக்காரனாகவே ஆக்கிடுவா. இங்கப்பாரு.புத்தியுள்ளபுள்ளைன்னா நீ பொழைச்சிக்கப் பாரு. அவ சொல்ற எதையும் கேக்காத. எதுத்துப் பேசு. அவ எது சொன்னாலும் கண்டுக்காம போ. மத்ததை நான் பாத்துக்கறேன்.''

''எனக்கொரு சந்தேகம் பாட்டி.''

''கேள்ரு?''

''நீயும் அப்பாவை இப்படியெல்லாம் செஞ்சப்ப அவருக்குச் சொல்லித் தர எந்தப் பாட்டியும் இல்லையா?'' — நான் மிகவும் வினயத்துடன் சிரிக்காமல்தான் கேட்டேன்.

உடனே பாட்டி, ''ஏண்டா துஷ்டப் பயலே, ஒன் நல்ல துக்குச் சொன்னா என்னையே பதம் பார்க்கறயா படவா ராஸ்கல்! நீ எக்கேடும் கெட்டு ஒழி. தாயில்லாப் பிள்ளையாச்சேன்னு சொன்னா நாக்குத் தடிச்சுப் போச்சே, என்னையே நக்கல் பண்ற அளவுக்கு. எழுந்து போடா!''—பாட்டி கத்தினாள்.

நான் உள்ளே சென்று கால்களைக் கழுவிக் கொண்டு புத்தகத்தை எடுத்துக் கொண்டு அமர்ந்தேன். நினைவுகள் படிப்பில் ஒன்றவில்லை.

அப்பாவும் நானும் அத்திப்பூத்தாற்போல் விசேஷ நாட்களில் ஒன்றாய் ஆற்றில் குளிக்கப் போவோம்.

மற்றைய நாட்களில் ஒரு மணி நேரமாவது

எனக்கு ஆற்றில் குளிக்கத் தேவைப்படும். மேல்துண்டை அரையில் கட்டிக் கொண்டு வேஷ்டியை அவிழ்த்துக் கல்லில் வைத்து விட்டு, அப்பா நீந்த மாட்டார். மூக்கைப் பிடித்தபடி மூன்று முறை கரையோரம் முங்கி எழுவார். காயத்ரி ஜபம் சொல்லி அங்



கேயே சிறிது நீரை எடுத்து விடுவார்.

"சீக்கிரம் குளிடா!" என்பார்.

அப்போதெல்லாம் கவனித்திருக்கிறேன். முதுகில், கால்களில், தொடையில் தழும்புகள். பாட்டி சூடு வைத்ததாம். தழும்புகளைப் போல்தானே நினைவுகளும் அழியாமல்...?

அதனால்தானே பாட்டி இன்று இப்படித் திண்ணையில் தீண்டப்படாதவளாய்க் கிடக்கிறாள்? அப்பா ரொம்ப நல்லவர். அவளின் சொந்தப் பிள்ளைகளே அவளை ஒதுக்கிவிட்டுச் சென்ற பின்னரும் அப்பா அவளைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருக்கிறாரே!

இருந்தாலும் அப்பாவை விட அம்மாவைத்தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். எந்த ஒரு முகச்சுளிப்புமில்லாமல் பாட்டிக்குப் பணிவிடை செய்து... அம்மா அம்மாதான்!

சாதம் பிசைந்து ஊட்டுவதிலிருந்து குளிப்பாட்டி, தலைவாரி, பொறுமையாகப் பாடம் சொல்லிக் கொடுத்து, அப்பா கூட ஓரிரு முறை அடித்து விடுவார். அம்மா கிள்ளக் கூட மாட்டாள். ராத்திரியில், தாழ்வாரத்தில், மடிமீது படுக்க வைத்துக் கொண்டு அழகாகப் பாடித் தூங்க வைப்பாள். எப்போதும் அவளின் முகத்தில் ஒரு புன்னகை அழியாது இருக்கும்.

அன்றும் அப்படித்தான் நான் ஐந்தாம் வகுப்பு 'இ' பிரிவில் மூன்றாவது வரிசையில் அமர்ந்து தமிழ் வாத்தியாரின் தலைப் பாகையை ஆராய்ந்து கொண்டிருக்கும் போது முனியன் ஓடி வந்தான்.

நினைவு தெரிந்த நாளாய் அவன் எங்கள் வீட்டிலே இருக்கிறான். எல்லா வேலைகளும் அவனே செய்வான். மாட்டு வண்டி ஓட்டி, பால் கறந்து, பொங்கலுக்கு வீடு முழுக்க சுண்ணாம்பு அடித்து, நெல் குத்தி, மாடு மேய்த்து, எனக்குப் புளியங்காய் அடிக்கக் கற்றுத் தந்தான். வாயில் இரண்டு விரலை வைத்து விசிலடிக்கக் கற்றுத் தந்தான். ஆற்றில் நூறு எண்ணும் வரை தம் பிடித்து இருக்கக் கற்றுத் தந்தான்.

"டே, நாணு, ஐயா ஒன்னைக் கையோட கூட்டிட்டு வரச் சொன்னார் வாடா."

வாத்தியாரை அனுமதி கேட்பதோ, அவரிடம் விஷயத்தை முதலில் சொல்வதோ கிராமத்தில் நடக்கவே முடியாத காரியங்கள். அவர்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலிருந்தால், "ஏண்டா முனியா, என்ன விஷயம்?" எனக் கேட்க வேண்டும். கேட்டார்.

அதன் பின் அவன் நடந்து கொண்ட விதம்தான் எனக்கு ஆச்சரியமளித்தது. இதுபோன்ற வேறு பல தருணங்களில் முனியன், "ஐயா ஊருக்குக் கூட்டிக்கிட்டுப் போறாங்க!" என்றோ வேறு ஏதாவது உப்பு சப்பில்லாத காரணத்தையோ வாய் கிழியச் சொல்வான்.

அன்று அவன் மெதுவாக வாத்தியாரிடம் சென்று குசுகுசுவென என்னவோ கூற, அவரின் முகம் திடீரெனக் கண்ணாடியில் பட்ட நீராவி போல் புகையாய்ப் படிய... "ச்சச்சோ. நான் கூட நேத்து கோவில்ல பாத்தேனே. சரி,சரி சீக்கிரம் கூட்டிட்டுப் போ!" — என்றார்.

யாரை இவர் கோவிலில் பார்த்திருப்பார்?

கல்யாணகுமார்

நான் கூடத்தான் இவரை நேற்று கோவிலில் பார்த்தேன். அம்மாவுடன் அங்கு சென்றிருந்த போது.

என்னவாயிருக்கும், யார் வந்திருப்பார்கள்? எந்த ஊருக்குப் போகப் போகிறோம்? என்ற வினாக்களுடன் வீடு நோக்கிப் பையைத் தோளில் போட்டுக் கொண்டு ஓடினேன்.

வீட்டு வாசலில் ஒரே கூட்டம். சந்துகளில் புகுந்தபடி வாசலை எட்டி, கூடத்தில் அடியெடுத்து வைத்தேன்.

வடக்குப் பார்த்த மாதிரி, அம்மா படுத்திருந்தாள். தலைமாட்டில் நன்றாகப் புளி போட்டுத் தேய்த்திருந்த குத்து விளக்கு பிரகாசமாக...

அப்பா வாயில் துண்டை வைத்துப் பொத்தியபடிக் குலுங்க... திண்ணையில் பாட்டி ஏதேதோ சொல்லிப் பிலாக்கணம் வைத்தபடி!

"ஐயோ, நான் வயல்லருந்து வந்ததுமே அத்தான் நெஞ்சு வலிக்கறதுன்னு ஒக்காந்தா. அப்படியே போயிட்டாளே?" அப்பா விம்மினார்.

அம்மாவின் முகத்தையே பார்த்தேன். காலையில் ஸ்கூலுக்குக் கிளம்புமுன்...

"டேய், தலைமுடியைப் பாரு. ஒன்னை மாதிரியே பிடிவாதமா அடங்க மாட்டேன்னு சிலுப்பிண்டு நிக்கறது."

"சட்டை பட்டனைக் கரெக்டா போட்டுக்கோடா. இந்தா இன்னும் ஒரு வாய் சாப்பிட்டுடு. அப்புறம் மத்தியானம் சீக்கிரம் பசிக்கும்டா. என் ராஜால்லியோ... ஆ... காமி. இந்தா... இதுதான் ஆனை உருண்டை... இதா இங்க பாரு... கொஞ்சம்தான் இருக்கு... இது பூனை உருண்டை... நல்லா மென்னு தின்னு... இதான் கடைசி. இதான் நெய்யுருண்டை...ம்... துண்டுல மூஞ்சியைத் தொடச்சிக்கோ."

"பாரு வேதா வந்துட்டா. சித்த இரு. கால்ல செருப்பைச் சரியா நொழைச்சிக்கோடா. இல்லாட்டா வுழுந்துடுவ."

"ம்... சரி, குனிம்மா!" — என்றேன்.

"ம்."

அந்தக் கன்னத்தில் ஒரு முத்தம். இந்தக் கன்னத்தில் ஒரு முத்தம். டாட்டா... பசுமையாக நினைவிலிருந்தது. பூரித்தபடி அம்மா என் கன்னத்தை வழித்துத் தன் தலையில் திருஷ்டி சொடக்குப் போட்டுக்கொண்டாள்.

எல்லோரும் 'நல்ல சாவு, நல்ல சாவு' என்றே சொன்னார்கள்.

எனக்கு அழுகை, அழுகையாக வந்தது. என் அம்மா என்னை விட்டுப் போனது நல்ல சாவா? சாவில் கூட நல்ல சாவு, கெட்ட சாவு என்று பிரிவு உண்டா?

சுடுகாட்டில் அம்மா மேல் சந்தனக் கட்டை வைத்து, மர சிராய்களும், எருவா முட்டைகளும் வைத்துப் போர்த்தி... அப்பா கண்கள் அழுதழுது சிவந்து போய்... என் கையில் கனன்றபடி ஒரு மண்சட்டியில் கங்குகள். அப்பாவின் உதவியுடன் அம்மா மீது வைக்க...

"அம்மா!" — எனக் கத்தினேன். அப்பா



தேஹம் ரொம்ப இழிவானது. இதிலிருந்து விடுபட வேண்டும்' என்று பெரியவர்கள் பாடி வைத்திருப்பதெல்லாம் உண்மைதான். ஆனால் இன்னொரு நிலையில் பார்த்தால் இந்த தேஹம் என்பது ஒரு மஹா அத்புதமான மெஷினாக இருக்கிறது. ஒரே மெஷினில் ஒவ்வொரு பாகம் ஒவ்வொரு தினுஸான கார்யத்தைச் செய்கிறது. கண் என்று ஒன்று வெளிச்சத்தையும் வர்ணங்களையும் பார்க்கிறது. காது என்று ஒன்று சப்தங்களைக் கேட்கிறது. இருக்கிறதெல்லாம் ஒரே ஆத்மா — இத்தனை அவயவங்களுக்குள்ளேயும் ஒரே ஜீவன் தான் இருக்கிறது என்றாலும் கண்ணும் காதும் கிட்டக் கிட்ட இருந்தும் கூடக் கண்ணால் கேட்க முடிவதில்லை. காதால் பார்க்க முடிவதில்லை. பக்கத்திலேயே வாய் என்று ஒன்று. அதற்குத்தான் ருசி தெரிகிறது. பேசுகிற சக்தியும் அதற்கே இருக்கிறது. தொண்டையில் பல தினுஸாகக் காற்றைப் புரட்டி அழகான கானம் செய்ய முடிகிறது. பல வஸ்துக்களைப் பிடிப்பதற்கு ஏற்ற மாதிரி கையும் விரல்களும் அமைந்திருக்கின்றன. இந்த அமைப்பு கொஞ்சம் வேறுவிதமாக இருந்தாலும் இப்போது நாம் பண்ணுகிற கார்யங்களைப் பண்ண முடியாது. அடி எடுத்து வைத்து மேலே போவதற்கு வசதியாகக் காலின் அமைப்பு இருக்கிறது. நடக்கிற போது கூடிய மட்டும் ஜீவராசிகள் நசுங்காதபடி பூரான் மாதிரியானவற்றின் மேலேயே நாம் பாதத்தை வைத்தால் கூட அவை நெளிந்துக் கொண்டு ஓட வசதியாக உள்ளங்காலில் குழி வைத்தாற் போன்ற ஏற்பாடு, சப்பணம் கட்டி உட்கார வசதியாக முழங்காலில் எலும்பு, நரம்புகளின் அமைப்பு என்று இப்படி ஒவ்வொன்றைப் பார்த்தாலும் பராசக்தி எத்தனை ஸூக்ஷ்மமான கல்பனையோடு ஒரு சரீரத்தைப் பண்ணியிருக்கிறாள் என்று ஆச்சர்யமாக இருக்கிறது. தனித்தனியாக ஒவ்வொரு பாகமும் ஓர் அற்புத மெஷினாக இருப்பதோடு மட்டுமல்லாமல் எல்லாமாக ஒன்றுக்கொன்று இசைவாக ஸஹாயம் செய்து போஷித்துக் கொள்வதும் மஹா அதிசயமாக இருக்கிறது. ஆனபடியால் எவனோ லக்ஷத்தில் ஒருவன் தேஹம் பொய், மனஸ் பொய் என்று புரிந்து கொள்ளும் ஞானியாக ஆனாலும், பாக்கி எல்லாரும் பகவான் தந்திருக்கிற இந்த அத்புதமான மெஷினை வைத்துக் கொண்டு தர்மமாக வாழத்தான் முயற்சி பண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தத் தர்ம வாழ்க்கையிலிருந்துதான் அப்புறம் ஞானத்துக்குப் போக வேண்டியவர்களாயிருக்கிறோம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.

என்னை இறுகப் பிடித்தபடி பின்னுக்குத் தள்ளிச் சென்று விட்டார்.

அப்பா வரும் ஓசை கேட்டது. சட்டெனக் கண்களைப் புத்தகத்தில் பதித்தேன். ஒருவேளை பாட்டி சொன்னது உண்மையாயிருக்குமோ? அப்பா கல்யாணம் பண்ணிக்கப் போறாரோ? ராத்திரி முழுக்கத் தூக்கமே வரவில்லை.

வீடு கல்யாண வீடாகியது. நான் அப்பா வாங்கித் தந்த புதுச் சட்டை, டிராயருடன் திரிந்தேன்.

இவள் அம்மாவை விடச் சிறிது குள்ளம். ஆனால் நிறம் சற்று அதிகம். உடம்பு ஏறக்குறைய அம்மாவின் உடம்புதான். கண்கள் தான் பெரிசு. மைவிட்டிருந்ததால் இன்னும் பெரிதாக... ஆனால் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போல அழகாக... துருதுருவென்று அலைபாய்ந்தபடி...

இவள் வீட்டிற்கு வந்து ஒரு வாரமாகி விட்டது. என்னுள் பயம் நத்தையைப் போல் பதுங்கிக் கிடந்தது.

அவளின் கண்ணில் படாமலேயே திரிந்தேன். இப்படி எத்தனை நாளைக்குத் திரிய முடியும்? குளத்தங்கரைப் படிகளில் போய் அமர்ந்து நீண்ட நேரம் அழுவேன். நிலா வரும். காற்று வரும். நான் இருப்பேன். அம்மா மட்டும் வர மாட்டாள். வரவே மாட்டாள்.

அன்று ஸ்கூல் லீவு. நான் கூடத்தில் படுத்துத்தூங்கிவிட்டேன். திடீரென விழிப்பு வந்தபோது திண்ணையில் பாட்டி யாருடனோ பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

யாராயிருக்கும் எனக் கூடத்து ஜன்னல் வழியாக எக்கியபடி பார்த்தேன். கற்பகம், அதுதான் அப்பா கல்யாணம் செய்து கொண்ட பெண்.

''ம... இங்கப் பாரு. நீ இவனுக்கு ரெண்

டாந்தாரமா வாழ்க்கைப் பட்டிருக்கே. ஒனக்கும் குஞ்சு குளுவான்னு பொறக்கும். மூத்த தாரத்துப் புள்ள மேல அவன் உசிரையே வச்சிருக்கான். அதனால நீ மொதல்ல ஒன் புருஷனை கைக்குள்ள போட்டுக்கணும். இல்லாட்டா நாளைக்கு எல்லாம் அந்தப் பையன் கைக்குப் போயி நீங்கள்லாம் அவனை எதிர்பார்த்திண்டு நிக்கற நெலை வந்துடும். அதனால இப்ப இருந்தே அந்தப் பையனை அடக்கி வச்சுக்க. நல்லா வேலை வாங்கு. ஸ்கூலுக்குப் போறத எப்படியாவது நிறுத்திடு.

நான் ஜன்னலிலிருந்து நகர்ந்து வாசலுக்கு வந்தேன். அவள் உள்ளே சென்றாள். திண்ணையிலேயே சற்றுநேரம்வானம்பார்த்தபடி நின்றேன். தென்னை மரக்காற்று சில்லென வீசியது. குக்கூ... என கத்தியபடி ஒரு பறவை சிறகடித்துச் சென்றது.

பாட்டி சலனமில்லாமல் என்னைப் பார்ப்பது தெரிந்தது. நான் அவளருகில் சென்று மண்டியிட்டபடி அமர்ந்தேன்.

''என்னடா?'' என்றாள்.

''எனக்கொரு சந்தேகம் பாட்டி!''

''கேளு.''

''நீ எப்பச் சாவ?''

''என்னது?'' — தரையில் போடப்பட்ட விலாங்கு மீனாய் அந்தக் கேள்வியை ஜீரணிக்க முடியாமல் திணறினாள்.

''எனக்குத் தெரியும். நான் எப்ப ஒழிஞ்சிப் போவேன்னு, நீ, ஒங்கப்பன், இந்த வீடே அப்படித்தான் நெனைச்சிக்கிட்டிருக்குது. அந்த ஆண்டவனுக்குக் கண்ணுல்ல. என்னை இந்த வீட்டில வச்சிக்கிட்டு சித்திரவதை பண்ணி ரசிச்சுக்கிட்டிருக்கான்... அட பாழும் தெய்வமே...'' என அரற்றினாள்.

''தெரியுதில்ல. மறுபடியும் நீ ஒன்னை மாதிரி ஏன் இன்னொருத்தியை உருவாக்கறே? அவளும் நாளைக்கு இந்த மாதிரி புழுத்துச் சாகணும்னு? இத்தனை வயசாயியும் ஏன் பாட்டி நீ அப்படியே இருக்கே?''

பாட்டி வாய் திறக்கவில்லை.

''என்கிட்ட நீ அவ சொல்ற பேச்சைக் கேட்காத. அவளுக்கு அடங்காத. அப்படின்னு சொன்னே. இப்ப அவகிட்ட நீ அவனை அடக்கு. அப்பத்தான் நீ வாழ முடியும்ங்கிற. நீ ஒன் மனசுல என்னதான் நெனச்சுக்கிட்டிருக்கிற?''

அவள் இன்னமும் வாய் திறக்கவில்லை. நான் திண்ணையிலிருந்து இறங்கிக் கோவில் பக்கம் நடந்தேன்.

ஒருவேளை இந்த மாதிரி பாட்டியைக் கேட்டதற்கு இருவரும் சேர்ந்து கரண்டிக் காம்பைப் பழுக்கக் காய்ச்சி சூடு வைப்பார்களோ? அடிப்பார்களோ? அப்பா உடம்பின் ரணத்தழும்புகள் கண்ணருகில் வந்து அச்சுறுத்தின.

பௌர்ணமி. ஒவ்வொரு மாதமும் அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டு, தெப்பக்குளப் படிகளில் அம்மாவின் மடிமீது தலை வைத்துப் படுத்துக் கொண்டு அம்மா சொல்லும் கதைகளை ''உம்'' கொட்டியபடி கேட்டுக் கொண்டு... கோவில் மணி கூட 'அம்மா, அம்மா' என்றே சப்திப்பதாய்...

தெப்பக்குளத்தில் சென்று அமர்ந்து, ''அம்மா'' எனக் கத்தினேன். நாற்புறமும் குளப்படிகளில் எதிரொலித்து, எதிரொலித்து குளத்தினுள் சென்று அடங்கி, நீரினுள் படிகமாக நிலா தெரிய... அதிலும் சிறிது நேரத்தில் அம்மாவின் புன்னகைக் கீற்றுடன் கூடிய முகம் தெரிய... ''அம்மா'' என ஆவலுடன் தண்ணீரை அள்ளக்... கலங்கிக்... கலங்கி... சுற்றுச் சுற்றாய் அம்மா சிதறிப் போக...

உள்ளே விழ யத்தனித்தவனை யாரோ தோளில் கைவைத்தாற் போன்று... அந்தத் தொடு உணர்ச்சி உள் எலும்புகளிலும் பாய்ந்து பரவசப்படுத்துவதாய்... இத்தகைய உணர்ச்சியை அம்மாவிடம் மட்டுமே அறிந்திருக்கின்றேன்.

சட்டெனத் திரும்பிப் பார்க்க அவள்... அப்பாவின் மனைவி... மெல்ல அருகே இழுத்தாள். அவளின் புடைவை நுனி உடலில் பட்டதுமே புல்லரித்துப் போனது. அம்மாவிடமும் இப்படித்தான். அவளின் முந்தானையைப் பற்றியபடியே வளைய வருவேன். அதுவே ஆயிரம் யானை பலம் எனக்கு...

அம்மாவைப் போலவே முந்தானை என் முதுகைப் போர்த்த ஆதுரமாக, ''அழுறயா நாணு?'' என்றாள்.

நான் பேசவில்லை. நெஞ்சு திடுக் திடுக்கென அடித்துக் கொண்டது. அப்படியே என்னைப் பிடித்துக் குளத்தில் தள்ளி விடுவாளோ? இல்லை, 'ஏண்டா பாட்டிய அப்படி கேட்ட?' என்று சொல்லி அடிப்பாளோ? உடல் நடுங்கியது.

''ஏன் உடம்பு நடுங்குது? குளிருதா?'' என்றபடி தாய்க் கோழி தனது இறக்கையினுள் குஞ்சை இருத்திக் கொள்வதைப் போல் என்னை இழுத்து நெருக்கமாக அணைத்துக் கொண்டவள், என் தலையை லேசாகக் கோதிவிட்டபடி, ''என்னைப் பார்த்துப் பயப்படறயா? பயப்படவே தேவையில்லை. நீ சின்னப் பையன் பாட்டிகிட்ட சடார்னு அப்படிக்கேட்டுட்டே. நான் அப்படியெல்லாம் கேக்க முடியுமா?'' என்றாள்.

நான் அவள் என்ன சொல்ல வருகிறாள் எனப் புரியாமல் பார்த்தேன்.

அவளின் கண்கள் கலங்கியிருந்தன.

''நான் அன்பைத் தேடித்தான் இங்க வாழ்க்கைப்பட்டிருக்கேண்டா நாணு. என்னைத் தனிச்சு விட்டுறாத... ஏன்னு... ஏன்னு... என் அம்மாவோட மூஞ்சி கூட எப்படியிருக்கும்னு எனக்குத் தெரியாது..'' அவள் உடல் குலுங்கினாள்.

நான் அவளின் கண்ணீரைத் துடைத்தபடி உதடுகளைத் திறந்தேன். ''அம்மா'' என்ற சொற்கள் தித்திப்பாய் வாயிலிருந்து நழுவ அவளை இறுகக் கட்டிக் கொண்டேன்.



பட்டுக்கோட்டை பிரபாகர்

என்னைக் காணவில்லை

17 பரத் வீட்டிற்கு அருகாமையில் சாலைத் திருப்பத்தில் ஒரு மின்சார டிரான்ஸ்ஃபார்மர். அதன் அகலமான நிழலில் ஐக்கியமாகி நின்றனர் அவர்கள். சாலையில் சற்றுத் தள்ளி ஓர் அம்பாசிடர் கார் இறக்கை விரித்த பறவை போல் தனது பின்பக்கக் கதவுகளைத் திறந்து வைத்துக் காத்திருந்தது.

''இது தோதான இடம்தானு தாமஸ்?'' என்றான் சுகுமார்.

''கச்சிதமான இடம். பயமே வேணாம். இது குடியிருப்புப் பகுதி. எட்டு மணியானு ஜன்னலை சாத்திட்டுத் தூங்கிடும். இல்லைன்னு டி. வி. பார்க்கும். ஒரு பிள்ளை வெளியே வராது'' என்ற தாமஸ் மணிக்கட்டைப் பார்த்து, ''மணி இப்போ ஒம்போதரை'' என்றான்.

''நான் போய்க் கார்ல இருக்கட்டுமா?''

''சரி. எந்த நேரமும் பரத் வரலாம்.''

''பைக்லதானே?''

''ஆமாம்.''

''கூட அந்தப் பொண்ணும் வந்தா என்ன பண்றது?''

''வராது. இவன் மட்டும்தான் வருவான். அது ஹாஸ்டல்ல தங்கி இருக்குது.''

''அவனை எப்படி மடக்குவே தாமஸ்?''

''அது என் கவலை. நீ போய்க் கார்ல உக்காரு.''

''பரத் என்னை அடையாளம் கண்டுபிடிக்கக் கூடாது தாமஸ்.''

தாமஸ் தன் பாண்ட் பையிலிருந்து நான்காக மடிக்கப்பட்ட கர்சீப்பை எடுத்துக்காட்டி, ''கவலையே வேணாம். மயங்கிடுவான். தூக்கிக் கிட்டுத்தான் காருக்கு வருவேன்.''

''அப்போ அவனோட பைக்?''

''பொறுப்பா கொண்டு போய் வீட்டு வாசல்ல நிறுத்திடலாம்.''

''பரத் உன்னை எதிர்த்துட்டா? ரகளையாகி... சத்தமாகி... ஜனங்கள் வந்துட்டா?''

''சுகுமார், நீ எல்லை மீறிப் பயப்படறே. இந்த நிமிஷம் உனக்குத் தீவிரமான ஹார்ட் அட்டாக் வந்துட்டா? எதையும் எதிர்மறையிலே பார்க்காதே. நீ போய்க் கார்ல் உக்காரு.''

சுகுமார் போய்க் காத்திருந்த காரில் டிரைவிங் சீட்டில் அமர்ந்து

கொண்டான். தாமஸ் பரத்தின் மோட்டார் பைக்கின் தூர ஒலியைக் கேட்பதற்காகக் காதைத் நீட்டிக் கொண்டு காத்திருந்தான்.

ஒரு நாற்காலி காலி இல்லாமல் வரவேற்புக்கு வந்தவர்கள் நிறைந்திருந்தார்கள். டிபன் சாப்பிடச் சென்றூர்கள். அடுத்தவரின் கர்சீப்பில் கைதுடைத்தார்கள். வெற்றிலே போட்டார்கள். சிகரெட் பிடித்தார்கள். மேடையில் அமர்ந்த ஜோடியின் பொருத்தம் குறித்துக் கருத்துப் பரிமாறினர்கள். மெல்லிசைக் குழுவின் பாடலுக்கு அனிச்சையாகக் கால்களால் தாளம் போட்டார்கள்.

பரத் மண்டபத்தின் வாசலே நோக்கி நிதானமாக நடந்தான்.

முதல் வரிசையிலிருந்து எக்கி அவன் முதுகுதொலேந்துபோகும்வரைக்கும்பார்த்து விட்டு. அமர்ந்து சுசீலா கையில் இருந்த ரோஜாப் பூவை இதழ் இதழாகப் பிய்த்துக் கொண்டிருந்தாள்.

சந்தனமும், கற்கண்டும் கொடுத்துக் கொண்டிருந்த பெண்கள் ஒரே மாதிரி பாவாடை, தாவணி உடுத்தி, ஒரே மாதிரி சிகை அலங்காரம் செய்து, ஒரே மாதிரி சிரித்துக் கொண்டிருக்க... பரத் தடுக்கப்பட்டான்.

''என்ன புறப்பட்டுட்டீங்க?''

''இல்லே, சும்மா வாசல் வரைக்கும்.''

''அப்ப சரி.''

வீடியோ காமிராவைத் தாண்டி வாசலுக்கு வந்தான். ரேசுக்குப் புறப்படும் தோரில் வரிசையாகக் கார்கள் நின்று கொண்டிருந்தன. ஸ்கூட்டர்களும், மோட்டார் பைக்குகளும் ஒழுங்கில்லாமல் நிறுத்தப்பட்டிருந்தன. இரண்டு பெட்ரோமாக்ஸ்விளக்குகள் ஓரமாகவைக்கப்பட்டிருந்தன. வாசலில் நின்ற இரண்டு மரங்களின் உடம்பெங்கும் மின்சாரக் கொப்புளங்கள். தாரோடு கட்டப்பட்டிருந்த வாழைமரத்தில் ஒரு பட்டையை உரித்துக் கொண்டிருந்தான் சட்டை போடாத அந்தச் சிறுவன்.

சற்றுத் தள்ளி மூன்று இளைஞர்கள் தலா ஒரு சிகரெட் சுமந்து ஆகாயம் பார்த்து உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு டிரைவர்கள் ஒரே பேப்பரைக் காரின் உள் விளக்கின் வெளிச்சத்தில் வெளியே நின்று படித்துக் கொண்டிருக்க... இன்னும் தள்ளி அலுமினியத்தட்டுக்களுடன் எச்சில் இலேக்காகக் காத்துக் கொண்டு ஓர் அழுக்குக் கும்பல்.

யார் இதில் தகவல் தம்பி?

யாரைப் போய்க் கேட்பது?

மண்டபத்தின் வாசலுக்கு வா என்று சீட்டில் இருக்கிறது. இதோ, வந்தாயிற்று. என்னிடம் குறிப்பாகச் சீட்டுக் கொடுக்கச் சொல்லியிருப்பதால், அவன் என்னே அறிந்தவன். அதனுல் அவனுக வந்து பேச வேண்டும்.

யாரும் வரவில்லேயே...

பரத் சற்று நடந்து அந்த அயல்நாட்டுக் காரைச் சமீபித்து, அதில் சற்றுச் சாய்ந்து நின்று கொண்டு, சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான். தன்னே நோக்கி யாராவது வருகிருர்களா என்று பார்த்துக் கொண்டே புகைபிடித்தான்.

எதிர்ப்புறம் புறப்பட்டுச் செல்லும் சாலே விளக்குகள் நீங்கலாக இடைவெளி விட்டு விட்டு, இருட்டாக இருக்க... அந்த இருட்டில் உற்பத்தியாகி அந்தச் சிறுவன் ஓடி வந்தான் பரத் நோக்கி...

''இந்தாங்க சார்.''

அவன் நீட்டின துண்டுக் காகிதத்தை வாங்கிக் கொண்டு, ''யார் கொடுத்தது இதை?'' என்று கேட்டான்.

''அதோ அவரு.''

அதோ அவரு நாற்பதடி தூரத்தில் முதுகு காட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்.

பரத் காகிதத்தில் இருந்த எழுத்துக்களேப் படிக்க வெளிச்சம் போதாமல், லேட்டரைக் கிளிக் செய்து, நெருப்புத் திலகத்தை அருகே கொணர்ந்து படித்தான்.

''என்னே இடைவெளி விட்டுத் தொடரவும். நானுகப் பேசும் வரை நடுவில் என்னிடம் பேச வேண்டாம். அழைக்க வேண்டாம்.''

படித்து முடித்த பரத் அதன்படி நடப்பதா, வேண்டாமா என்று தீர்மானிக்கும் முன்பே, அந்தத் தூர மனிதன் இவனேவிட்டு விலகி நடக்க ஆரம்பித்தான்.

என்ன ஆகிவிடும்? தொடர்ந்துதான் பார்க்கலாமே... என்று பரத் அவன் முதுகில் கண் வைத்து அதே வேகத்தில், அதே திசையில் நடக்க ஆரம்பித்தான். பாண்ட் பாக்கெட்டுக்குள் கைவிட்டுச் சின்ன சைஸ் பாதுகாப்புக் கத்தியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

ஏதோ வாக்கிங் வந்தவனேப் போல அவன் அவசரமே இல்லாமல் நடக்க... தொடர்ந்த பரத்திற்கு அவன் ஏதோ விசில் அடிப்பதைச் சூழலின் அமைதியில் கேட்க முடிந்தது.

இது யதேச்சையான பாட்டு விசிலா? இல்லேயாருக்காவதுசிக்னலா?பரத்திரும்பித் தன்னே யாராவது தொடர்கிருர்களா என்று பார்த்தான். யாரும் இல்லே. சட்டைப் பையில் இருந்து வரவேற்பில் எடுத்துக் கொண்ட ரோஜாவை ஒவ்வொரு இதழாய்ப்

''இமர்து டன் கல்யாணத் தேதி நிச்சயமாகும்போல் இருக்கு. கல்யாணச் செலவுக்குக் கையில் நயா பைசா இல்லேடா.''

''ஏதோ ஐயாயிரம் ரூபாய் சேவிங்ஸ் இருந்ததாகச் சொன்னியே!''

''பல ஊர்களுக்குப் பெண் பார்க்கப் போய்வந்த வகையில் ஐயாயிரம் ரூபாயும் காலியாயிடுச்சே!''

— மீனம் தனுக





பிய்த்துப் போட்டுக் கொண்டே நடந்தான்.

பத்து நிமிட நடையில் அவன் ஒருமுறை கூடப் பரத் தொடர்ந்து வந்து கொண்டு தான் இருக்கிறானா என்று திரும்பிப் பார்த்து உறுதி செய்து கொள்ளாதது ஆச்சரியமாய் இருந்தது. அவசியம் வருவான் என்று எப்படி நம்பினான்?

இப்போது அவன் முக்கிய சாலையில் இருந்து இடதுபுறம் சரிந்த.சின்ன சாலையில் நடக்க, அங்கே தயாராக ஒரு டாக்சி நின்று கொண்டிருந்தது.

பரத் பார்த்துக் கொண்டே நடக்க... அவன் டாக்சியின் பின் கதவைத் திறந்து அமர்ந்து கொண்டதும், டாக்சி தாவி முக்கிய சாலைக்கு வந்து பரத் அருகில் நின்றது.

இவன் பக்கமாகப் பின் கதவைத் திறந்து, ''ஏறுங்க பரத், போய்க்கிட்டே பேசலாம்'' என்று அவன் சொல்ல... பரத் அந்தக் கதவைச் சாத்திவிட்டு...

''முதல்ல பேசலாம்... அப்புறம் அவசியப் பட்டால் போகலாம்'' என்றான்.

இன்னும் இயக்கத்திலேயே இருந்தது டாக்சி.

''சரி. வண்டியை ஓரமா நிப்பாட்டுப்பா'' என்றுவிட்டு இறங்கினவன் கொஞ்சம் குள்ளமாய் இ ந்தான். நிறைய முடி வைத்திருந்தான். முரட்டுத் துணியில் பாண்ட், சட்டை.

பரத்தினை நெருங்கி, ''ரொம்ப பயப்படாதீங்க லாயர் சார்'' என்றான்.

''லோட் பண்ணின ரிவால்வரை வயத்தில செருகி வச்சிருக்கிறவனும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை மிஸ்டர்... தகவல் தம்பி, பேரே அதானா?''

''பேர் எல்லாம் வேணாம்.''

''சரி. வேணாம். என்ன தகவல் என் கிட்டே சொல்லணும்?''

''உங்ககிட்டே உள்ள ஒரு விலாசத்துக்கு ஒரு விலை நிர்ணயம் செய்ய முடியும்.''

''என்ன விலாசம்?''

''அசோக்கோட விலாசம்.''

''அசோக் யாரு?''

''வார்த்தைகளை விரயமாக்க வேணாம். எவ்வளவு பணம் வேணும்?''

''எதுக்குன்னே புரியலியே...?''

''அசோக்கை என்கிட்டே ஒப்படைக்கிறதுக்கு. அது கூட வேணும். அவன் எங்கே இருக்கான்னு சொன்னாப் போதும்.''

''எந்த அசோக்கைச் சொல்றீங்க?''

''பரத், பொறுமையோட எல்லைக்கு என்னை விரட்டறீங்க.''

''எனக்கெதுக்கு வம்பு? நான் விரட்டவும் வேணும். நீங்க ஓடவும் வேணும். வரட்டுமா?'' என்று நகர இருந்த பரத்தின் தோளில் அழுத்தமாக விழுந்தது அவன் கரம்.

''பதில் சொல்லாமப் போறது உயிருக்குப் பத்திரமில்லே பரத். திரும்பிப் பார்க்கிறியா கொஞ்சம்?''

பரத் திரும்பிப் பார்க்க, ஒரு சுழற்சி ஏற்படுத்தி நிறுத்தினான் அவன் தன் இடது கையில் வைத்திருந்த பிஸ்டலை. ''என்ன பரத் பார்க்கிறே? இல்லாத துப்பாக்கியை மிரட்டப் பயன்படுத்தறது என் வழக்கத்திலே இல்லே. வண்டில ஏறலாமா?'' என்றான்.

''இரு. வர்றேன். உனக்குத் தேவை அசோக் இப்ப இருக்கிற இடம்தானே?'' என்று கேட்டுக் கொண்டே தார்ச் சாலையின் ஓரத்தில் மண் பகுதிக்கு நகர்ந்து நின்ற பரத், நேற்று பெய்த மழையில் ஈரப் பதத்தில் இருந்த தரைப் பரப்பில், செருப்பு விலக்கி, கால் கட்டை விரலால் அவனறியாமல் மெதுவாக T என்று எழுதி அதைச் சுற்றி வட்டம் போட்டான். பிறகு T. M. X. என்று காரின் எண்ணை எழுத ஆரம்பித்து 5262 என்பதில் 52 எழுதி முடித்து ஆறை ஆரம்பித்த போது...

''வண்டிக்குள்ளே வந்து சொல்லு, கமான்'' என்று விலாவில் பிஸ்டல் முனையால் தொட்டுத் தள்ளப்பட்டான். வலுக்கட்டாயமாக ஏற்றப்பட்டான்.

டாக்ஸி புறப்பட்டது. இரண்டு பக்கக் கண்ணாடிகளும் மேலே ஏற்றப்பட்டன.

''சொல்லு, அசோக் எங்கே இருக்கான்?''

''சொல்லிட்டா என்னை இறக்கி விட்டுடுவியா?''

''நிச்சயமா. எனக்கு நீ தேவையில்லே.''

''சொல்றேன். எதுக்காகக் கேக்கறேன்னு மட்டும் சொல்லு.''

''முடியாது.''

''ஓக்கே. அதைப் பத்தி எனக்குக் கவலை இல்லே. சொல்றேன், குறிச்சுக்கிறியா?''

''தேவையில்லே. மனசிலே எழுதிக்குவேன், சொல்லு.''

''வெஸ்ட் மாம்பலம். அங்கே தம்பையா ரெட்டித் தெருவோட எக்ஸ்டன்ஷன்ல மூந்நூத்தி பத்தொன்பது பார் ஏழுங்கிற வீட்லே அசோக் தலைமறைவா தங்கியிருக்கான்.''

''வெரிகுட்.''

''டிரைவர் இப்பிடியே நிப்பாட்டிக்க. நான் இறங்கிக்கறேன்.''

''ஆமாம் டிரைவர், நிப்பாட்டிடு.''

நிறுத்த... பரத் இறங்க முயல...

''ஒரு நிமிஷம் சார்'' என்ற அவன் தன் பிஸ்டலை டிரைவரிடம் தந்துவிட்டு, குனிந்து எடுத்து பரத்தின் இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கயிற்றில் கட்டினான்.

''ஏன், ஏன் கட்டறீங்க?''

''பொறுமை லாயர் சார்'' என்று துணி எடுத்து பரத்தின் கண்களைக் கட்டி விட்டு, ஒரு அகலமான பிளாஸ்திரி எடுத்து வாயைச் சுத்தமாக ஒட்டினான். ''காது கேக்குதா சார்? அதுவும் கேக்கக் கூடாதே...'' என்று பஞ்சு எடுத்து இரண்டு காதுகளிலும் திணிக்க முற்பட்டு, இரண்டாவது காதில் திணிக்கும் முன்னர், ''நீங்க சொன்ன விலாசம் உண்மையானதுதானான்னு நாங்க தெரிஞ்சுக்க வேணுமா? அதுவரைக்கும் நீங்க எங்க பொறுப்பில இருந்தாகணும்'' என்று கூறி விட்டுக் காதுக்கு மிக அருகில் வாயை வைத்து, ''குக்குருக்கூ...'' என்று கத்த... பரத் சிலிர்த்துக் கொண்டான்.

டாக்ஸி புறப்பட்டது மறுபடி.

பத்தரை மணி வரைக்கும் பொறுமையாக மண்டபத்திலேயே காத்திருந்தாள் சுசிலா. மெல்லிசைக்குழு வாத்தியங்களுக்குத் துணி போர்த்தி வேனில் ஏற்றிக் கொண்டிருக்க... உதறி உதறிப் பெரிய ஜமுக்காளங்களை மடித்தார்கள். நாற்காலிகள் பட், பட்டென்று மடக்கப்பட்டுக் கொண்டிருந்தன. சர்ர், சர்ர் என்று ஒவ்வொரு காராகப் புறப்பட்டுப் போயின. சமையல் பகுதியில் கழுவித் தள்ளிக் கொண்டிருக்க... அதிகமாக நடப்பட்டிருந்த டியூப் லைட்டுகளை எலக்ட்ரீஷியன்கள் கழற்றிக் கொண்டிருந்தார்கள். ஒரு பெரியவர் தோல் பையில் இருந்து பணம் எடுத்து எடுத்துக் கொடுத்தார்.

சுசிலா கலவரப்பட்டாள். வாசலில் வந்து பார்த்தாள். இரண்டு மூன்று சைக்கிள்களும், பரத்தின் மோட்டார் பைக்கும் மட்டுமே நின்று கொண்டிருந்தன.

மண்டபத்தின் அலுவலக அறைக்குச் சென்று அனுமதியோடு வீட்டிற்கு போன் செய்து பத்து ரிங் பார்த்து வைத்தாள். எங்கே போனார்? அவசரமாகப் போவதென்றால் சொல்லிவிட்டுத்தானே போவார்?

விபரீதமாய் ஏதாவது நடந்திருக்குமோ? பரத் வலுக்கட்டாயமாகக் கடத்தப்பட்டிருக்கலாமா? பரபரப்பான ஒரு மண்டப வாசலில் கடத்த முடியுமா? பின்னே எங்கே?

சுசிலாவுக்குள் கவலை ஒவ்வொரு டிகிரியாய் உயர...

வெளியே வந்து பைக் அருகில் நின்று கையைப் பிசைந்து கொண்டு நிற்க... காற்றில் தாவி வந்து அவள் புடைவையில் பட்ட காகிதத்தைப் பார்த்து, குனிந்து எடுத்தாள்.

''என்னை இடைவெளி விட்டுத் தொடரவும். நானாகப் பேசும் வரை நடுவில் என்னிடம் பேச வேண்டாம். அழைக்க வேண்டாம்'', — என்று மனத்துக்குள் படித்தாள்.

(தொடரும்)

விசுவாசமுடன் நடந்து கொள்ள வேண்டும்.''

பின்னால் மேற்குவங்கத்திலும் கர்நாடகத்திலும் ஆளுனராகப் பதவியில் உயர்ந்த தர்ம வீரா அன்றைக்கு அரசு யந்திரத்தில் ஓர் இளம் அதிகாரி. அவர், ஸி. ஆர். தம்மை எப்படி நடத்தினார் என்பதை நினைவு கூர்கிறார். ''இனிய சுபாவத்துடன் தந்தையைப் போன்று நடந்து கொண்டதன் மூலம் என்னையும் சகஜமாக இருக்கச் செய்தார். ஸி.



* அம்பேத்கார்

* பி.கே. ஷேத்



ராஜாஜி வாழ்க்கை வரலாறு III

ராஜ்மோகன் காந்தி

அரசியல் சாசனமும் சொந்தச் சோகமும் 10

பிரிட்டிஷாருக்குப்பிறகு இந்தியாவைப் பிரித்து ஆள்வதில் முஸ்லீம் லீகுக்கும், காங்கிரஸுக்கும் ஏற்பட்ட போட்டி காரணமாக நேரு, பட்டேல், ஸி. ஆர். ஆகியோரின் கவனங்கள் அந்தத் திசையில் திருப்பிவிடப் பட்டிருந்தன. அதனால் அமைச்சர்கள் என்ற முறையில் அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் தாமதப்பட்டன. போதாக்குறைக்கு ஸி. ஆரைப் பொறுத்தமட்டில் அவர் பதினொரு மாதங்களுக்குள் இரு தடவைகள் இலாகா மாற வேண்டியிருந்தது. முஸ்லீம் லீக் மந்திரி சபையில் இடம்பெற வசதியாக அவர் தொழில் துறையை விட்டுக் கொடுத்து, கல்வி அமைச்சரானார். பின்னர் அஸப் அலிக்குப் பதிலாக ஆஸாத் வந்து சேர்ந்த போது, ஆஸாத்துக்கு விருப்பமான கல்வித் துறையை அவருக்கு அளித்துவிட்டு, மீண்டும் தொழில் மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகத்தைக்கவனிக்கலானார். இதனாலெல்லாம் காரியங்கள் சற்றுத் தாமதப்பட்டுப் போனாலும் சுதந்திர இந்தியா அதிகாரிகளிடம் எத்தகைய நிர்வாகத்தை எதிர்பார்க்கிறது என்பதை வலியுறுத்துவதில் அவர் சிறிதும் தாமதம் பண்ணவில்லை! ''அரசுக்காகப் பணியாற்றும் விஞ்ஞானிகளும் அதிகாரிகளும் அரசியல்வாதியின் — அவர் எவ்வளவு பிரபலமானவராக, செல்வாக்குடையவராக இருந்தாலும் சரி — விருப்பு வெறுப்புகளுக்கு அடிபணிந்து போகக் கூடாது'' என்று கூறினார் ஸி. ஆர். ''அவர்கள் விஞ்ஞானத்துக்கும் சத்தியத்துக்கும் மட்டுமே

ஆரைச் சந்தித்து உரையாட வேண்டிய தருணங்கள் கிளர்ச்சியூட்டுவனவாகவும் அதே சமயம் பாடம் போதிப்பனவாகவும் இருந்தன. தமக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகள் தங்கள் கருத்துக்களை அச்சமின்றி வெளியிட ஊக்குவித்தார். அவர்களுடன் தாம் ஒத்துப் போகவில்லையென்றால் அவர்களை வற்புறுத்தியோ அல்லது அச்சுறுத்தியோ கருத்தை மாற்றிக் கொள்ளச் செய்ய மாட்டார். மாறாக விவாதம் மூலமாகவும் காரண காரியங்களை விளக்குவதன் மூலமாகவும் அவர்களுக்குத் தம்முடைய கருத்தில் நம்பிக்கை பிறக்கச் செய்வார்.''

நிர்வாகப் பொறுப்பில் இருந்த பல பிரிட்டிஷ் அதிகாரிகள் கப்பலேறிக் கொண்டிருந்தார்கள். இந்தியாவில் அவர்களுக்கு நிர்வாகப் பொறுப்பில் எதிர்காலம் இருக்கிறது என்று அவர்களில் சிலரையேனும் நம்ப வைக்க ஸி. ஆர். பிரயாசைப்பட்டார். ஆனால் இதில் அவரால் வெற்றி பெற முடியவில்லை. அவர்களில் ஒருவரான லாமார்க் எழுதுகிறார்: ''இன்று என் அமைச்சரான ராஜகோபாலாச்சாரியிடம் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தேன். இந்திய ராஜதந்திரிகளிலேயே மிகவும் அறிவாளியானவர், அன்பானவர் அவர்தான். நான் இந்தியாவில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அவர் அறிவுரை வழங்கினார். நான் மனம் திறந்து பேசினேன்: 'உங்களுக்குக் கீழேயே தொடர்ந்து வேலை செய்து கொண்டிருப்பதானால் சரி. இங்கேயே தங்கி இருக்க நான்,



"ஆபீஸில் யாராவது சுகமாத் தூங்கிறு எங்க மானேஜருக்குக் கோபம் வந்து கன்னு பின்னுன்னு திட்ட ஆரம்பிச்சுடுவார்!"

"அவ்வளவு கண்டிப்பானவரா?"

"அட நீ ஒண்ணு! பகலில் அவருக்குத் தூக்கமே வராதாம். அந்த வயிற்றெரிச்சல்தான்!"

— மணியன் தர்மலிங்கம்.

தயார். ஆனால் நாளை நீங்கள் வேறு துறைக்கு மாறிவிடலாம். உங்களிடத்தில் ஒரு புதிய "ராஜா" வருவார். என் எதிர்காலம் நிச்சயமற்றதாகிவிடும்.'"

கல்வி அமைச்சு ஸி. ஆரிடம் இரண்டு மாதங்களுக்கு மட்டுமே இருந்தது. அதிகமாக ஒன்றும் செய்துவிட முடியவில்லை. ஆனால், 'பள்ளிக் குழந்தைகளின் வாழ்க்கையில் பாட்டும் நடனமும் இடம் பெற வேண்டும்' என்ற தமது விருப்பத்தை அவர் வெளியிட்டார். 'பல்கலைக் கழகங்களில் இந்திய மொழிகளில்போதிப்பது சாத்தியமே' என்று தமது கருத்தைத் தெரிவித்தார். 'இந்தியா தொன்மையான இலக்கியங்களையும் பண்பாட்டினையும் பெற்றிருந்த போதிலும் சரித்திரச் சான்றுகளைப் பாதுகாப்பதிலும் மெய்யான சரித்திரத்தை எழுதுவதிலும் மிகவும் பின்தங்கி அலட்சியப்படுத்திவிட்டது' என்றார். கிளைவ் சாலையில் ஸி. ஆரின் பக்கத்து வீட்டுக்காரராக இருந்தவர் பி.கே. நேரு. இவர் பின்னால் ஆளுனராகவும், அமெரிக்காவில் இந்தியத் தூதராகவும் விளங்கியவர். அன்றைய அரசில் ஓர் இளம் உயர் அதிகாரியாக இருந்தார். அவர், "புத்திசாலிக் குழந்தைகளுக்கு அவர்கள் திறமைகளை மேலும் வளர்க்கப் பிரத்தியேகமான சிறப்புப் பள்ளிகள் உருவாக்கப்பட வேண்டும்" என்றார். ஸி. ஆர். புன்னகையுடன் பதிலளித்தார்: "இளைஞனே! நீ ஒரு புதுவிதமான பிராமணத்துவத்துக்கு வழி வகுக்கப் பார்க்கிறாய்! இந்த நாடு அதனை ஏற்றுக் கொள்ளாது. இந்தியா சமத்துவத்தைக் கோருகிறது; உன்னதத்தை அல்ல!"

தொழிலமைச்சர் என்ற முறையில் அவர் சொன்னார்: "மகாத்மாவின் ஆன்மீக வழிகாட்டலை நாங்கள் விரும்பி ஏற்றிருேமே யொழிய காந்தியோ அல்லது நாங்களோ இந்தியா தொழில் மயமாவதற்கு எதிரிகள் அல்ல."

அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தினர்கள் புத்தகத்தில் முதல் கையெழுத்து ஸி. ஆருடையதுதான். ஆனாலும் அந்தச் சபையின் விவாதங்களில் ஸி. ஆர். அதிகமாக ஈடுபடவில்லை. அமைச்சர் பதவியும் இதர பல பொறுப்புக்களும் அவரைச் சபை நடவடிக்கைகளில் அதிகமாகப் பங்கேற்க முடியாமல்செய்துவிட்டன. ஆனால் அரசியல் சட்டத்தின் முக்கியமான ஷரத்துக்களை உட்குழு கூடி விவாதித்தபோது அவர் அதில் தீவிரமாக ஈடுபட்டார். காங்கிரஸை நீண்ட காலமாக எதிர்த்து வந்த அம்பேத்காரை சட்ட அமைச்சராக்கியது ஸி. ஆரின் யோசனையின் பேரில்தான். இதனால்தான் அரசியல் சாசன மசோதாவை அம்பேத்கார் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றி வைக்க முடிந்தது. மேலும், மாநில அதிகாரங்கள் எவை, மத்திய அரசின் அதிகாரங்கள் என்ன என்று தீர்மானிக்கும் கட்டத்தில் அரசியல் நிர்ணய சபையின் விவாதங்களில் ஸி. ஆர். தீவிரமாக ஈடுபட்டார்.

அமைச்சர் என்ற முறையில் ஸி. ஆர். மத்திய சட்ட சபையில்பேசியபோது இரண்டு அம்சங்கள் அவருக்குப் பெரிதும் உதவியதாக 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' எழுதியது. முதலாவது, அரசுத் தரப்பில் மற்ற எல்லாரையும்விட மைக்கில் பேசுவதற்கு ஏற்ற நல்ல குரல் ஸி. ஆருக்கு இருந்தது. இரண்டாவது அவருக்கு இருந்த சமயோசித அறிவு. இதனால் முக்கியமாக, துணைக் கேள்விகளுக்கு அவரால் சாதுர்யமாகப் பதிலளித்துப் பிரகாசிக்க முடிந்தது.

டிசம்பர் 1946ல் ஸி. ஆரை ஒரு சொந்தத் துயரம் தாக்கியது. அவரது இரண்டாவது மகன் ராமஸ்வாமி தமது நாற்பத்து மூன்றாவது வயதில் காலமாகிவிட்டார். ராமஸ்வாமி டாக்டராகத் தொழில் நடத்தி வந்தார். தந்தையின் சிறுகதைகள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். ஸி. ஆருக்கு ராமஸ்வாமியிடம் ரொம்பப் பிரியம். தனயனது மதி நுட்பத்தை மிக உயர்வாக மதித்து வந்தார். அறுபத்தெட்டு வயதான தந்தையின் உள்ளத்தில் இந்த மரணம் ஏற்படுத்திய காயம் மிக ஆழமானதாக இருந்தது. உற்சாகம் இழந்தார். குளியலறையில் அவர் அழுவதை நாமகிரியால் கேட்க முடிந்தது. சென்னைக்கு விமானமேறினார், ஸி. ஆர். விமான நிலையத்திலிருந்து வீடு வரும்வரை ஒரு வார்த்தை பேசவில்லை. வீட்டுக்கு வந்தவர் இரு அறைகளில் மகனின் தேகத்தைத் தேடினார். காணப்படவில்லை! தகனம் முடிந்துவிட்டிருந்தது! அவருக்கு அதுபற்றி யாருமே கூறாமலிருந்துவிட்டார்கள். ராமஸ்வாமியின் மரணம் ஏற்படுத்திய ஆழ்ந்த சோகம் ஒருபுறமிருக்க, ஸி. ஆரின் பொறுப்புக்களையும் அது அதிகரித்துவிட்டிருந்தது. ஐந்துகுழந்தைகளுடன் ராமஸ்வாமியின் மனைவி மாமனாரிடம் வந்து சேர்ந்தாள். நாமகிரி, நரசிம்மன் ஆகியோருடன் இவர்களும் ஸி. ஆரின் வீட்டில் அவர் நிழலில் இடம் பெற்றார்கள்.

(தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

எதிர்பார்ப்புகள்!

பேச்சு முடிந்து, செல்வநாயகம் மேடையை விட்டுக் கீழே இறங்கியவுடன், முதலில் கைகுலுக்கியது கார்த்திகாதான்!

''சார் நான் ஸ்தம்பிச்சிருக்கேன். பிச்சி உதறிட்டீங்க! திருக்குறள்ல உங்களுக்கு இவ்வளவு நாலெட்ஜா, ஓ...''

செம்மாந்த, மருதாணி பாவிய விரல்களை விலக்கிக் கொள்ளாமல், செல்வநாயகத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு அவள் பேசிய போது, செல்வநாயகத்துக்குச் சற்று குறுகுறுப்பாக இருந்தது.

கார்த்திகா —

அளவுக்கு மீறிய வளர்ச்சியில் பதினாறு வயதை இருபத்தாறாய் அனுமானிக்க விடும் ரகத்தில் செல்வநாயகத்தையே அடிக்கடி சபலப் பள்ளத்தாக்கில் தள்ளிவிட்டு வேடிக்கை பார்ப்பவள்.

எத்தனை பெரிய மனிதனும் சில நேரம் சில கேவல உணர்வுகளில் ஊசலாடாமல் மீண்டதில்லை. இன்று செல்வநாயகத்துக்குக் கார்த்திகாவின் கைகுலுக்கலும் பாராட்டும் அவள் தமது மாணவி எனும் மதிப்பான உறவு முறையை மீறி, எங்கேயோ கொண்டு போனது.

''சார்!''

மறுநாளின் மதியப் பொழுதில் கார்த்திகாவின் அந்த அழைப்பில் செல்வநாயகத்துக்குள் ஏகமாய் மயில்கள் தோகை விரித்தன.

''என்ன கார்த்திகா?''

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்...''

''கொஞ்சமென்ன நிறைய பேசு (டார்லிங்)'' —சப்தத்தில் கொஞ்சமும், மனத்துக்குள் டார்லிங்கையும் சொல்லி அவளை ஊக்கினார்.

''பெண் விடுதலை, பெண் சுதந்திரம், பெண்களின் கௌரவம்பத்தி, திருவள்ளுவர் உதவியோட நீங்க பேசின பேச்சுக்கள் பிரமாதம். சுருட்டு விளம்பரத்துக்குக்கூட பெண்ணோட திறந்தஉடம்புப் படங்களை, பயன்படுத்தற கேவலங்களை நீங்க சாடின விதம் சூப்பர்.

'இப்படி, எங்க சமூகக் கொடுமைகளுக்காக பாரதியைப் போல நீங்க காட்டிய ஆவேசங்களுக்கு என் நன்றி. ஆமாம், நீங்க ஏன் கல்யாணம் பண்ணிக்கலே?''

அவள் கேள்வியில் சற்று விச்ராந்தியாகச் சிரித்த செல்வநாயகம், பதிலுக்காகச் சற்றும் திணறாமல், ''உன்னை மாதிரி ஒரு அழகிய பெண்ணைச் சந்திக்காததுனாலதான்'' என்றார்.

கார்த்திகாவுக்கு, அந்தப் பதில் யதார்த்தமாகத்தான் பட்டதேயொழிய விரசமாகப் படவில்லை.

''என்னை அழகிங்கறீங்க. தாங்க்ஸ். எங்க அம்மாவைவிட ஒண்ணும் நான் அழகியில்லே...'' என்றாள் கார்த்திகா.

''இருக்கலாம் தாயைப் போலப் பிள்ளை. நூலைப் போல சேலை...''

''நான் ஒண்ணு கேட்பேன், தருவீங்களா?''

கார்த்திகாவின் அந்தக் கேட்பேனுக்குள், செல்வநாயகத்தின் எதிர்காலமே ஒளிந்திருப்பதுபோல், பரபரப்புத் தட்டி, அவரை வேகமாக உசுப்பியது.

''கேள் கார்த்திகா கேள். உனக்கு எதையும் இல்லேன்னு சொல்ற சக்தி தற்சமயம் என்கிட்ட இல்லே...''

''உங்களை மாதிரி ஒரு ஜீனியஸ்...
உங்களை மாதிரி ஒரு ஜென்டில்மேன்...
உங்களை மாதிரி ஒரு முற்போக்குவாதி...''

அடுக்கடுக்காய் அவரை நிஜமாலுமே சப்பரத்தில் ஏற்றிவிட்டுச் செல்வநாயகத்தின் கண்களில் ஊன்றினாள். அது தவித்துக் கொண்டிருந்தது.

''ஏன் நிறுத்திட்டே... உம், கமான்... தவிப்புத் தாங்காமல் வெடித்தன செல்வநாயகத்திடம் வார்த்தைகள்.

''எனக்கு அப்பாவா நீங்க வரணும். யெஸ், மை மதர் ஈஸ் எ விடோ! ஓர் ஆண் துணை இல்லாம என் குடும்பம் தவிச்சுக்கிட்டிருக்கு. உங்களைச் சந்திச்சதுக்குப் பிறகு, அந்தத் தவிப்பு குறைஞ்சிருக்கு. நான் கேட்ட வரத்தை உங்களாலே தரமுடியும். தருவீங்களா அப்பா... சாரி, சார்...''

கூனிக் குறுகிவிட்டிருந்த செல்வநாயகம், புனிதமான ஓர் உறவு முறைக்கு, அழைத்தழைத்து மிட்டுப் பழகிய அந்தப் பெண்ணைப் பார்க்கக் கூசிக் கொண்டு, அப்படியே நிலைமரமாக விதிர்த்துவிட்டிருந்தார்!

— இந்திரா சௌந்தர்ராஜன்





"உங்கள் சமுதாயப் பணியை வரவேற்கிறேன்!"

— கோவை மாவட்டக் கலெக்டர் பேட்டி!

(கோவை மாவட்டக் கலெக்டர் மு. அபுல்ஹசனை நாம் பேட்டி கண்டபோது, சம்பந்தப்பட்ட இலாகா தொடர்பான கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்காக அவருடன் முப்பதுக்கும் மேற்பட்ட ஆபீஸர்கள் உடனிருந்தார்கள். தத்தமது இலாகா தொடர்பான கேள்விகளுக்கு உடனடியாகப் புள்ளி விவரங்களுடன் பதில் சொல்ல வசதியாக ஒவ்வோர் ஆபீஸரும் தங்களுடன் இரண்டு மூன்று ஆபீஸர்களை பைல்களுடன் அழைத்து வந்து, பக்கத்து அறையில் காத்திருக்கச் செய்திருந்தார்கள்! பேட்டி ஆரம்பமானது.)

கல்கி: கடந்த 76 இல் சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடியின் போர்டு கலைக்கப்பட்டு, அரசின் கூட்டுறவுத் துறையில் சேர்க்கப்படுவதற்கு முன்பு சுமார் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு இருந்த ஃபிக்ஸட் டெபாசிட் தொகை திடீரென்று பன்னிரண்டு லட்சம் அளவுக்குக் குறைந்து போன காரணம் என்ன?

கலெக்டர் மு. அபுல்ஹசன், சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடியின் தனி அலுவலர் கே. நடராஜனைப் பார்க்க, அவர் பதில் சொல்கிறார்: குறைந்து போனது உண்மைதான். ஆனால் இப்போது இருபத்து நான்கரை லட்சமாக உயர்ந்திருக்கிறது. இன்னும் உயரும் என்று நம்புகிறோம்.

கல்கி: குறைந்து போனதற்கான காரணத்தைத்தான் கேட்கிறோம்!

தனி அலுவலர்: டெபாசிட் செய்திருந்தவர்கள் என்ன காரணத்தினாலோ திரும்ப வாங்கிக் கொண்டு விட்டார்கள்.

கல்கி: அதுதான் என்ன காரணம்? மக்கள் மத்தியில் சிந்தாமணி பற்றிய நம்பிக்கை குறைந்து போனதுதான் காரணம் என்று சொல்லலாமா?

தனி அலுவலர்: அப்படிச் சொல்ல முடியாது. இப்போது மூன்றரைக் கோடி அளவுக்கு விற்பனை உயர்ந்திருக்கிறது.

கல்கி: மில்லிலிருந்து முதல் தரம் — இரண்டாம் தரம் என்று பிரிக்கப்பட்டு வரும் வெவ்வேறு விலைகளுள்ள துணிகளையும் முதல் தரத்தின் விலை அளவுக்கே விற்கப்பட்டிருக்கிறதே, இது மக்களை ஏமாற்றுவதாக இல்லையா?

தனி அலுவலர்: அப்படியெல்லாம் இல்லை.

கல்கி: எங்களிடம் ஆதாரமிருக்கிறது. இது மட்டுமல்ல; சில துணிகள் வெளி மார்க்கெட்டில் விற்கப்படும் விலையை விடச் சிந்தாமணியில் அதிக விலைக்கு விற்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, டெரிகாட், கோத்தாரி 83645 என்ற துணி வெளி மார்க்கெட்டில் மீட்டர் ஒன்று ரூ. 25.50 க்கு விற்கப்பட்ட அன்று சிந்தாமணியில் ரூ. 32.20 க்கு விற்கப்பட்டிருக்கிறது!

தனி அலுவலர்: எங்கேயாவது இரண்டொரு தவறுகள் நடந்திருக்கலாம். அவையெல்லாம் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

கல்கி: தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. தவறு நடப்பதாக வெளியில் சொன்ன ஊழியர்களைத்தான் இதுவரை நீங்கள் டிஸ்மிஸ் செய்திருக்கிறீர்கள்!

தனி அலுவலர்: அது தொடர்பான விஷயம் நீதிமன்றத்தில் இருக்கிறது. எனவே அதுபற்றி நாம் இப்போது பேசுவது சரியல்ல.

கல்கி: சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்ட சூரியகாந்திப் பூ எண்ணெய் ஆலையில் இப்போது கடலை எண்ணெய் பிழிவதற்கு என்ன காரணம்?

தனி அலுவலர்: எதிர்பார்த்த அளவுக்குச் சூரிய காந்திப்பூ கிடைக்காததுதான் காரணம்.



கல்கி: இதையெல்லாம் ஆலை ஆரம்பிப்பதற்கு முன்பே யோசித்துத் திட்டமிட்டிருக்க வேண்டாமா?

தனி அலுவலர்: விவசாயிகள் திடீரென்று பயிர்களை மாற்றி விடுகிறார்கள். நாம் என்ன செய்ய முடியும்?

கல்கி: கடலை எண்ணெயும்—ஒரு நாளைக்கு ஐம்பது டன் கடலையைப் பிழிந்தெடுக்கும் திறன் கொண்ட அந்த ஆலையும் முழுத்திறனுடன் செயல்படாததற்கு என்ன காரணம்?

தனி அலுவலர்: அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் அப்படிச் செயல்படத் துவங்கிவிடும்.

கல்கி: அந்த ஆலைக்குத் தேவையான தண்ணீரை சப்ளை செய்யும் இடம், முன்பு மக்கள் மனமகிழ் மன்றமாக இருந்தது. அதைச் சிந்தாமணியின் செகரட்டரி ஒருவரே விலைக்கு வாங்கியிருக்கிறார். பிறகு அவர் சர்வோதயா சங்கத்திற்கு விற்றிருக்கிறார். அப்போது சிந்தாமணியே அதை விலைக்கு வாங்கியிருந்தால் இப்போது சர்வோதயாவிடமிருந்து தண்ணீரை விலைக்கு வாங்க வேண்டிய அவசியம் இருந்திருக்காதல்லவா? திடீரென்று சர்வோதயா தண்ணீர் தர மறுத்தால் என்ன செய்ய முடியும்?

தனி அலுவலர்: அவர்கள் மறுக்க மாட்டார்கள். காண்ட்ராக்ட் போட்டிருக்கிறோம்.

கல்கி: கோவை நகரிலுள்ள எல்லா ஆட்டோக்களிலும், மீட்டர் இருக்கிறது. ஆனால் யாரும் மீட்டர் சார்ஜ் வாங்குவதேயில்லை. மீட்டருக்குமேல் ஐந்து ரூபாயாவது கேட்கிறார்கள்!

கலெக்டர், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆர். வி. கோபாலனைப் பார்க்க அவர் சொல்கிறார்: அவ்வப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், அப்படிக் கேட்கப்படும் போதெல்லாம் பொது மக்களும் எங்களிடம் புகார் செய்யாமல் இருந்து விடுகிறார்கள். பொதுமக்கள் ஒத்துழைக்காத வரையில் எப்படி முழுமையாகத் தடுக்க முடியும்?

கல்கி: இதுபற்றிச் சில ஆட்டோ டிரைவர்களிடம் கேட்டபோது, 'நாங்கள் என்ன செய்ய முடியும்? ஒரு ஆட்டோவுக்கு பர்மிட் வாங்க வேண்டுமானால், ஆர். டி. ஓ. ஆபீஸில் நாங்கள் எட்டாயிரம் ரூபாய் லஞ்சம் தர வேண்டியிருக்கிறது. அதை யார் கேட்கிறார்கள்?' என்றார்கள்!

மண்டலப் போக்குவரத்து அலுவலர் லட்சுமணன்: அப்படியெல்லாம் இல்லை. அப்படிப் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கத் தயாராய் உள்ளோம்.

கல்கி: தமிழ்நாட்டிலேயே கோவை நகரில்தான் பிக்பாக்கெட் அதிகம் என்கிறார்கள்!

மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்: திருட்டு வழக்கிலும், கொள்ளை வழக்கிலும் பலரைக் கைது செய்து கொண்டுதான் இருக்கிறோம்; தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

கல்கி: கோவை மாநகராட்சி, தண்ணீர் வரிக்கான பில்களை அவ்வப்போது கொடுக்காமல் இரண்டுமூன்றாண்டுகளுக்குஒன்றாகச் சேர்த்துக்கொடுப்பதால், பிரச்னையாக இருக்கிறது என்கிறார்கள். பில்களும் தாறுமாறாக வருவதாகச் சொல்கிறார்கள்.

மாநகராட்சி ஆணையாளர் கே. கணேசன்: ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக அப்படிக் கொடுக்கப்பட்டது உண்மைதான். விரைவில் இனி இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, தண்ணீர் வராத சமயங்களில் பொதுமக்கள் குழாய்களைத் திறந்து வைத்திருந்தாலும், குழாய்களில் வரும் காற்றின் மூலமாகவும் மீட்டர் சார்ஜ் ஏறிவிடும். அதனால் தண்ணீர் வராத சமயங்களில் குழாய்களைத் திறந்து வைக்க வேண்டாம் என்றும் பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்கி: கோவை நகரப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் மூன்றும் பகுதி வேலைகள் எப்போது தொடங்கப்படும்?

மாநகராட்சி ஆணையாளர்: அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன.

கல்கி: கோவை மாநகராட்சிக் கழிப்பிடங்கள் காண்ட்ராக்டர்களுக்குவிடப்பட்டுவிட்டதால் அவர்கள் இருபது பைசாவிலிருந்து ஐம்பது பைசா வரை இஷ்டம் போல் கட்டணம் வசூலிக்கிறார்கள். இதற்கு என்ன நடவடிக்கை?

மாநகராட்சி ஆணையாளர்: பத்துப்பைசாவுக்கு மேல் வசூலிக்கக்கூடாது. அதற்குமேல் வசூலித்தால் உடனடியாக அவர்களின் காண்ட்ராக்டை மாநகராட்சி ரத்து செய்யலாம். பொது மக்கள்தான் இதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். மேலும் மாநகராட்சியே எடுத்து நடத்துவது பற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

கல்கி: கோவை தாலுகா ஆபீஸுக்குள் நிறுத்தப்படும் வாகனங்களுக்குக் கட்டணம் வசூலிப்பதாகச் சொல்கிறார்கள். பொதுப் பணித்துறை அப்படி யாருக்கேனும் காண்ட்ராக்ட் விட்டுள்ளதா?

கலெக்டர்: அப்படியா! உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: சாதாரணமாக எல்லா இடங்களிலும் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட கட்டடங்களாகட்டும், போடப்பட்ட சாலைகளாகட்டும் அல்லது சாக்கடை வசதிகளாகட்டும் எல்லாமே, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே படுமோசமான கதிக்குள்ளானதற்கு என்ன காரணம், காண்ட்ராக்ட் ஊழலா?

கலெக்டர்: குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

கல்கி: உதாரணமாகத் தளி கிராமத்திலுள்ள சாலைகள், சாக்கடைகள், நரசிபுரத்திலுள்ள மருந்தகக் கட்டடம்!

கலெக்டர்: விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: திருமூர்த்தி அணை அருகிலுள்ள அமணலிங்கேஸ்வரர் கோயில் சமணர்கள் கோயிலாகத்தான் இருக்கிறது. ஆனால் அதை இந்துக்களின் கோயில் என்று மக்கள் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அறியாமையா அல்லது பெரும்பாலான இந்துக்கள் மிகச் சிறுபான்மையினரான சமணர்களை ஆதிக்கம் செய்யும் ஒரு செயலா?

தொல்பொருள் ஆய்வுத் துறை பதிவு அலுவலர் பூங்குன்றன்: முன்பு சமணர்களாக இருந்தவர்கள் பிறகு சைவர்களாக மாறியிருக்கிறார்கள். அமணலிங்கேஸ்வரர் என்றுபெயர்மாற்றமும்செய்திருக்கிறார்கள். இதில் ஆதிக்கம் என்ற பிரச்னைக்கே இடமில்லை.

கல்கி: இந்து அறநிலையத் துறையின் கீழுள்ள அந்தக்கோயிலுக்குநாங்கள்சென்றிருந்தபோது, அங்கிருந்த அலுவலர்கள் எங்களைப் படமெடுக்கக் கூட அனுமதிக்கவில்லை. தல வரலாறு புத்தகம் கேட்ட போது 'ஸ்டாக் இல்லை' என்று சொல்லி விட்டார்கள். கட்டணம்வசூலித்துக்கொண்டு படமெடுக்கவும், தல வரலாற்றுப் புத்தகத்தை விற்கவும் அறநிலையத் துறை ஏற்பாடு செய்தால் வருமானம் கிடைக்குமல்லவா?

கோயில் நிர்வாக அதிகாரி வேலுச்சாமி: படமெடுப்பவர்களிடம் கட்டணம் வசூலிப்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ஆனாலும் தாராளமாகப் படமெடுக்கலாம். தல வரலாறு பற்றிய புத்தகத்தை மறுபடியும் பிரிண்ட் செய்யக் கொடுத்துள்ளோம். வந்ததும் கேட்பவர்களுக்குக் கொடுப்போம். நீங்கள் வந்தபோது நான் இல்லை. விவரம் தெரியாத மற்ற அலுவலர்கள் உங்களிடம் அப்படி நடந்து கொண்டது பற்றி வருந்துகிறேன். அதன் தல வரலாறு புத்தகத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறேன்.

கல்கி: பரவாயில்லை. முதன் முதலில் அதன் தல வரலாற்றை எழுதிய சுந்தரசாமிக் கவுண்டர் என்ற பெரியவரை நாங்கள் சந்தித்துப் பேசினோம். கடைசியில் அவர், "அது சமணர் தொடர்பான கோயிலாக இருந்தாலும் இந்துக்கள் சென்று வழிபட ஆரம்பித்து விட்டதால், ஒரு தல வரலாற்றை எழுதவேண்டியிருந்தது. அதனால்தான் எழுதினேன்!" என்பதை ஒப்புக் கொண்டு விட்டார்.

தொல்பொருள் அலுவலர்: மக்கள் நம்பிக்கையோடு கும்பிடுகிறார்கள். அதோடு அங்கே விநாயகர், முருகன் போன்ற கோயில்களும் இருக்கின்றன.

கல்கி: பொள்ளாச்சியிலுள்ள முனிசிபல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் மூவாயிரம் பெண்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மொத்தம் 52 வகுப்பறைகள் அவர்களுக்குத் தேவை. ஆனால் ஆறே ஆறு வகுப்பறைகள்தான் ஒழுங்கான முறையில் இருக்கின்றன. ஏன் இந்த அவலம்?

பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் கே. சந்திரசேகரன்: நகராட்சியில் நிதி வசதி இல்லாததுதான் காரணம். இப்போது அரசிடம் கடனாகப் பணம் கேட்டிருக்கிறோம். கிடைத்ததும் கட்டடங்கள் கட்ட உள்ளோம். விரைவில் வேலை துவங்கும் என்றும் நம்புகிறோம்.

கல்கி: கோவை மாவட்டத்திலுள்ள பல்லடம், உடுமலை தாலுகாக்கள் இன்று வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பரம்பிக்குளம் — ஆழியாறு வாய்க்கால்மூலம் ஆங்காங்கேயுள்ள குளம், குட்டைகளையாவது ஆண்டுக்கு ஒருமுறை நிரப்பினால் நிலத்தடி நீர் கிடைக்கும். அதன் மூலம் விவசாயம் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள்.

கலெக்டர்: முடிந்தவரை நாங்கள் இதைச் செயல்படுத்திக் கொண்டுதான் இருக்கி

றோம். இதோடு மாறுபட்ட பருவ காலங்களாலும் விவசாயம் பாதிக்கிறது. எங்களால் முடிந்ததைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

கல்கி: கணியூர் அருகிலுள்ள பொன்னுண்டாம்பாளையம் என்னும் கிராமத்தில் கடும் குடிநீர்ப் பிரச்னை. யாரும் கவனிக்கவில்லை. காரணம், அந்த ஊரின் ஒரு தெரு நீலகிரி பாராளுமன்றத் தொகுதி என்றால் அடுத்த தெரு கோவை பாராளுமன்றத் தொகுதியாக இருக்கிறது. அதேபோல்தான் பல்லடம், அவினாசி என்று இரண்டு சட்டசபைத் தொகுதிகளாகவும், மூன்று ஊராட்சிகளாகவும் சின்னாபின்னமாக ஒரே ஊர் பிரிக்கப்பட்டுக் கிடக்கிறது. அதனால்தான் யாரும் தங்களைக் கவனிப்பதில்லை. தங்களூரை ஒட்டு மொத்தமாகக் கணியூர் ஊராட்சியோடு சேர்த்தால் நல்லது என்கிறார்கள்.

கலெக்டர்: அந்தக் கிராமத்திற்கு அருகிலுள்ள செல்லப்பம்பாளையத்திலிருந்து குடிநீர் சப்ளை செய்ய உள்ளோம். கணியூர் ஊராட்சியோடு சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கிறோம்.

கல்கி: மேட்டுப்பாளையம் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திருப்பூரின் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின் கால்கோள் விழா கடந்த 13.12.83 இல் நடந்தும் இன்னும் வேலை துவங்கப்படாததற்கு என்ன காரணம்?

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியக் கண்காணிப்புப் பொறியாளர் டி. தாமோதரராவ்: இப்போது வேலைகள் துவங்கப்பட்டு விட்டன.

கல்கி: அது 90 இல்தான் முடியும். இப்போதுள்ள 10.75 கோடி ரூபாய்த் திட்டத்தின் மூலம் 1995 வரைதான் குடிநீர்ப் பிரச்னையைச் சமாளிக்க முடியும். அதாவது வேலை முடிந்து நான்காண்டுகள் வரைதான் பிரச்னை இல்லாமல் இருக்கும். பிறகு இதேபோல் குடிநீர்ப் பிரச்னைதான் என்கிறார்களே?

கண்காணிப்புப் பொறியாளர்: அது வெறும் வதந்தி. இப்போதுள்ள திட்டம் 2011 ஆம் ஆண்டுவரை போடப்பட்டுள்ள திட்டம்தான்.

கல்கி: திருப்பூரிலுள்ள ராஜாகுளம் எனும் சாக்கடை வாய்க்காலை மூடிச் சாலை போட்டால் போக்குவரத்து நெருக்கடி வெகுவாகக் குறையும் என்கிறார்களே?

திருப்பூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் கு. ஜெயகோபால்: உண்மைதான். அப்படியொரு திட்டம் எங்களிடம் இருக்கிறது.

கல்கி: திருப்பூரிலுள்ள அ. இ. மு. க. தலைமை அலுவலகம், எம். ஜி. ஆர்., மன்றம் ஆகியவை நகராட்சி சாலையை ஆக்கிரமித்தபடிதான் இருக்கின்றன என்கிறார்கள். இது போன்ற ஆக்கிரமிப்புகள் எப்போது அகற்றப்படும்?

கலெக்டர்: ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

கல்கி: வேறு எங்கும் இல்லாத அளவுக்குத் திருப்பூரிலுள்ள பள்ளி மாணவர்களிடம் அரசியலும், சினிமாவும் புகுந்திருக்கின்றன. பள்ளி மாணவர் தலைவர் தேர்தலில் 'விசைத்தறி ஆறுமுகம் ஆதரவு பெற்ற மாணவர்' என்றும், 'உடல் மண்ணுக்கு; உயிர் நதியாவுக்கு' என்றும் போஸ்டர்கள் அச்சடித்து வோட்டுக் கேட்கும் அவல நிலை. இதை அவசியம் தடுத்தாக வேண்டும்! இல்லையானால் எதிர்கால மாணவ சமுதாயம் வீணாகிப் போய்விடும்.

கலெக்டர்: மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சவுந்திரராஜனைப் பார்த்து: உடனடியாக இன்ஸ்பெக்ட் செய்து பாருங்கள். (அவர் 'நிச்சயம் செய்கிறேன்' என்று குறித்துக் கொள்கிறார்.)

கல்கி: திருப்பூர் பனியன் தொழிலின் உபதொழில்களான சாயத் தொழில் – பட்டறைகள் ஆகியவற்றின் கழிவு நீரை நொய்



பேட்டியின் போது உடனிருந்த ஆபீஸர்களில் ஒரு பகுதியினர்.

யல் ஆற்றில் கலந்து விடுவதால் கிணற்று நீர் பாதிக்கப்படுகிறது என்கிறார்களே?

கலெக்டர்: ஏற்கெனவே இதுபற்றிய புகார்கள் எங்களுக்கும் வந்திருக்கின்றன. நடவடிக்கை எடுக்கப் போகிறோம்.

கல்கி: செல்வராசபுரத்திலுள்ள கதிரி பஞ்சாலை மேல்நிலைப் பள்ளியில் எட்டாவது, ஒன்பதாவது படிக்கும் மாணவ, மாணவிகள் வாரத்திற்கு ஒருநாள் சுமார் இரண்டு மணிநேரம் அப்பள்ளி நிர்வாகத்திற்குச் சொந்தமான பஞ்சாலையில் வேலை செய்கிறார்கள். தொழிற்கல்வி நல்லதுதான் என்றாலும் "அந்தச் சிறு வயதில் பஞ்சாலைக்குள் வேலை செய்வது நல்லதுதானா? நீங்கள் விசாரிக்க வேண்டும்.

கலெக்டர்: இதுவரை அது என் கவனத்திற்கு வரவில்லை. விசாரித்து ஆவன செய்கிறேன்.

கல்கி: மதுக்கரையிலுள்ள ஏ. சி. சி. சிமெண்ட் ஆலைப் புகையால் பல

கல்கி

கோகுலம்

மங்கையர் மலர்

ஆசிரியர் குழுவினர் மட்டும் புதிய முகவரியில் செயல்படுகின்றனர்:
28, ஐந்தாவது தெரு,
ஏரி வட்டம், நுங்கம்பாக்கம்,
சென்னை — 600 034.
போன்: 473369

மற்ற பிரிவினர் வழக்கம்போல்,
ரேஸ்கோர்ஸ் சாலை,
கிண்டி, சென்னை — 600 032.
என்ற முகவரியிலேயே செயல்படுகின்றனர்.

போன்: நிர்வாகம்: 431543
சர்க்குலேஷன்,
விளம்பரம்: 434157
அச்சகம்: 434190

கிராமங்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கலெக்டர்: இன்னும் சில மாதங்களுக்குள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து விடுவதாக நிர்வாகம் சொல்லியிருக்கிறது. எடுக்காவிட்டால் பிறகு நீங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

கல்கி: தமிழ்நாடு — கேரள எல்லையில் ஓடும் வாளையாற்றில் மணல் எடுக்க அரசு பர்மிட் ஏதும் கொடுத்துள்ளதா?

கலெக்டர்: அந்த ஆறு இரு மாநிலங்களுக்கும் சொந்தமானது. மணல் எடுப்பவர்கள் கேரள அரசிடம் பர்மிட் வாங்கி விடுகிறார்கள். இதுபற்றி நான் பாலக்காடு கலெக்டருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்கிறேன்.

கல்கி: அமராவதியிலுள்ள சைனிக் பள்ளியின் ஹாஸ்டல்கட்டணத்தை ஆண்டுக்காண்டு உயர்த்திக் கொண்டே வருகிறார்கள். தமிழக அரசிடம் உதவிப் பணம் பெற்றுப் படிக்கும் மாணவர்களுக்கான உதவிப் பணத்தை அரசு உடனடியாக உயர்த்துவதில்லை. அதனால் அந்த மாணவர்களுக்குப் பிரச்னையாக உள்ளது. அதனால் கடைசியில் மிலிட்டரியில் சேரும்போது வைக்கப்படும் உடற்பயிற்சித் தேர்வில், சரியான உணவு உண்ணாததால் தமிழக மாணவர்கள் தோற்றுப் போகிறார்கள். இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

கலெக்டர்: உடனடியாக விசாரிக்கிறேன் ஆவன செய்கிறேன்.

கல்கி: சேரன் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்குத் தவணை முறையில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில், அதில் டிரைவராகப் பணியாற்றிய த. நா. ராமதாசன் என்பவர் சேர்ந்திருக்கிறார். அவர் ஓய்வு பெறும் வரை ரூ. 8,487.50 கட்டியிருக்கிறார். அவர் ஓய்வு பெற்றதும் மீதமுள்ள 31,899 ரூபாயையும் ஒட்டுமொத்தமாகக் கட்டினால்தான் வீடு ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவரால் முடியாததால் தவணை முறையில் சேரன் போக்குவரத்துக் கழகத்திலேயே பணியாற்றும் தமது மகனிடம் பெற்றுக்கொள்ளச் சொல்லியிருக்கிறார். அதற்கு முடியாதென்று சொல்லி விட்டார்களாம். இதில் மனிதாபிமானமும் நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லையே?

சேரன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் ஜெயராஜ்: விசாரித்து ஆவன செய்கிறேன்.

கல்கி: மருதமலைக்கு அருகிலுள்ள பாரதியார் பல்கலைக் கழக மாணவர்களுக்குக் காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் தான் சேரன் போக்குவரத்து பஸ் விடப்படுகிறதாம். இன்னும் அதிக சர்வீஸ்கள் விட வேண்டும் என்கிறார்கள்.

நிர்வாக இயக்குநர்: தேவையை அறிந்து ஏற்பாடு செய்கிறேன்.

கல்கி: திருப்பூரில் கடந்த 47 ஆம் ஆண்டு ஆகஸ்ட் பன்னிரண்டாம் தேதியன்று அருணாசல முதலியார் என்பவருக்கு ரூ. 70 க்கு வீட்டு மனை விற்ற வையாபுரி என்பவரே இப்போது அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டுள்ளார் என்றும், ஏழை நெசவாளியான' தம்மால் எதுவும் செய்ய முடியவில்லை என்றும் அருணாசல முதலியார் சொல்கிறார்.

கலெக்டர்: அருணாசல முதலியாருக்கு நீதி கிடைக்க ஆவன செய்கிறேன்.

கல்கி: கடந்த 82 இல் கிணற்று மோட்டார் பம்ப்செட் மின் இணைப்புக்கு மனுச் செய்தும் இன்னும் கிடைக்கவில்லை என்கிறார் காளியப்ப கவுண்டர் என்பவர்!

கலெக்டர்: இதுவரை 80 ஆம் ஆண்டு வரைக்கும்தான் இணைப்புக் கொடுத்திருக்கிறோம். இனிதான் மற்றவர்களுக்குக் கிடைக்கும்.

கல்கி: கௌரிபாளையம் கிராமம் பீளமேடு புதூரில் கூலித் தொழிலாளர் குடியிருப்பைக் கடந்த 15.7.86 அன்று அப்புறப்படுத்திய போது மாற்று இடம் தருவதாக வாக்களித்தும் இன்னும் தரப்படவில்லையாமே?

கலெக்டர்: அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். விரைவில் தரப்படும்.

கல்கி: மேட்டுப்பாளையத்தின் அருகிலுள்ள லிங்காபுரம் கிராம விவசாயிகள் பவானி ஆற்றங்கரையோரம் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் வனத்துறைக்குச் சொந்தமான பாதையில்தான் தங்கள் நிலங்களுக்குச் சென்று வரவேண்டும். அப்படிச்



ஒருத்தரைப் போல் ஒருத்தர் நிறம் இருத்தல் இல்லை.

பொருத்தமளிக்க உமக்கென்றே 3 வித வண்ணச் சாயல்களில் வருவது லக்மே காலமைன் ஒன்றே.

நேச்சுரல்
—மாநிற
மேனியருக்கு

லைட்
—சிகப்பு
மேனியருக்கு

கோல்டு
—கருவண்ண
மேனியருக்கு



லக்மே காலமைன் ஒன்றுதான்
மூவித வண்ணச் சாயல்களில்
மோகனமாய் வருகுது:
நேச்சுரல், லைட், கோல்டு, இதில்
உமக்கொன்று சேர்த்தி,
ஒருங்கிணைய நேர்த்தி-எண்ணிலா
வண்ண மேனியரை இனம்பிரித்து
உணருதே லக்மே. இன்மணமுடன்
மேனிமீது இலகுவாய் இழையும்
லக்மே காலமைன் —தனிநிற
உரிமையைத் தருகுது உமக்கு.
பரிட்சார்த்தப் பேக்காகவும்
கிடைக்குது பதம்பார்க்க வசதியாக

லக்மே காலமைன்

சரும வண்ணம் எவ்வண்ணம
சாயலுண்டு அவ் வண்ணம்.

Tm

ஸ்ரீ ராகு பகவான் கோடி அர்ச்சனை

அ/மி. நாகநாதசுவாமி திருக்கோயில்
திருநாகேஸ்வரம் — 612 204. கும்பகோணம் வட்டம்.

கும்பகோணம் வட்டம் திருநாகேஸ்வரம் ஸ்ரீநாகநாதசுவாமி கோவிலில் ஸ்ரீ ராகு பகவான் தன் இரு தேவியருடன் தனிச் சன்னதிக் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார்.

ஸ்ரீ ராகு பகவான் பூஜித்து சிறப்பு பெற்ற இத்தலம் ராகு தோஷம், திருமண தோஷம், காலசர்ப்ப தோஷம், புத்திர தோஷம் நிவர்த்தி செய்து தனிச் சிறப்பு பெற்று விளங்கி வருகிறது. இப்பெருமானுக்குப் பால் அபிஷேகம் செய்தால்,

''...பால் நீல நிறமாவதை...''

பக்தர்கள் நேரே வந்து பார்க்கும் அற்புதமாகும். நாட்டில் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் ராகுதோஷம் நிவர்த்திக்கு வந்து பால் அபிஷேகம் செய்து பலன் பெறுகிறார்கள்.

உலக நன்மைக்காகவும், ஸ்ரீ ராகு பகவானுடைய அருளை வேண்டியும், அவர் திருவருளுடன் ஸ்ரீ ராகு பகவானுக்கு 27.7.86 முதல் கோடி அர்ச்சனை துவங்கி நடைபெறுகின்றது 10.10.86 அன்று 16 லட்சம் முடிந்து பிரதி தினமும் மாலை 6 மணிக்குத் தொடங்கி கோடி அர்ச்சனை நடைபெறுகிறது. தாங்களும் கோடி அர்ச்சனையில் கலந்து கொண்டு ஸ்ரீ ராகு பகவான் பேரருளைப் பெற வேண்டுகிறோம்.

1) கோடி அர்ச்சனைக்கு 1 க்குக் கட்டணம்	ரூ. 25
2) பால் அபிஷேகம் செய்யக் கட்டணம்	ரூ. 50

கோடி அர்ச்சனை செய்ய விரும்புவோர் ரூ. 25 எம். ஓ. அனுப்பி பெயர், நட்சத்திரம், கோத்திரம், முகவரி அனுப்பவும்.

கட்டணம் அனுப்ப முகவரி:
செயலாளர் & பொருளாளர்,
ஸ்ரீ ராகு பகவான் கோடி அர்ச்சனைக் குழு,
அ/மி. நாகநாதசுவாமி திருக்கோயில்,
திருநாகேஸ்வரம் — 612 204, கும்பகோணம் வட்டம், தஞ்சை ஜில்லா, தமிழ்நாடு.

விளம்பர உதவி: பாங்க் ஆஃப் தமிழ்நாடு லிமிடெட், திருநெல்வேலி.

திருப்பூந்துருத்தி ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள் டிரஸ்ட்

திருப்பூந்துருத்தி ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ''திருப்பூந்துருத்தி ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகள் டிரஸ்ட்'' நிறுவப்பட்டிருக்கிறது. இந்த டிரஸ்டுக்குத் தேவையான நிதி திரட்டுவதற்காக சென்னை ஸ்ரீ கிருஷ்ண கான சபை யில்கீழ்க்கண்ட இன்னிசை நிகழ்ச்சிகள் சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யர் அவர்கள் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

27.11.86......	ஸ்ரீ T. V. சங்கரநாராயணன்	— பாட்டு
	,, M. சந்திரசேகரன்	— வயலின்
	,, T. K. மூர்த்தி	— மிருதங்கம்
29.11.86......	,, லால்குடி ஜெயராமன் & விஜயலக்ஷ்மி	— இரு வயலின் இசை
	,, குருவாயூர் துரை	— மிருதங்கம்
30.11.86......	மாஸ்டர் U. ஸ்ரீனிவாஸ்	— மாண்டலின்
	குமாரி கன்யா குமரி	— வயலின்
	ஸ்ரீ ராஜாராவ்	— மிருதங்கம்
	,, T. H. விநாயகராம்	— கடம்

பொது மக்களும் ஆஸ்திக அன்பர்களும் சங்கீத ரசிகர்களும் இந்த டிரஸ்டுக்குத் தாராளமாகப் பொருளுதவி அளிக்க வேண்டுகிறோம். உங்கள் நன்கொடைக்கு 80—G விதிவிலக்கும் உண்டு.

T. V. ஸ்ரீனிவாஸன்,
N. V. சுப்ரமணியம்,
திருப்பூந்துருத்தி V. வெங்கடேசன்,

216, மோபரீஸ் ரோடு,
ஆழ்வார்பேட்டை, சென்னை — 600 018.
போன்: 450217.

செல்லும்போது வனத்துறையைச் சேர்ந்தவர்கள் அவர்களைத் தடுத்து லாரியாக இருந்தால் ஐந்நூறு என்றும், மாட்டு வண்டியாக இருந்தால் நூறு என்றும் லஞ்சம் வசூலிக்கிறார்களாமே?

மாவட்ட வனத்துறை அலுவலர் எம். தியாகராஜன்: எனக்கு இதுவரை இப்படியொரு புகார் வந்ததில்லை. வந்தால் நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருக்கிறேன்.

கல்கி: கோவைக் குற்றாலம் என்று சொல்லப்படும் அருவிக்குச் செல்லும் போது சிறிதுதூரம் வனத்துறைக்குச் சொந்தமான பாதையில்தான் செல்ல வேண்டும். அப்படி நுழையும் இடத்தில் வனத்துறையினர் கட்டணம் வசூலிப்பது எதற்காக?

வனத்துறை அலுவலர்: உள்ளே சந்தன மரம் போன்ற விலையுயர்ந்த மரங்களெல்லாம் இருக்கின்றன. அதனால் முடிந்த வரை மக்கள் நடமாட்டம்குறைவாக இருப்பதையே விரும்புகிறோம். அதனால்தான் கட்டணம் வசூலிக்கிறோம். அப்படி வசூலிக்கும் போது அநாவசியமான கூட்டம் குறையுமல்லவா!

கல்கி: எங்கள் சுற்றுப்பயண அனுபவத்தில் மக்கள் நடமாட்டம் அதிகமிருந்தால் தான் திருட்டு தடுக்கப்படும். திருடர்களுக்கும் ஒரு பயம் இருக்கும் என்று கருதுகிறோம். அதோடு உள்ளே செல்வதற்கு, கோர்ட் ஸ்டாம்ப் ஒட்டிய தாளில்தான் பர்மிஷன் கேட்க வேண்டும் என்கிறீர்கள். அந்த இடத்தில் கோர்ட் ஸ்டாம்ப் எப்படிக் கிடைக்கும்? இது ஆர்வமுள்ளவர்களைக் கூடத் தடுக்கும் முறையாகத்தான் உள்ளது.

வனத்துறை அலுவலர்: இனி கோர்ட் ஸ்டாம்ப் இல்லாமல் அனுமதி கொடுப்பது பற்றி ஆராய்கிறோம்.

கல்கி: ராதாமணி என்பவர் தாம் குடியிருக்கும் சத்தியமூர்த்தி நகரில் — தம் வீட்டிற்கு அடுத்த வீட்டில் வொர்க் ஷாப் நடைபெறுவதால் மிகவும் தொந்தரவாக இருக்கிறது என்கிறார்.

கலெக்டர்: காட்டேஜ் இண்டஸ்ட்ரீ என்று குடியிருப்புப் பகுதியில் அனுமதி வாங்கிவிடுகிறார்கள். ஆனாலும் ஐந்து குதிரைச் சக்திக்கு மேலான மோட்டாரை அங்கே உபயோகிக்கக் கூடாது. நீங்கள் சொல்லும் இடத்தைப் பார்வையிடச் சொல்கிறேன்.

கல்கி: வடவெள்ளி கிராமத்தை ஒட்டியுள்ள சூப்பர் கார்டன் அவென்யூ என்ற இடம் விட்டு மனைகள் கட்டிக் கொள்ள அனுமதிக்கப் பட்டுச் சிலர் வீடுகளையும் கட்டி விட்டார்கள். இப்போது வீட்டு வசதி வாரியம் தாங்கள் குடியிருப்புக்கள் கட்ட அந்த இடத்தையும் அதேபோல் சில இடங்களையும் காலி செய்யச் சொல்கிறதாமே! நியாயமா?

கலெக்டர்: இப்போது அவர்கள் 'ஸ்டே' வாங்கியுள்ளார்கள். அனுமதியோடு வீடுகள் கட்டப்பட்ட இடங்களை வீட்டு வசதி



"மன்னர், தளபதி, படை வீரர்கள் எல்லோரும் ஒரு சாண் நீளத்தில் மட்டுமே உறை வாள் வைத்திருக்கிறார்களே ஏன்?"

"அதுதான் சொன்னேனே, பக்கத்து நாட்டுடன் நடந்த 'ஆயுதக் குறைப்பு' பேச்சு வார்த்தை வெற்றி பெற்றுவிட்டதென்று!"

— காடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

வாரியம் கேட்கக் கூடாது என்றுதான் நாங்களும் சொல்கிறோம். அதனால் யாரும் கவலைப்படத் தேவையில்லை.

கல்கி: பரம்பிக்குளம் — ஆளியாறு திட்டம் போல புன்னம்புழா — பாண்டியாறு திட்டத்தையும் நிறைவேற்றினால் கோவை மாவட்டத்திற்குப் பாசனப் பிரச்னையே இருக்காது என்கிறார்களே?

கலெக்டர்: அது தமிழ்நாடு — கேரளா என்று இரண்டு மாநிலங்கள் தொடர்பானதாக இருப்பதால் அதுபற்றி அரசாங்கம் தான் முயற்சி எடுக்க வேண்டும். நாங்கள் எதுவும் செய்ய இயலாது.

கல்கி: மிக்வும் நன்றி. நாங்கள் இதுவரை சுற்றுப் பயணம் செய்த ஒன்பது மாவட்டங்களில் இந்த மாவட்டத்தில்தான் தாய் — சேய் நல விடுதி செயல்படுவதையும், குக்கிராமங்களிலுள்ள மருந்தகங்களில் கூட டாக்டர்கள் வந்து போவதாக மக்கள் சொன்னதையும் பார்த்தோம். உங்களைப் பற்றியும் மக்களிடம் பரவலானதொரு நல்ல அபிப்பிராயமே நிலவுகிறது. மேலும் தமிழகத்திலேயே கோவை மாவட்டம்தான் குடும்பக்கட்டுப்பாட்டில் முன்னணியில் இருப்பதாக அறிகிறோம். ஒருவேளை கு. க. செய்வதற்கு மிகவும் கெடுபிடியாக ஆட்களைப் பிடிக்கிறீர்களோ?

கலெக்டர் (சிரிக்கிறார்): இல்லையில்லை. கு.க. செய்து கொள்ள வருபவர்களை ஒரு விருந்தாளி போலவே நடத்துகிறோம். அரசு கொடுக்கும் உதவித் தொகை அல்லாமல் அவர்களுக்கு முட்டை போன்ற போஷாக்கு உணவு வகைகளையும், பெண்களுக்குக் குங்குமச் சிமிழ், டிபன் காரியர் போன்றவற்றையும் எங்கள் அன்பளிப்பாக வழங்குகிறோம். அதுதான் மக்களின் கு.க. ஆர்வத்திற்குக் காரணம்.

கல்கி: அப்படியானால் மிக்க மகிழ்ச்சி.

கலெக்டர்: என்னைப் பற்றியும், எங்கள் மாவட்டம் பற்றியும் பெரும்பாலும் நல்லதோர் அபிப்பிராயத்தையே வெளியிட்ட உங்களுக்கு மிக்க நன்றி. நீங்கள் ரீ — விசிட் செய்ய வரும்போது முடிந்த வரை குறைகளே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு, நீங்கள் சுட்டிக்காட்டிய பிரச்னைகளுக்கு நடவடிக்கை எடுத்திருப்போம் என்று உறுதியளிக்கிறேன். உங்கள் சமுதாயப் பணியை வரவேற்கிறேன். நன்றி கூறுகின்றேன். வணக்கம். நன்றி.

நீங்கள் கேட்டவை — தராசு

* எஸ். மாணிக்கவாசகம், கோடிக்கரை.

? கொச்சினில் உள்ள ஒரு தெருவுக்கு, பி. டி. உஷாவின் பெயரை வைத்திருக்கிறார்களே?

! ஏதோ, பேட்டை ரவுடியின் பெயரை வைத்தது போலல்லவா கேட்கிறீர்கள். ஓட்ட ராணியின் பெயரை வைத்ததற்காகச் சந்தோஷப்படுங்கள். விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் கேரளத்துக்காரர்களைப் பாராட்டுங்கள்.

* ஆர். கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்.

? தலைவனுக்கும் தொண்டனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

! தொண்டன் தவறு செய்தால் கட்சியை விட்டே விலக்கப்படலாம். ஆனால், அதே தவறைத் தலைவன் செய்யும்போது, தொண்டன் அதை நியாயப்படுத்தியாக வேண்டும். அப்போது தர்ம, நியாயம் பேசினாலும் பணாலாக்கி விடுவார் தலைவர்!

* எம். இராஜேந்திரன், லால்குடி. *

? எம். ஜி. ஆர். அறிவித்தபடி அடுத்த ஆண்டில்மதுவிலக்கு அமலானால்சந்தோஷப் படுவீர்களா?

! இப்போது நடந்து கொண்டிருக்கும் பிராந்திக் கடைகளுக்கான லைசென்ஸ் வாங்கும் போட்டியையும் அவசரத்தையும் பார்த்துக் கொண்டிருக்கும் போதேவா உங்களிடமிருந்து இப்படியொரு கேள்வி? கள், சாராயக் கடைகளை மட்டும்தான் மூடப் போகிறார்கள். பிராந்தி, விஸ்கி... வகையறுக்களைக் குறைந்த விலைக்கே தரப் போகிறார்களாம். ஆக, ஏழை மக்களின் கடைசிச் சொட்டு ரத்தத்தையும் உறிஞ்சப் போகும் அரசின் இந்தக் கொள்கையால் நாம் எப்படி சந்தோஷப்பட முடியும் நண்பரே?

* ஜி. பாலகிருஷ்ணன், விசலூர்.

? அமைச்சர்பதவியைப்பறிப்பவர்எம்.ஜி. ஆர். ஆனால் அவரை எதிர்த்துப் பேசாமல், ஜெயலலிதாவைத் திட்டுகிறாரே காளிமுத்து? இது எதைக் காட்டுகிறது?

! டாக்டர் பட்டம் வாங்கியவராயிற்றே காளிமுத்து: அதனால்தான் அம்பை விட்டு விட்டு, எய்தவரைத் தேடிப் பிடித்துத் திட்டுகிறார்! இதை அவரே வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறாரே!

* எம். ஜி. சேகர், ஆண்டநல்லூர்.

? சீக்கிய மதத்தின் சிறப்பு என்ன?

! அவர்களுடைய குருத்வாராக்களில் இருக்கும் சுத்தமும், ஒழுங்கும், கட்டுப்பாடும் மற்ற மதத்தினர் பார்த்துக் கற்றுக் கொள்ளப்பட வேண்டியவை. அவர்களின் மதப்பற்றுபிரமிக்கவைக்கக்கூடியது. ஆனால், அநியாயங்களின் மீதும் அக்கிரமங்களின் மீதும் பாய வேண்டிய சிலரது துப்பாக்கிரவைகள், இப்போது அப்பாவிகளின் மீதும் தேச ஒற்றுமையின் மீதும் பாய்ந்து கொண்டிருப்பதுதான் கண்டனத்துக்குரியது. வருத்தத்திற்குரியது.

* சௌந்தர், நமசிவாயபுரம்.

? மக்களின் பிரதிநிதிகளாக, மக்களுக்காகச் சேவை செய்திடத்தானே அரசியல்வாதிகள் சட்டமன்றத்தில் நுழைகின்றனர். அப்படிப்பட்டவர்கள் கோஷ்டி சேர்த்து வாரிக பலப் பரீட்சை செய்வது என்ன நியாயம்?

! வாஸ்தவமான பேச்சுத்தான். ஆனால் வோட்டுப் போடும் போது இதைப் பலரும் கோட்டை விட்டு விடுகிறார்களே!

மதுவிலக்கு அமலானால் சந்தோஷப் படுவீர்களா?

* ஆர். கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்.

? சிங்கத்தின் கம்பீரம், நரியின் தந்திரம், புலியின் பாய்ச்சல், யானையின் நினைவாற்றல், உடும்பின் பிடி, எறும்பின் சுறுசுறுப்பு— ஆகியகுணங்கள் ஒருங்கே அமைந்த அரசியல்வாதி யார்?

! சிலந்தியின் விடா முயற்சியையும் சேர்த்துக் கொண்டே சொல்லலாம் நெப்போலியன் என்று. ஊழல் என்னும் கறை மட்டும் படியாமல் இருந்திருந்தால் சமீபத்திய தலைவர்கள் சிலரையும் கூறலாம்தான். என்ன செய்வது, ஓர் அண்டாப் பாலையும் ஒரு துளி விஷம் கெடுத்துவிடும் சக்தி வாய்ந்ததாயிற்றே!

* ஜெ. க்பிர்தௌஸ் இளவரசி, கோவை ஆத்துப்பாலம்.

? தன் தொகுதிக்குப் போகாத அமைச்சர் நெடுஞ்செழியன் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! தொகுதிக்குப் போகும் சமயத்தில் சென்னையில் என்ன நடந்து தொலைக்குமோ என்கிற பயமாயிருக்கும். பாவம்!

* என். சீத்தாலட்சுமி, விழுப்புரம்.

? செங்கல்பட்டு மாவட்டத்துக்கு அண்ணா பெயரை வைக்க வேண்டும் என தி.மு.க.வினர் கோரிய போது, 'புதிதாக உருவாக்கப்படுகிற மாவட்டங்களுக்கு மட்டுமே புதுப் பெயர் வைக்க முடியும். ஆகவே செங்கல்பட்டு மாவட்டத்துக்குப் பெயரை மாற்றாமல், புதிய திண்டுக்கல் மாவட்டத்துக்கு அண்ணா பெயரை வைக்கிறேன்!' என்று கூறிய எம். ஜி. ஆர்., இப்போது நெல்லை மாவட்டத்துக்கு, 'நெல்லை — கட்டபொம்மன் மாவட்டம்' என்ற புதுப் பெயரை அறிவித்து, அவர் வார்த்தையையே அவர் மீறிவிட்டாரே?

! ஏதோ இந்த ஒன்றை மட்டும்தான் அவர் மீறிவிட்டதாக நினைத்து நீங்கள் இப்படிப் புலம்புவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.



° தெருப் பெயர்



° எய்தவர்

* மு. மதிவாணன், அரூர்.

? கையேந்தி பவனில் சாப்பிட்ட அனுபவம் உண்டா?

! சிறந்ததும் சிக்கனமானதும் வீட்டுச் சாப்பாடுதான் என்றாலும், வேறு வழியின்றிக் கையேந்தி பவன்களில் சாப்பிட்ட அனுபவங்கள் ஏராளமாக உண்டு. இது போன்ற கையேந்தி பவன்கள் மட்டுமல்ல; பல ஹோட்டல்களில் சாப்பிடுவதே சுகாதாரக் கேடான விஷயம்தான். அப்படியிருந்தும், சிலர் குடும்பத்தோடு ஹோட்டலுக்கு வந்து, சிறுசிறு குழந்தைகளையும் டைனிங் டேபிளில் உட்கார வைத்து ஹோட்டல் பலகாரங்களை ஊட்டிக் குழந்தைகளின் சுகாதாரத்தையே கெடுத்துக் கொண்டிருப்பதுதான் கோபத்தை வரவழைக்கிறது.

* ஆர். அரிகோபி, குடியாத்தம்.

? மறைந்த சோமலெயிடம் தங்களைக் கவர்ந்த அம்சம் எது?

! எதையும் நுணுகி ஆராய்ந்து எழுதியவர். அவருடைய பல அரிய தகவல் நூல்களில் 'செட்டி நாடும் செந்தமிழும்' என்பது ஒன்று. அதில் பலரைப் பற்றியும் எழுதித் தலையணை அளவுக்குப், புத்தகம் போட்ட அவர், தம்மைப் பற்றி ஒரு வார்த்தை கூட எழுதிக் கொள்ளாத அடக்கம் என்னை இன்னமும் வியக்க வைக்கிறது. அவர் மறைந்த சமயத்தில், 'அவர் தமது தேவைகளையும், ஆசைகளையும் குறைத்துக் கொண்டதால்தான், தமக்குச் சரி என்று பட்டதைத் தைரியமாகச் சொல்லவும் செயல்படுத்தவும் முடிந்தது' என்று ஆர். எம். வீரப்பன் சொன்னார். இதைவிடவும் உண்மையான, சுருக்கமான, சிறந்த பாராட்டு வேறு இருக்க முடியாது.

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
எம். ராஜேந்திரன்,
19, சன்னதி தெரு,
லால்குடி — 621 601.



° அவர்?



° விடாமுயற்சி



° வியக்க வைத்தவர்

டெக்னிக் கலர், ஈஸ்ட்மென் கலர் துரோகங்கள்!

* நெல்லை வாக்காளர்களுக்குப் பச்சைத் துரோகமா? இதெல்லாம் என்ன சார் துரோகம்? நம் ஜனங்கள் அரசியல்வாதிகளின் டெக்னிக்கலர், ஈஸ்ட்மென் கலர் துரோகங்களுக்கெல்லாம் பழகிப் போனவர்கள் சார்!

திருத்துறைப்பூண்டி. டேவிட் ஜான் பிரிட்டோ.

* 'நீக்கப்படாத மந்திரிகள் எல்லோரும் ஊழலற்றவர்களா?' என்ற வாசகரின் கேள்விக்கு, தராசுவின் பதிலைக் கண்ட எனக்கு வந்த வெடிச் சிரிப்பு அடங்கப் பல நிமிடங்களாயிற்று! நேரத்திற்கேற்ப, வாசகர்களைச் சிரிக்க வைப்பதில் தராசு சார், பழு கில்லாடியாக இருப்பார் போலிருக்குதே?

திருச்சி — 20. ஆர். அப்துல் சலாம்.

* புதுக்கவிதைப் போட்டிக்கு ஏற்றவாறு இந்த இதழில் மேலட்டைப் படம் புதுமையாக மிளிர்ந்திருந்தது. அழகான அட்டைப்படங்களை அருமையாக செலக்ட் செய்து போடுவதற்காக உங்களுக்கு அவார்ட் தரலாம் போலிருக்கே!

பெங்களூர் — 25. கே. ஜி. எஸ். பழனிச்சாமி.

* பாட்டி சொல்லும் படக்கதைகள்... என்ற தலைப்பில் சினிமா விமர்சனங்கள் படுசுவாரசியமாக இருந்தாலும் எங்களை என்ன பாப்பாக்கள் என்று நினைத்து விட்டீர்களா?

'எங்களையும் வாழ விடுங்கள்' படத்தைப் பற்றிய சிறப்பான கட்டுரை தாமதமாக வந்தாலும் தரமாக இருந்தது.

அயன்புரம். த. சத்தியநாராயணன்.

* 'ஆக்ரோஷம்' போன்ற மோசமான படங்களுக்கெல்லாம் விமர்சனம் எழுதி எங்கள் பொறுமையைச் சோதிக்க வேண்டாம்!

குடியாத்தம் — 2. கே. பட்டாபிராமன்.

* போராளிக் குழுவினரிடையே உள்ள தகராறையும் அவற்றைச் சீராட்டும் கட்சிகளையும் பற்றி நன்கு எடுத்துரைத்தார் சந்திரகாந்தன். போதாததற்குப் போராளிக் குழுவின் தாக்குதல், ஒன்றுமறியா அப்பாவித் தமிழ் மக்கள் மீதும் நடந்து ஓர் உயிரும் போய்விட்டது! இதற்குப் பிறகும் அரசாங்கம் நிலைமையை உணர்ந்து, உடன் நடவடிக்கை எடுத்து, இலங்கை வாழ் தமிழக மக்களுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டக் கூடாதா?

மன்னார்குடி — 1. வி. அமிர்தலிங்கம்.

* அடிமையாக்கிக் கொடுமைப்படுத்தும் முதலாளிகளின் கொட்டங்களை அடக்கத் தொழிலாளர்கள்— யூனியன் தலைவர்கள் செயல்பட்டால்தான் முடியும். நண்பர்கள் நான்கு பேரையும் மீட்ட யூனியன் தலைவருக்குப் பாராட்டுக்கள்.

நல்லம். ஆர். மைதீன்பாட்சா.

* நடுப்பக்கக் கனவுகளில் எல்லாவற்றையுமே ஆளுங்கட்சிக்காரர்கள்தான் காண வேண்டுமா? எதிர்க்கட்சிகளுக்குக் கனவு விஷயத்திலுமா ஓர வஞ்சனை?

புளிவலம். கே. ரெங்கராஜன்.

* 'சிரித்தாலும்' எனும் தலைப்பில் வெளியாகியிருந்த கவிதைத் தொகுப்பு என்னைச் சிந்திக்கவும் வைத்துவிட்டது! சில போலிகளை வெளிக் கொணர வரையப்பட்ட அற்புதமான கவிதைக் குவியல்!

குடியாத்தம் — 2. ஆ. சரவணன்.

* 'குழந்தையின் சிநேகம் — அது இரயில் சிநேகமாயிருந்தாலும் சூதுவாதில்லாதது. புனிதமானது' என்பதை ஒரே பக்கத்தில் உணர்த்திய சிறுகதை நெஞ்சத்தை நெகிழ வைத்தது.

சென்னை — 16. அர. மணிவண்ணன்.

* தஞ்சை திருமாரின் கட்டுரையில் காங்கிரஸ் தலைவர்களின் கோஷ்டிப் பூசல் பற்றித் தரப்பட்டுள்ள தகவல்கள் ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டனும் வெட்கப்படும் வண்ணம் உள்ளது. ஓர் அகில இந்தியக் கட்சியின் நிலை இப்படியா இருக்க வேண்டும்?

ராஜபாளையம். கே. கே. ராம்ராஜ்.

* 'ஒரு சோகக் கதை' எனும் தலைப்பிட்டு விட்டு, படு தமாஷான சிறுகதையை அளித்துள்ளாரே கடுகு!

தஞ்சாவூர். அ. சம்பத்.

* 'டூப்ளிகேட் தாஜ்மஹால்' செய்தி இரண்டு வாரங்களுக்கு முன்பே ஒரு வாரப் பத்திரிகையில் வெளியாகிவிட்டது!

தொப்பம்பட்டி. செ. அன்புமதியழகன்.

* அட்டைப் படப் பெண்ணின் கைரேகை விழும் அளவிற்கு மிகத் துல்லியமாகப் படம் எடுத்த புகைப் படக்காரரைப் பாராட்டுகிறேன்.

அரிமழம். ஒளியவன்.


Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032.

Assistant Editor: P.S. Mani Editor: K. Rajendran,

Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034. (Phone: 473389)

Administrative Office: Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)

அபார பலம்.
'காம்பிடான்' பலம்.



அந்த அற்புத உறுதியை உங்கள் வீட்டுக்கு அளிக்கிறது ராம்கோ சிமெண்ட்.

காம்பிடான் மில் மூலம் அற்புத உறுதி ஊட்டப்பட்ட சிமெண்ட் : ராம்கோ.

மிக உறுதியான சிமெண்டை உற்பத்தி செய்ய அதி நவீனமான, மிகச் சிறப்பான கிரைண்டிங் இயந்திரமாகிய ''காம்பிடான் மில்லை''த் தென்னகத்திலேயே முதன் முதலாக அமைத்தது — மதராஸ் சிமெண்ட்ஸ் தான்.

அத்தோடு, அல்லும் பகலும் கச்சாப் பொருள் களையும், தயாரான சிமெண்டையும் இடை விடாது கடும் பரிசோதனை செய்ய 'எக்ஸ்ரே அனலைசர்' எனும் அதி நவீன உபகரணம்.

ஆகவே, என்றென்றும், அற்புத உறுதி கொண்ட காம்பிடான் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது.

மற்றெவரிடமும் இல்லாத தனிச் சிறப்பான தொழில்நுட்ப மேம்பாட்டால் ராம்கோ சிமெண்ட் அபார பலமும், சிறப்பான இறுகும் சக்தியும் கொண்டதாகத் திகழ்கிறது.

ஆம்! சிக்கனமான செலவில், சிறப்பான பலம்மிக்க கட்டிடங்களை அமைக்க ராம்கோ சிமெண்டையே உபயோகியுங்கள்.

நாணயமான எடை, நம்பிக்கையான தரத்திற்கு நிகரில்லாத பெயர்.



MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

ராம்கோ சிமெண்ட்

– அபார பலமும், அற்புத உறுதியும் கொண்ட 'காம்பிடான்' சிமெண்ட்.

தயாரிப்பாளர்கள் :
மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்
ராமசாமிராஜா நகர் 626 204
(காமராஜர் மாவட்டம்)

சணல், பாலித்தீன், மற்றும் காகிதப் பைகளிலும் கிடைக்கிறது.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka